
# கவிஞர்
# செபமாலை மொத்தம் போல் கவிதைகள்



8111

Class No 894.8111
Acc No:
REF

894.8111 / 4422



கவிஞர் செபமாலை மொத்தம் போல்

1924 – 1982

# கவிஞர்
# செபமாலை மொத்தம் போல்
# கவிதைகள்

அன்பளிப்பு

பதிப்பாசிரியர்

மு. சுந்தரம் பாண்டியன்

# நூல் முகம்


நூலின் பெயர் : கவிஞர் செபமாலை மொத்தம் போல் கவிதைகள்

ஆசிரியர் : கவிஞர் செபமாலை மொத்தம் போல்

மொழி : தமிழ்

பொருள் : கவிதை

முதற்பதிப்பு : 2011

பதிப்பாசிரியர் : திரு.மு.சுந்தரம் பாண்டியன்

பக்கங்கள் : உச + 143



உரிமை : பதிப்பாசிரியர்



வெளியீடு : மன்னார் தமிழ்ச் சங்கம்

அச்சகம் : சென்.ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு

அட்டைப்படம் : திரு. இ. கிறிஸ்ரி

ISBN : 978 - 955 - 0682 - 00 - 3



தொடர்புகள் : திரு.மு. சுந்தரம் பாண்டியன்
186/B, எழுத்தூர்
மன்னார்.
0775385059



Class No 894.8111
Acc No: 44222

ஆயர் இல்லம்,
பட்டித்தோட்டம்,
மன்னார்.
28.03.2011.

"கவிஞர் செபமாலை மொத்தம் போல் கவிதைகள்" நூலுக்கு

# மன்னார் ஆயரின் ஆசியுரை

மன்னார் மாதோட்ட மண் கலைகளில் ஊறித்திழைத்த மண். தமிழின் சுவையுணர்ந்த பல நூற்றுக்கணக்கான புலவர்களையும், கவிஞர்களையும் இந்த நாட்டிற்கு வழங்கிய மண். இந்தப் புலவர் பெருமக்கள், கவி வல்லாளர்களில் சிலருடைய படைப்புக்களும், வரலாறுகளுமே இதுவரை ஆவணப்படுத்தப்பட் டுள்ளன. ஏனையவை அறியப்படாமல், வெளிச்சத்துக்கு வராமல் மறைந்து கிடக்கின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலையில் மன்னார் மாவட்டம் நறுவிலிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த அமரர் ஆசிரியர் செபமாலை மொத்தம் போல் அவர்களுடைய கவிதைகளின் ஒரு தொகுதி நூலுருவில் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடை கின்றேன். இந்த அரிய தமிழ்ப்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் எனது ஆசியையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

ஆசிரியர் மொத்தம் போல் அவர்கள் மாதோட்டத்தில் இனங்காணப்படக் கூடிய சிறந்த கவிஞர்களில் ஒருவர். இவர் பல்துறை வித்தகராகத் திகழ்ந்தார். கவிதை, நாடகம், வரலாறு, ஆராய்ச்சி, மருத்துவம் என இவர் பலதுறைகளில் ஈடுபாடு காட்டி வந்தார்.

மாதோட்டத்தின் கலை இலக்கிய வரலாற்றில் இவருடைய பங்களிப்பு மகத்தானது. இவருடைய படைப்புக்கள் அச்சுவடிவில் வராமையினாலும் உரிய முறையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படாமையினாலும் தமிழ் உலகம் அவருடைய முயற்சிகளின் பெறுமானத்தை உணர்ந்துகொள்ளவில்லை என்பதே உண்மை யாகும். அப்பெருங்குறையைப் போக்கும் சிறுமுயற்சியாக இந்நூல் அமைகிறது எனலாம்.

இக்கவிதை நூலில் அவருடைய கவித்துவ ஆற்றல் பளிச்சிடுகிறது. சொற்செறிவும், பொருள் ஆழமும், கற்பனை வளமும், அறநெறிக் கருத்துக்களும் நிறைந்ததாக அவருடைய கவிதைகள் விளங்குகின்றன.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் பெரும்பாலானவை சமயம் சார்ந்தவை. இக்கவிதைகளில் அவருடைய திருமறை அறிவும், திருவிவிலிய பரீட்சயமும், விசுவாச ஆழமும் நன்கு வெளிப்படுகின்றது.

தனது பிள்ளைச் செல்வங்களில் ஒருவரை இறைபணிக்காக அவர் அர்ப்பணித்துள்ளமை அவருடைய ஆழமான விசுவாச வாழ்வின் வெளிப் பாடாகும். மன்னார் மறைமாவட்டத்தில் நற்பணியாற்றிவரும் அருட்பணியாளர் பீற்றர் மனோகரன் மொத்தம் அவர்களே அன்னாரின் புதல்வராவார்.

திரு. மொத்தம் போல் ஆசிரியர் அவர்கள் இறையடி சேர்ந்து 29 ஆண்டு களுக்குப் பின்னர் அவருடைய எழுத்துக்களில் சில அச்சேறுவதற்கு வழிசமைத்த வர்களை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

மொத்தம் போல் ஆசிரியரின் மாணவர்களில் ஒருவராகிய ஆசிரியர் மு.சுந்தரம் பாண்டியன் அவர்கள் இந்நூலாக்க முயற்சியைப் பொறுப்பேற்று இந்நூல் வெளிவர முன்னின்று உழைத்துள்ளார். தன் குருவுக்கு அவர் செய்யும் சிறந்த நன்றிக்கடனாக இது அமைகின்றது. அவருக்கு எனது பாராட்டுக்கள். இந்நூலை வெளிக்கொணர்வதில் அக்கறையோடு செயற்பட்ட பதிப்பாசிரியர் மு.சுந்தரம் பாண்டியன் அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் வழங்கிய மன்னார் தமிழ்ச் சங்க தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரையும் நான் பாராட்டுகின்றேன். தேடுவாரற்றுக் கிடந்த தம் அன்புத்தந்தையின் அரிய இலக்கியச் சொத்துக்களை அச்சுவாகனம் ஏற்ற நிதியை வழங்கி முயற்சிகளை மேற்கொண்ட ஆசிரியர் மொத்தம் போல் அவர்களின் பிள்ளைகளையும் நான் வாழ்த்துகிறேன்.

மாதோட்டத்தின் பட்டிதொட்டியெங்கும் இதுபோன்ற பல அரிய இலக்கி யங்கள் ஏடுகளாகவும், எழுத்துப் பிரதிகளாகவும் உள்ளன. இவை மறைந்தழியும் ஆபத்தில் உள்ளன. எனவே இந்த மண்ணின் கலைகளிலும், இலக்கியத்திலும், வரலாற்றிலும் ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்கள், நிதியுதவி வழங்கக் கூடிய நல்லுள்ளம் படைத்தவர்கள் இவற்றை அச்சுவாகனமேற்ற ஆவன செய்ய வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் நான் அன்புடன் வேண்டுகோள் விடுகின்றேன்.

இக்கவிதை நூல் வெளியீட்டின் ஊடாக ஆசிரியர் மொத்தம் போல் அவர்களுடைய தமிழ்ப் பணி, சமயப்பணி போன்றவை வெளிச்சத்துக்கு வருகின்றன. இவருடைய வழியில் இன்றைய இளம் தலைமுறையினர் தமது ஆற்றல்கள், திறமைகளைப் பயன்படுத்தி திருமறைக்கும் தமிழன்னைக்கும் பணிசெய்ய முன்வருவார்களாக!

அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
பேரருட்திரு இரா.யோசேப்பு ஆண்டகை
மன்னார் ஆயர்

# அணிந்துரை

கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்கள் அமரராகி இருபத்தொன்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. எனினும் அவரை மறந்துவிடாமல் அவருடைய கவிதைகளைத் திரட்டி திரு.மு.சுந்தரம் பாண்டியன் நூலாக வெளியிடுகிறார். 1970 தொடக்கம் 1982இல் அமரராகும் வரை கவிஞர் போல் கவிதைகள் எழுதியுள்ளார். அவர் எழுதிய 80 கவிதைகள் இந்த நூலிலே பிரசுரமாகின்றன. ஆக்கவிலக்கியகாரர் என்றும் மரணிப்பதில்லை என்பதற்கு இந்தக் கவிதைத் தொகுப்பு சாட்சியாக அமைகின்றது.

கவிஞர் மொத்தம் போல் அவர்களுடைய கவிதைகளைப் படிப்பவர்கள் அவர் மிகுந்த இறைபக்தியுள்ள விசுவாசமுள்ள கிறிஸ்தவர் என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியதாயுள்ளது. ஆனால் அவர் வெறும் சமயவாதியாகப் பாடவில்லை. மனுக்குலத்துக்கு சமயவாழ்வு என்ன செய்யும் என்பதை உணர்ந்து பாடுகிறார். "தேடா மனுவில் வாழ்கிறார்" என்னும் கவிதையில்

தேவ வார்த்தை நற்செய்தி
தேடிப் படிக்க நேரமில்லை
தேவன் பற்றிப் பேசுகிறோம்
சிந்தைகொள்ள நேரமில்லை
தேவன் என்று முணுமுணுப்போம்
சிறியதருமம் செய்வதில்லை
தேவன் எங்கே வாழ்கின்றார்?
தேடா மனுவில் வாழ்கின்றார்

என்னும் பாடலைப் படித்துப் பாருங்கள். "கடவுள் உருவம் மனிதனடா காணுந் தெய்வ வடிவமடா" என்று அவர் கூறுவதை உணர்ந்துகொள்ளலாம்.

சமய நல்லிணக்கம் இக்காலத்திலே பெரிதும் பேசப்படுகின்றது. 29 ஆண்டுகளுக்கு முன்னர் அற்புதமான சமய நல்லிணக்கம் என்ன என்பதை கவிஞர் போல் தன்னுடைய கவிதைகளூடாகக் காட்டியுள்ளார். "மாண்புமிகு மாதோட்டம்" என்னும் கவிதையை ஒரு தடவை படித்துப் பாருங்கள். மாதோட்டத்தின் இயற்கை அழகை "மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பாடினார். இன்றைய மாதோட்டத்தின் அழகினை செந்தமிழ்ச் சொல்வளம் கொண்டு கவிஞர் போல் பாடுகின்றார். "கருதிடு தவத்தினப்பா கவுறடி இசிலாம் பள்ளி" பற்றிக் கூறும் கவிஞர்

ஆதிசிவ மாடவங்கை அனலே யாட
அரவ்மணி உடலாட அகிலமாடச்
சோதிவடி வானமதி சிகையே யாடச்
சுந்தரத்தா ளசைந்தாடத் தோடுமாடப்
பாதியுமை மங்கையொரு பாகனாகப்
பக்தருக்குக் காட்சிதரும் பரம ஞானி
ஆதியுறைந் தடியாரை அன்பு நோக்கும்
அருட்திருக்கே தீஸ்வரத்தை ஆட்கொண்டோனே.

என்று திருக்கேதீஸ்வரத்தையும்,

வத்தைகளும் வத்தகரும் மலிந்து தோன்றும்
மாந்தையெனும் மாண்புமிகு மாதோட்டத்தே
வத்திநிறை மலரிடையில் மகிமை யோடு
மறைவளர்க்கும் மருதமடு மாதா கோயில்
பக்தியருட் பக்தருக்குப் பசியை யாற்றிப்
பவநவமும் பொழிந்தருளிப் பாதுகாக்குஞ்
சத்தியத்தி னுண்மைநெறிச் சான்றாய் நிற்குந்
தவப்புனித செபமாலை சாந்தி யாமே

என்று மடுமாதா கோயிலையும் கவிஞர் மிக லாவகமாகக் குறிப்பிடுகிறார். மிகச் சிறந்த பக்திக் கவிஞராக இப்பாடல்களூடாக மொத்தம் போல் காட்சி தருகிறார். சமய நல்லிணக்கம் பற்றிப் பேசுபவர்களுக்கு இக்கவிதைத் தொகுதி சமர்ப்பணம்!

தமிழுக்குத் தொண்டு செய்த கத்தோலிக்க அறிஞர்களைப் பற்றியும் கவிஞர் பாடியுள்ளார். தவத்திரு தனிநாயகம் அடிகளார், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆகிய இருவரையும் மிகுந்த பக்தியுடனும் ஈடுபாட்டுடனும் பாடி யுள்ளார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவுக்குத் தலைமை தாங்க வேண்டிய சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை நேரத்துக்கு வரவில்லை. தனிநாயகம் பேசத்தொடங்கி விட்டார். இடையிலே வந்த தலைவர் சொன்னார்: "தனிநாயகம் பேசுவதென்றால் ஒரு சபாநாயகம் வேண்டியதில்லை". இதனை கவிஞர் போல்

முத்திநெறி பெற்றதனி நாயகத்தார்
முன்னவைக்கு நாயகமும் வேண்டுமாமோ?
இத்தனையும் சொல்லறிஞன் சொன்னா னென்றால்
இனிதமிழ் ஈழமகன் பெருமையன்றோ!

என்று நயமுடன் பாடுகின்றார். சுவாமி ஞானப்பிரகாசர் பற்றிய கவிதை யினைப் படிக்கும் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் அவருடைய வரலாற்றினை நன்கு அறியக்கூடியதாயிருக்கும்.

கவிஞர் போல் சாகாவரம் பெற்ற கவிஞராகிவிட்டார். அவருடைய கவிதைகளைப் படிப்பவர்கள் அக்கவிதைகளிலே கூறியுள்ளவற்றைப் பார்த்து வியப்படைவார்கள்; பரவசமடைவார்கள்; நல்ல கருத்துக்களை அறிந்து அறிவு பெறுவார்கள். அவருடைய கவிதைகளைத் திரட்டி இன்று வெளியிடுகின்ற திரு.மு.சுந்தரம் பாண்டியன் பாராட்டுக்குரியவர். அவருக்குத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது. கவிஞர் மொத்தம் போல் அவர்களுடன் எனக்குத் தொடர்பு உண்டென்பதும் அக்கவிஞனுக்கு தங்கப் பதக்கம் சூட்டும் பேறு கிடைத்தமையும் இறையருளேயாகும். இந்த கவிதை நூல் வெளிவரும்போது இறைவனுடனிருக் கும் அக்கவிஞனுடைய இலக்கிய நெஞ்சம் மகிழ்வடையும்.

பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
01.04.2011

THE PUBLIC LIBRARY
24 MAR 2012
BATTICALOA.

# வாழ்த்துரை

மறைந்தாலும் மறைக்கப்படாமல் நெஞ்சில் நிலை நிறுத்த நினைக்கும் ஏற்பாட்டாளர்களிற்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள் கின்றேன்.

மனித வாழ்வியல் காலத்தையும் சமுதாயத்தினுடைய மாறுபாடுகளை யும் காலத்தால் அழியாத கலைப் பொக்கிஷமாய் பதிவுசெய்யும் சொல்லாண்மை யின் வல்லாண்மையாளர்கள் இலக்கியவாதிகள்.

பிறக்கிற மனிதர்கள் இறக்கின்ற வரைக்கும் வாழ்வை பல கோணத்தில் நகர்த்துகிறார்கள். ஆனால் உயிர் உள்ளவரைதான் அவனுக்குண்டான உபதேச நர்த்தனங்கள் எனப்படுகிறது.

காற்றுள்ள வரைதான் காற்றாடி சுற்றும் என்பதுவே நிதர்சனம்,ஆனால் இறந்தாலும் இறவாமல் மீள்துயில் கொண்டெழுபவர்கள் எழுத்தியலாளர்கள் மட்டுமே.

உயிரோடு உலாவுபவர்களையே புறந்தள்ளுகின்ற இந்த உலகியலின் நடப்பியல் கோலத்தில் மறைந்த மூன்று தசாப்தமாகின்ற கவிஞர் செபமாலை மொத்தம் போல் என்பவரது படைப்புக்களை இன்றைய தலைமுறைக்கு அறி முகப்படுத்தும் திரு.மு.சுந்தரம் பாண்டியன் அவர்கள் மேன்மையான பாராட்டுக் குரிவரே.

எனவே இவருடைய கவிதைகள் நல்ல இலக்கியச் சுவையுடைய பண்பாட்டு தமிழியல் மரபு சார்ந்த படைப்புக்களாகக் காண்கிறேன்.

பல பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ள பெருங்கவிஞர் சகல துறைகளிலும் இலக்கிய உலகிற்கு பங்காற்றியுள்ளார் என்பது புலனா கின்றது.

இவருடைய நூல்வடிவம் பெறாத எழுத்தாக்கத்தையும் இலக்கிய நன் நோக்கங்களையும் வெளிக்கொணர முனைய வேண்டும்.

புதிய படைப்பாளர்கள் இவ்விதமான கருத்தாண்மையுள்ளவர்களின் படைப்புகளை நன்கே கற்றறிந்து தெளிவுற வேண்டும்.

வாழ்வு வளம் பெறுவதற்கும்
வரலாறு வலுப்பெறுவதற்கும்
வார்மைகள் பெருகுவதற்கும்
வரலாற்று நாயகர்களாம்
எழுத்தியலாளர்கள் பணி தொடரட்டும்
சமுதாயம் மனமாற்றமடையட்டும்
சமதர்மம் நிலைக்கட்டும்
சம நீதி ஓங்கட்டும்
என வாழ்வாங்கு வாழ்த்தி
வளர்வாங்கு போற்றுகின்றேன்
வாழ்க வையகத்தில்

நா.வேதநாயகன்
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்

மக்கள் இல்லம்,
மன்னார் -03

# வெளியீட்டுரை

செந்நெல் வயலும் நன்னீர்த்தடமும் தேனாறு பாயும் பூநறு சோலையும் நிறைந்த பூமி. அலையாய் நுரைதள்ளும் கடல் வளமும் அதில் அள்ள அள்ளக் குறையாத மீன்வளமும் செறிந்த பூமி. ஓங்கி உயர்ந்து வளர்ந்த மரங்களும் அதில் அறுசுவை ருசிதரும் கனிவளமும் கொண்ட பூமி. நால்வகை மதமும் மூவகை இனமும் கொண்டு வாழும் பூமி. ஆம்! அதுதான் வரலாற்றுப் புகழ்பூத்த மன்னார் மாதல மண்ணாகும்.

அதில் ஓங்கி வளர்ந்த மரநிழலில் உப்பிச் செழித்த வயல் வெளியில் அமைந்துள்ள நறுவிலிக்குளம் கிராமத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து மறைந்தவர் எம் மாதலம் போற்றும் செபமாலை மொத்தம் போல் ஆசான் அவர்கள். இவர் 1924.11.24இல் பிறந்து 1982.04.12இல் இறையடி சேர்ந்தார். இவர் ஆற்றிய கல்வி, கலை, இலக்கியச் சேவைகள் எம் நெஞ்சைவிட்டு அகலாதவையாகும்.

இவர் உயர்கல்வியில் தேறி ஆசிரியராக அதிபராக கடமையாற்றிய காலங்கள் மன்னார் மாணவர்களுக்கு பொற்காலமாகும். இறுதியாக இவர் மன்னார் சூரிய கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றார்.

1972ஆம் ஆண்டு நானாட்டான் கலாசாரப் பேரவையினர் மன்னார் மாவட்ட ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியில் இவர் முதலிடம்பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றமை நாம் அனைவரும் அறிந்த இனிப்பான செய்தியாகும். இதுவே இவரது கவிதையாற்றலுக்கு சான்றாகும்.

அவரது மறைவுக்குபின்னர் அவரது மாணவனும் மன்னார் மண்ணின் மகனும் தற்போது மட்டக்களப்பில் வசிப்பவருமான ஆசிரியர் திரு.மு.சுந்தரம்பாண்டியன் அவர்கள் அன்னாருடைய கவிதைகளைத் தொகுத்து நூலுருவாக்கியமை எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்நூலை எமது மன்னார்த் தமிழ்ச் சங்க வெளியீடாக வெளிக்கொணர்வதில் பெருமையடைகின்றோம்.

அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரைத் தலைவராகக்கொண்ட எமது மன்னார் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டு கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இதுபோன்ற பல நூல்களை நாம் வெளியிட்டுள்ளோம். பல நோக்கங்களைக் கொண்டு இயங்கி வரும் எமது சங்கமானது மன்னார் மண்ணின் கலை இலக்கியத்தை வளர்க்கும் நோக்கத்தையும் தனது அடிப்படையான இலக்காகக் கொண்டுள்ளது. தொடர்ந்து எமது தமிழ்ச்சங்கம் மன்னார் மண்ணின் எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன் றோருக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர பாடுபடும் எனக்கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி யடைகின்றோம்.

மக்கள் காதர்

உபதலைவர்,
மன்னார் தமிழ்ச்சங்கம்

# மன்னார்ப் பிரதேச கவிதைப் பாரம்பரியம்

## - ஒரு வெட்டுமுகப் பார்வை -

அருட்திரு தமிழ்நேசன் அடிகள்

இலங்கையின் புவியியல் அமைப்பில் வறண்ட பிரதேசம் என்றுதான் மன்னார் கணிக்கப்படுகின்றது. ஆனால் கலைஇலக்கிய ஈடுபாட்டில் இப்பிரதேசம் செழிப்பான இடமாக விளங்கி வந்துள்ளது. குறிப்பாகக் கவிதைக்கலை இங்கு சிறப்பாக வளர்ச்சிபெற்று வந்துள்ளது. மன்னார்ப் பிரதேசக் கவிதைப் பாரம் பரியத்தைப் பற்றி சுருக்கமாக அதேவேளை ஆதாரங்களுடன் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

போர்த்துக்கேயரின் வருகைக்குப் பின்னர் அதாவது 16ம் நூற் றாண்டுக்கு முன்னர் மன்னாரின் இலக்கியப் பாரம்பரியம் எப்படி இருந்தது என்பதை அறிய முடியாதுள்ளது. 16ம் நூற்றாண்டு தொடக்கம் கவிபாடும் ஆற்றல் வாய்ந்த பல நூற்றுக்கணக்கான புலவர்களும், அவர்களது படைப்புக்களும் இங்கு இருந் துள்ளன. மன்னாரின் கிராமங்கள்தோறும் குவிந்து கிடக்கும் ஏட்டுப் பிரதிகளையும் ஏற்கனவே அழிந்தொழிந்து போனவை களையும் நோக்கும்போது இந்த உண்மை தெளிவாகும்.

இதுவரை அறியப்படுவதிலிருந்து மன்னார் பிரதேச இலக்கியத்தின் ஆரம்பம் 16ம் நூற்றாண்டாகவுள்ளது. மன்னார்ப் பிரதேச இலக்கியப் பாரம்பரி யத்தில் முதன் முதல் அறியப்படுகின்ற பெயர் லோறஞ்சுப் புலவர் ஆவார். இவருக்கு முன்னரும் புலவர்கள் இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் பற்றிய தகவல்களை அறியமுடியாதுள்ளது. லோறஞ்சுப் புலவரிடம் திண்ணைப் பள்ளியில் கல்விகற்ற புலவர் குழாமொன்று மன்னாரில் உருவாகின்ற சூழல் ஏற்பட்டுள்ளது. மன்னாரில் உள்ள வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த இந்தப் புலவர்களின் வழிமரபினர் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நாட்டுக்கூத்து நாடகங்களை யும் கவிகளையும் புனைந்துள்ளனர். லோறஞ்சுப் புலவரின் திண்ணைப்பள்ளி மாணவர்கள் தொடர்பாக திரு.மு.சுந்தரம் பாண்டியன் அவர்கள் மன்னா பத்திரிகையில் 2006ஆம் ஆண்டு யூன் மாதம் எழுதிய கட்டுரையில் சிறப்பாக ஆராய்ந்துள்ளார்.

இவ்வாறான புலவர்கள் பலரும் கத்தோலிக்க சமயம் சார்பான இலக்கியங்க ளையே படைத்துள்ளனர். புனிதர்களின் வரலாற்றைக்கொண்ட நாட்டுக்கூத்து, நாடகங்கள், வாசாப்புக்கள், சாற்று கவிகள், தேவாலயங்கள் மீது பாடப்பட்ட பதிகங்கள், பிரார்த்தனைப் பாடல்கள் என கத்தோலிக்க சமயம் சார்பான இந்த இலக்கியங் கள் பலவகையாக உள்ளன.

சமயம் சார்பான இலக்கிய முயற்சிகளைவிட உலகியல் சார்புடைய தனிப்பாடல்களும் இக்காலப் புலவர்களால் பாடப்பட்டுள்ளன. கையறுநிலைச் செய்யுள்கள் சீட்டுக்கவிகள் அறம்பாடும் வெண்பாக்கள் போன்றவை இங்கு குறிப்பிடத் தக்கன.

மன்னார் பிரதேச முஸ்லிம் புலவர்களுள் சிலர் நபிகள் நாயகம் மீதும் அவரது பேரராகிய செய்யிது அப்துல் காதிர் ஆண்டகைமீதும் பிரபந்தங்கள் இயற்றியுள்ளனர். தமக்கோ பிறருக்கோ அவ்வப்போது ஏற்படும் இடர்கள் முதலானவற்றிலிருந்து பாதுகாப்பு வேண்டி பாடப்படும் பிரபந்தங்களும் இக்காலப் புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன. முஸ்லிம் புலவர்களும் சீட்டுக்கவிகள் புனைந்துள்ளனர். சிலேடைக் கவிகள், தனிப்பாடல்கள் போன்றவற்றையும் இயற்றியுள்ளனர். இவர்களுள் சிலர் நாடகங்களும் இயற்றியுள்ளனர்.

இப்புலவர்களின் இலக்கியங்களைப் நோக்கும்போது இக்காலப் புலவர்களில் பலர் இலக்கண இலக்கியப் புலமை வாய்ந்தவர்களாக இருந்திருக்கின் றனர் என்பது தெளிவாகவுள்ளது. 16ம் நூற்றாண்டிலிருந்து பாரம்பரியக் கல்விமுறை வளர்ச்சி பெற்று வந்துள்ளமையே இதற்குக் காரணமெனலாம்.

## 'மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்ற நூல்

நானாட்டானைச் சேர்ந்த திரு.ம.பெஞ்சமின் செல்வம் அவர்களால் எழுதப்பட்ட ''மன்னார் மாதோட்ட தமிழ்ப்புலவர் சரித்திரம்'' என்ற நூல் இங்கு குறிப்பாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு முக்கியமான நூலாகும். 1769 - 1976 வரை வாழ்ந்த மன்னார்ப் பிரதேச தமிழ்ப்புலவர்கள் பற்றிய பயனுள்ள விரிவான பல தகவல்கள் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன. பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் இந்நூலின் முக்கியத்துவத்தை பின்வருமாறு சுட்டுகின்றார். ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய சிற்றின ஆய்வினை (Micro Analyses) நுணிகிய முறையிலே பலரும் இந்நாட்களிலே

மேற்கொண்டுள்ளனர். அத்தகைய ஆய்வுகளின் பலனாக "ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய வரலாற்றினை விரிவாக எழுத வாய்ப்புண்டு. 'மன்னார் மாதோட்டத் தமிழ் புலவர் சரித்திரம்' என்னும் இந்நூல் அத்தகைய வாய்ப்புக்கு மிகுந்த உதவியினை நல்கும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை".

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தந்தையும் தமிழ்ப் பேரறிஞருமான தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் "இந்நூல் பற்றிக் குறிப்பிடும்போது இந்நூலாசிரியர் மிகவும் அழகாக மாதோட்டப் புலவர் வரலாற்றினை வரைந்துள்ளார். ஏறக்குறைய ஐம்பத்தொரு புலவர்களின் வரலாற்றையும் எடுத்துக்காட்டுச் செய்யுள்களுடன் தந்துள்ளார். நல்ல திறனாய்வு முறையில் எழுதப்பட்ட இந்நூல் செய்யுள் நாடகம், வாசகப்பா, உலா முதலிய துறைகளில் யாத்துள்ள நூல்களைப் பற்றி விரிவான விளக்கம் கொண்டுள்ளது. இந்நூலிலிருந்து கத்தோலிக்க புலவர்கள் ஆற்றிய தமிழ்த்தொண்டு எத்துணை சிறந்தது என்பதைக் கணிக்க முடியும்" என்கிறார்.

மன்னார் மாதோட்டத் தமிழ்க் கல்வியின் ஆரம்பகர்த்தாவாக லோறஞ்சுப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் கணிக்கப்படுகின்றார். இவருடைய காலம் கி.பி. 1724 - 1793 ஆகும். இவரில் இருந்துதான் மன்னார் மாதோட்டக் கல்வி வளம் புத்துயிர் பெறுவதாகச் சொல்லப்படுகின்றது. தென்பாங்கு மூராசாங்கள் வாசகப்பாவில் இவரால் எழுதப்பட்ட பின்வரும் காப்புச் செய்யுள் மன்னாரில் மிகவும் பிரபல்யமானது.

"வல்ல சிலுவை மரத்தைப் புயத்தேந்திச்
சொல்லரிய வாதைத் துயரோடு - கல்வாரி
மேட்டுக்கு மேல் நடந்த வேதபரனே மெயது
பாட்டுக்கு முன்னிற்பதாம்"

மன்னார் கிறிஸ்தவ வகுப்பாரிடையே தேசியகீதம் போல் இந்த வெண்பா விளங்குவதாக புலவர் பெஞ்சமின் செல்வம் குறிப்பிடுகின்றார். முதல் வெண்பாவும் ஆசிரிய வெண்பாவுமாகிய "வல்ல சிலுவை ...." எனத் தொடங்கும் இந்த வெண்பா முன்மொழியப்படாத எந்த சுகிர்த வைபவங்களும் மன்னாரில் இடம்பெறுவதில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

## மன்னார்ப் பிரதேச புலவர்களின் பட்டியல்

மன்னார் கல்வி வலயத்தினால் வெளியிடப்பட்ட 'முத்தமிழ் விழா - சிறப்புமலர் 1999' என்ற நூலில் 'மன்னார் பிரதேசக் கவிதை இலக்கியம் - ஓர் ஆய்வு நோக்கு' என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரையில் 18 19 20ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து மறைந்துபோன முக்கியமான சில கிறிஸ்தவ, இஸ்லாமியப் புலவர்களின் பெயர்ப்பட்டியலை வழங்கியிருந்தேன்.

நானாட்டானைச் சேர்ந்த திரு.ம.பெஞ்சமின் செல்வம் அவர்கள் எழுதிய "மன்னார் மாதோட்ட தமிழ்ப் புலவர் சரித்திரம்" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள புலவர்களின் தகவல்களையும் 1975ஆம் ஆண்டில் மன்னார் தமிழ்ச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட 'நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு நினைவு மலரில்' நறுவிலிக்குளத்தைச் சேர்ந்த கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்கள் எழுதிய 'மன்னார் மாவட்ட கிறிஸ்தவமும் தமிழ்த் தொண்டும்' என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சில புலவர்களின் தகவல்களையும் இன்னும் அண்மை ஆண்டுகளில் வாழ்ந்து மறைந்துபோன சில புலவர்களின் தகவல்களையும் சேர்த்து இணைத்து இப்படியலைத் தயாரித்தேன்.

இப்படியலில் 62 புலவர்களின் பெயர்களும் அவர்களின் ஊர் அவர்கள் வாழ்ந்த காலம், அவர்களின் படைப்புக்கள் ஆகிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மன்னாரில் வாழ்ந்திருக்கக்கூடிய சைவப் புலவர்கள் பற்றிய தகவல்களைப் பெறமுடியாதிருப்பது கவலைக்குரியதே.

## 'மாதோட்டக் கவிதைகள்' என்ற நூல்

நாட்டுக்கூத்து நாடகங்கள் வாசாப்புக்கள் போன்றவற்றை யாத்த புலவர்களைத் தொடர்ந்து மரபுக்கவி புனையும் ஆற்றல் வாய்ந்த பல கவிஞர்கள் மன்னாரில் தோற்றம்பெற்றுள்ளனர். மன்னார் பிரதேச கவிதை இலக்கியங்களையும் கவிஞர் களையும் அறிந்துகொள்ள ஏதுவாக 'மாதோட்டக் கவிதைகள்' என்ற நூல் விளங்குகிறது. மன்னார் பிரதேச கவிஞர்களின் ஒட்டுமொத்தக் கவித்துவ ஆற்றலை இந்நூலில் காணலாம். நானாட்டான் கலாசாரப்பேரவையினர் 1972ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட ரீதியில் கவிதைப் போட்டி ஒன்றை நடாத்தினர். இதில் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த 28 கவிஞர்கள் பங்கெடுத்தனர். இக்கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற 14 கவிதைகள்

தொகுக்கப்பட்டு 1974ஆம் ஆண்டு 'மாதோட்டக் கவிதைகள்' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது.

அன்றைய மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் மன்னார் மாவட்டக் கலாசாரப் பேரவைத் தலைவருமான திரு.ச.கதிர்காமநாதன் இந்நூல் பற்றிக் குறிப்பிடுகையில் ''நாட்டுப்பாடல் துறையில் சிறந்து விளங்கிய மாதோட்டப் புலவர்கள், கவிதைத் துறையிலும் ஆழந்த புலமை உடையவர்கள் என்பதற்கு இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளே சான்று'' என்கிறார்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கவிதைகளுக்கு தங்கப்பதக் கங்களும், அடுத்த ஐந்து கவிதைகளுக்கு வெள்ளிப் பதக்கங்களும் அடுத்த ஐந்து கவிதைகளுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்பட்டன. பரிசுபெற்ற ஒழுங்கு முறையை அனுசரித்து கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

செ.மொத்தம் போல், வித்துவான் எம்.ஏ.றகுமான், மரிசாற்பிள்ளை, றெ.முஹம்மதுக் கௌது, நீ.ஆ.கனகசிங்கம், எம்.பீ.எம்.முஹம்மது காசீம், ஆலிம், செல்வி ச.பாலதேவி, திரு.பி.ச.லெம்பேட், எஸ்.ராஜம் புஸ்பவனம், வே.அமிர்தநாயகம், செ.தம்பிராசா (குழந்தை), செ.அ.தெ.அப்துல் கபூர், ம.பெஞ்சமின் செல்வம், அ.லூயிஸ் குரூஸ் ஆகியோருடைய கவிதைகளே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இவ்விழாவிற்கு அன்றைய இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்துறை விரிவுரையாளர் கலாநிதி அ.சண்முகதாஸ் அவர்கள் பங்கெடுத்துச் சிறப்பித் தனர். 28 கவிஞர்கள் பங்கெடுத்த இப்போட்டியில் கவிஞர் மொத்தம் போல் அவர்கள் முதல் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மன்னார் பிரதேசத்தில் வெளிவந்த கவிதை நூல்கள்**

வித்துவான் எம்.ஏ.றகுமான் அவர்கள் திருக்குர் ஆன் சொல்லும் கருத்துக் களைச் சாறுபிழிந்து குறள் வடிவில் எழுதி 'குர் ஆன் குறள்' என்ற நூலை வெளியிட்டார். முருங்கனைச் சேர்ந்த கலைஞர் குழந்தை அவர்கள் 1966ஆம் ஆண்டில் 'இன்பத் தமிழன் இதய ஓலம்', 'அறப்போர் அறைகூவல் என்ற இரு கவிதை நூல்களை வெளியிட்டார். விடத்தல்தீவைச் சேர்ந்த திரு.சுவாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை அவர்கள் 'விடத்தலூர் வித்தாப்பு' என்ற கவிதை நூலை எழுதியுள்ளார். மன்னாரில் வசித்த அன்பு ஜவகர்ஷா அவர்கள்

80களின் இறுதியில் 'காவிகளும் ஒட்டுண்ணிகளும்' என்ற நூலைப் படைத் துள்ளார். கலைவாதி கலீல் அவர்கள் 'கருவறையிலிருந்து கல்லறைக்கு' (1985) என்ற கவிதை நூலை வெளியிட்டார்.

2008ஆம் ஆண்டு 'மன்னல்' என்ற பெயரில் மன்னார் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்ட "*மன்னார் பிரதேச இலக்கியவிழா மலரில் நான் எழுதிய மன்னார் பிரதேசத்தில் முகிழ்த்த கவிதை இலக்கிய வெளிப்பாடுகள் (1988 - 2008 வரை) ஒரு பார்வை*" என்ற கட்டுரையில் 1988 - 2008 வரையில் வெளி வந்த கவிதை நூல்களை ஆய்வுக்கு உட்படுத்தியிருந்தேன்.

முருங்கனைச் சேர்ந்த கவிஞர் குழந்தை அவர்களின் 'மாதோட்டம்' (2000), விடத்தல்தீவைச் சேர்ந்த ஆசிரியர் சு.சந்தியாப்பிள்ளை அவர்கள் 'யோசேவ் வாஸ் காவியம்' (2003), பெரியமடுவைச் சேர்ந்த எஸ்.எச். நிஹமத்தின் 'வா ஊருக்குப் போவோம்' (1992) மற்றும் 'பொன்விளை பூமி' (1994) சூசைநாயகம் என்ற இயற்பெயரைக் கொண்ட நாவண்ணனின் 'சுனாமிச்சுவடுகள்', (2005) நானாட்டானைச் சேர்ந்த எஸ்.ஜெகனின் 'அவஸ்தைகள்' இலுப்பைக் கடவை யைச் சேர்ந்த வி.எஸ்.சிவகரனின் 'நிஜங்கள்', மன்னார் எமில் நகரில் வசிக்கும் வை.கஜேந்திரனின் 'துளிகள்', நாவண்ணனின் மகள் கில்லறி பஸ்ரினாவின் 'விழுதுகள் தாங்கும் விருட்சங்கள்' முருங்கன் செம்மண்தீவைச் சேர்ந்த செ.ஞானராசாவின் 'எதிர்பார்ப்பு' மன்னார் எழுத்தூரைச் சேர்ந்த விக்ரம் அவர் களின் 'நிழல் ஒதுங்கிய நிஜங்கள்' (2007), வங்காலையைச் சேர்ந்த செல்வி மரியகொறற்றி டயஸ் அவர்களின் 'செதுக்கிய சிற்பம்', ஆகிய 12 நூல்களைப் பற்றிய குறிப்புகளை அக்கட்டுரையில் நான் சேர்த்திருந்தேன். இதைவிட ஆசிரியர் திரு.அந்தோனிமுத்து மற்றும் ஆத்திக் குழியைச் சேர்ந்த திரு.பி.பி. அந்தோனிப் பிள்ளை ஆகியோர் குழந்தைகளுக் கான கவிதை நூல்களைப் படைத்துள்ளனர்.

2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2011ம் ஆண்டு மே வரையான காலப்பகு தியில் மன்னார் சின்னக்கடையைச் சேர்ந்த மன்னார் அமுதன் அவர்களின் 'விட்டுவிடுதலை காண்' (2009), பேசாலையைச் சேர்ந்த வசந்தன் அவர்களின் 'இதய மொழி' (2009), அருட்திரு.தமிழ்நேசன் அவர்களின் 'நெருடல்கள்' (2009), நானாட்டானைச் சேர்ந்த எஸ்.ஜெகனின் 'சுனாமிச் சுவடுகள்' (2009), மன்னார் சாவற்கட்டைச் சேர்ந்த ஜே.ஆர்.மயூரனின் 'வருடிய இளமைக்காற்று' (2010), பேசாலையைச் சேர்ந்த ஜே.அமல்ராஜ் அவர்களின் 'விழி தீண்டும் விரல்கள்' (2010), என்.சுந்தா அவர்களின் 'உன் ஓர விழிவீச்சிலிருந்து' (2010), மன்னார் கீரியில் வசிக்கும் வினோறாஜ்

அவர்களின் 'தேடலில் ஒரு சுகம்' (2010), மன்னா ரைச் சேர்ந்த பி.அமல்ராஜ் அவர்களின் 'கிறுக்கல்கள் சித்திரமாகின்றன' (2011), மன்னார் பெரியகடையைச் சேர்ந்த சிஹார் அவர்களின் 'ஒரு யுகத்துச் சோகம்' (2011), மன்னார் அமுதனின் 'அக்குரோணி' (2011) ஆகிய நூல்கள் வெளி வந்துள்ளன.

மேலே சுட்டிக்காட்டிய கவிதை நூல்களில் தொண்ணூறு வீதமானவை புதுக்கவிதை நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 25 ஆண்டுகாலப் பகுதியில் ஏறக்குறைய 25ற்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் மன்னாரில் வெளி வந்துள்ளன. இது மன்னார்ப் பிரதேசக் கவிதைப் பாரம்பரியத்தின் வளர்ச்சிப் போக்கைக் காட்டுவதாக உள்ளது.

**நிறைவுரை**

18ஆம் 19ம் நூற்றாண்டுகளில் செய்யுள் நாடகங்களாகவும் வாசகப்பா வாகவும் அமைந்த மன்னாரின் கவிதைப் பாரம்பரியம் 20ம் நூற்றாண்டில் மரபுக் கவிதை சார்ந்ததாக மாறுகின்றது. 21ம் நூற்றாண்டில் அது புதுக்கவிதையாக பரிணமிக்கின்றது.

மன்னார் பிரதேசக் கவிதைப் பாரம்பரியம் பற்றிய ஓர் வெட்டுமுகப் பார்வையாக அமைந்த இக்கட்டுரையில் கவிதைப் போட்டியில் வெற்றிபெற்ற கவிஞர்களின் பெயர்களும் கவிதை நூல்களை வெளியிட்ட கவிஞர்களின் பெயர்களும் மட்டுமே இடம்பெற்றுள்ளன. கட்டுரையின் விரிவஞ்சி அவர்களைப் பற்றியோ அவர்க ளின் கவிதைப் படைப்புக்களைப் பற்றியோ ஆராயவில்லை. இவர்களைவிட கவிதைத்துறையில் ஆற்றல் வாய்ந்தவர்கள் பலர் மன்னார் பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்துள்ளார்கள். இன்னும் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். ஆனால் கட்டு ரையின் விரிவஞ்சி அவர்களின் விபரங்களை உள்ளடக்க வில்லை என்பதை கவனத்தில்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அருட்திரு தமிழ்நேசன் அடிகள்
இயக்குனர்,
மன்னார் மறைமாவட்ட
சமூகத்தொடர்புகள் அருட்பணி மையம்.

ஆசிரியர், மன்னா பத்திரிகை
தலைவர், மன்னார் தமிழ்ச் சங்கம்
மன்னார்
07.05.2011

# பதிப்பாசிரியர் உள்ளத்திலிருந்து

ஈழத்திருநாட்டின் வரலாற்றில் மன்னார் மாதோட்டம் பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாகும். மாதோட்டத்தில் நறுவிலிக்குளம் கிராமத்தில் செபமாலை வைத்தியர் மடுத்தீன் சந்தாள் தம்பதிகளுக்கு 1924 இல் பிறந்தவர்தான் கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்களாவார் அன்னார் வஞ்சியன் குளம், வங்காலை றோ.க. பாடசாலைகளில் ஆரம்ப இடைநிலைக் கல்வியினை பெற்றபின்னர் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சூசையப்பர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியினை நிறைவு செய்தார் பின்னர் முருங்கன் நானாட்டான் முத்தரிப்புத்துறை மன்னார் நல்லாயன் ஆண்டாங்குளம் ஆகிய பாடசாலைகளில் இருபத்தைந்து ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகவும் மன்சூரியகட்டைக்காடு றோ.க. பாடசாலையில் பத்து ஆண்டுகள் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்னர் (1982) இறையடி எய்தினார்.

மொத்தம் போல் அவர்கள் ஆசிரியப்பணியுடன் மரபுரீதியான தமிழ்ப் பணியும் ஆற்றியவர் மன்னார் மாதோட்ட வரலாற்றில் குருசீட முறைப்படியான மாணவ பரம்பரையில் முதலாசிரியர் லோறஞ்சுப்பிள்ளை யிடம் பாடங்கேட்ட குருகுல நாட்டுத்தேவர் வழி சுண்டிக்குழிப் புலவர் வி. கபிரியேல் மொத்தம் வழியினர்தான் மொத்தம் போல் அவர்களுமாவர் எனவே அன்னாரும் மரபு வழித் தமிழ்ப்பணிபுரிந்த புலவராகவும் பரிணமித்துள்ளார். அம்மரபின் படியே பார்வளன் நாடகம், சிலுவைப்பாதைகளின் தாழிசைகள், நத்தார் கூத்து, கல்வாரிக்களப்பலி, புனித வீரமங்கை, மும்மணிகள் சரிதை, நூற்றுக்கணக்கான தனிப்பாடல்கள் என்பவற்றுடன் சுண்டிக்குழிப்புலவர் வரலாறு, மாந்தை மாதாவே மருதமடுமாதா குருகுல நாட்டுத்தேவர் வரலாறு என்னும் உரைநடை நூல்களை யும் எழுதியுள்ளார். இவற்றுள் சுண்டிக்குழிப் புலவர் வரலாறு, மாந்தை மாதாவே மருதமடு மாதா ஆகிய இரண்டும் அன்னாரால் பதிப்பிக்கப்பட்டவைகளாகும். ஏனைய எவையுமே நூலுருப்பெறவில்லை. எனினும் கவிஞர் வாழ்ந்த காலத்தில் அவருடைய பல கவிதைகள் சத்திய வேத பாதுகாவலனில் வெளிந்தவையாகும்.

அன்னாரிடம் திண்ணைக் கல்வி முறையில் யாப்பு அணி இலக்கணம் என்பவற்றைப் பாடங்கேட்டவன் என்ற வகையிலும் அவருடைய புலமை, ஆய்வறிவு, பழக்கவழக்கம், தமிழ்ப்பண்பு என்பவற்றை நேரடியாகப் பயின்று பழகிய மாணவன்எனற கோதாவிலும் அன்னாரில் நன்றி கொண்ட உணர் விலும் அவர் மறைந்து முப்பது ஆண்டுகளாகியும் அவரின் அவாவினை

ஓரளவேனும் உலகிற்கு வெளிக்கொணர வேண்டுமெனும் எண்ணம் உறங்கு நிலையில் உறுத்தலாக இருந்தது. இவ்வெண்ணம் வெளிவர வேண்டிய உதவி யினையும் நிதியினையும் உதவிய கவிஞரின் மூத்த புதல்வர் இலண்டனில் வாழ்பவர் திரு.போல் பாஸ்கரன் அவர்களுக்கு எனது முதற்கண் நன்றிகள். தந்தையின் கையெழுத்து குறிப்புகள் பலவற்றைத் தேடி மனமுவந்து வழங்கி யுதவிய கவிஞரின் புதல்வி பற்றிமா றோஸ் அவர்கட்கும் அவர்தம் கணவர் திரு. P.யோசப் நவரட்ணம் அவர்கட்கும் மனமார்ந்த நன்றிகள் பலவாகும்.

கவிஞர் மொத்தம் போல் அவர்களின் புதல்வர் அருட்தந்தை பீற்றர் மனோகரன் அவர்கள் தந்தையின் ஆக்கங்களையும் ஆவணப்படுத்தல் களையும் முப்பது வருடங்களாக எம்மவர்களின் இருப்புக்கள் சிதறடிக்கப்பட்ட இக்கட்டான நிலையிலும் பாதுகாத்து பத்திரப்படுத்தி தமிழன்னையை அலங்கரிப் பதில் தந்தையிலும் தான் குறைந்தவரில்லை என்னுமளவுக்கு பாதுகாத்து வருகின்றார். கவிஞரின் எழுத்துப்பிரதிகளைத் தேடிச் செல்லும் போதெல்லாம் வரவேற்று வேண்டுமளவிற்கும் மேலாக அனைத்து உதவிகளையும் வழங்கிய அருட்தந்தை அவர்களுக்கு என்றென்றும் எனது நன்றிகள் காணிக்கையாகும்.

இக்கவிதைத் தொகுப்பு நூலைப் பார்வையிட்டு புலவரைப்போற்றி அவர்தம் கவிதையினைப் படித்து வியந்து பாராட்டி ஆசியுரை வழங்கிய மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கட்கும், எழுபதுகளில் தன் கையாலே தங்கப்பதக்கம் அணிவித்து கவிஞர் பட்டம் வழங்கிய யாழ்ப்பாணம் பல்கலைக் கழக தமிழ்துறை தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கட்கும் எமது உளமர்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

மன்னார் மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர் உயர்திரு நா. வேதநாயகன் அவர்கள் சிறந்ததோர் வாழ்த்துரை வழங்கி எம்மை ஊக்கப்படுத்தி உதவியமைக்கு என்றென்றும் நன்றியுடன் கடமைப்பட்டுள்ளேன்.

மன்னார் மாதோட்ட மண்ணின் தமிழ்சங்கத்தினைச் செயற்படு நிலையில் இயங்கச் செய்துகொண்டிருக்கும் மாதலத்து மைந்தன் மக்கள் காதர் அவர்கள் வெளியீட்டுரை வழங்கி வெற்றிபெற வாழ்த்தியமைக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகள் பல உரித்தாகட்டும்.

இரண்டாம் தனிநாயகம் தமிழ்நேசன் அடிகளாரிடம் இக்கவிதைத் தொகுப்பின் முன்னுரையை பகன்றவேளை முழுவதையும் நெறிப்படுத்தி, வகைப்படுத்தி வழிப்படுத்தி வெளிப்படுத்திவைத்தவர் அந்த உத்தமர்தான். இச்சிறு உரையில் தமிழ்நேசன் புகழ் உரைக்க முடியாது தமிழ் மகன் என்ற கோதாவில் அடிகளாருக்கு என் நன்றிகள் ஆயிரங்கள்.

இக்கவிதைத் தொகுப்பு நூல் சிறப்பாக வெளிவர ஆலோசனைகள் வழங்கிய பெருமக்களுக்கும், அழகாக அச்சிட்டுத்தந்த மட்டக்களப்பு சென்.யோசப் கத்தோலிக்க அச்சகத்தாருக்கும், சிறப்பான முறையில் அட்டைப்படம் அமைத்து வழங்கிய திரு. இ.கிறிஸ்ரி அவர்களுக்கும், சரவை பார்த்து உதவிய எனது துணைவி திருமதி சு.சோதி ஆசிரியைக்கும், எனது குழந்தைகள் செல்வி. சு.மாதங்கி பாண்டியன், செல்வன். சு. பராந்தகன் பாண்டியன் அவர்கட்கும், மன்னார் எழுத்தூர் தமிழ் ஆசிரியர் திரு.பெ.செல்வேந்திரன், திரு.கெ. உதயகுமார், திரு.லோ.கௌசிகன் அவர்கட்கும் எனது நன்றியி னைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்கள் மறைந்து முப்பது ஆண்டுகளின் பின் இந்நூல் வெளிவர அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் அனைத்து நற்பேறு களையும் வழங்க வேண்டி எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றேன்.

நன்றி

2042 வைகாசி 01 — அன்பன்

2011 மே 15 — **மு. சுந்தரம் பாண்டியன்**

# உள்ளே.....


| | | பக்கம் |
|---|---|---|
| 01. அன்பு கடவுள் வடிவம் | - | 01 |
| 02. மாண்புமிகு மாதோட்டம் | - | 02 |
| 03. உயிர்த்தெழுந்தாரே | - | 07 |
| 04. குமரகுரு எழுகை | - | 09 |
| 05. பரமெழுந்திடப் போந்தார் | - | 11 |
| 06. தேற்றிடும் இறைவன் | - | 13 |
| 07. காணிக்கையாக்கல் | - | 15 |
| 08. புண்ணிய மருதப் பொன்மடுத்தாயே | - | 17 |
| 09. நற்றவத்தாலுற்பவித்த அமலி | - | 19 |
| 10. திரித்துவப் பரம் பொருள் | - | 21 |
| 11. அன்று பிறந்தவர் இன்று பிறந்தார் | - | 23 |
| 12. பத்தினித்தாய் | - | 27 |
| 13. தவத்தை விட மாதங்கள் ஏதுமுண்டோ | - | 33 |
| 14. மறை வளர்க்கும் மருதமடு | - | 36 |
| 15. அடக்கமிலா நாட்டமுடன் அணுகலேனோ | - | 40 |
| 16. ஏன் இந்த நிலைமை | - | 42 |
| 17. இன்றிருப்பார் நாளையில்லை | - | 43 |
| 18. நிறைமகனார் பிறப்பு விழா | - | 45 |
| 19. இன்ப செபமாலை நவம் இன்றும் காண்போம் | - | 46 |
| 20. மடுமாதா | - | 48 |
| 21. சுவாமி ஞானப்பிரகாசர் அஞ்சலி | - | 50 |
| 22. பவனி வரும் கன்னித் தாயார் | - | 57 |
| 23. அன்பிலையேல் நாடகந்தான் | - | 59 |
| 24. வரமருள் இரந்திடுவோம் | - | 61 |
| 25. பிறப்பாண்டு காணுகிறதாமே | - | 62 |
| 26. மருதமடு நாயகியே | - | 63 |
| 27. நித்தியத்தின் தவப்பாதை நெறி | - | 64 |
| 28. அஞ்சா இன்பங் கிடைத்திடுமோ? | - | 65 |
| 29. மகிமையுடன் உயிர்ப்பெய்த வழியே காண்போம் | - | 67 |
| 30. உயிர்த் தெழுந்தார் கிறிஸ்து நாதர் | - | 68 |

| | | |
|---|---|---|
| 31. மனுவுடலே விண்ணேற்ற வரவு கொண்டார் | - | 70 |
| 32. கடவுள் தீபம் | - | 72 |
| 33. கத்தன் கோலம் | - | 74 |
| 34. விசுவாச உயிர் | - | 75 |
| 35. என்னரசில் நிலைப்பீர் | - | 76 |
| 36. கருணை நிறைவின் புனித விழா | - | 77 |
| 37. ஈன்ற தாயை மதிப்பீரோ | - | 78 |
| 38. இட்டம் அவர்கள் இயல்பூக்கம் | - | 79 |
| 39. எல்லாம் நிறைவே பெண் | - | 80 |
| 40. ஆறும் சோறும் | - | 83 |
| 41. முன்பே உணர்ந்தால் மோட்சமடா | - | 91 |
| 42. எண்ண மொழியே செபித்தலடா | - | 92 |
| 43. புரட்சி துளிர்க்கும் இளைஞரடா | - | 93 |
| 44. எந்த விதத்திற் கிறிஸ்தவர் நாம் | - | 94 |
| 45. 1957.12.24 வெள்ளப்பெருக்கு | - | 95 |
| 46. 1964.12.24 இரவு மன்னார் மாவட்ட சூறாவளி பேய்க்கோலக் காட்சி | - | 96 |
| 47. தெய்வ மெங்கே குடியிருக்கும் | - | 97 |
| 48. ஒருவன் மனமே குலதெய்வம் | - | 98 |
| 49. மனமகிழும் தவத்தின் காலம் | - | 99 |
| 50. திரை விருத்தம் | - | 100 |
| 51. அரிய காலம் தவக்காலம் | - | 102 |
| 52. ஒன்றும் புதிதாய்ச் செய்யாதீர் | - | 102 |
| 53. துணிந்து சொல்ல யாருண்டு | - | 103 |
| 54. தெய்வத் தன்மை | - | 104 |
| 55. ஆண்டவனைக் காணவழிகள் | - | 105 |
| 56. மனிதன் மாறுகிறான் | - | 106 |
| 57. பகட்டான கோலவுடை பக்தியாமோ | - | 107 |
| 58. பசியாத இறையன்பு கொண்ட பேராம் | - | 108 |
| 59. இருக்கும் நன்னாள் தவக்காலம் | - | 110 |
| 60. அன்பின் இறைவன் எங்குள்ளார் | - | 111 |
| 61. இருளும் ஒளியும் நிலையாமோ | - | 112 |
| 62.தேடா மனுவில் வாழ்கின்றார் | - | 113 |

| | | |
|---|---|---|
| 63. புரியா திளைஞர் கலங்குவதேன் | - | 114 |
| 64. பரமன் பகிரும் பந்தியடா | - | 115 |
| 65. திருநிலையைக் கண்டு விட்டான் | - | 116 |
| 66. பேசும் தெய்வம் | - | 117 |
| 67. புனித இராயப்பர் மீது திரைவிருத்தம் | - | 118 |
| 68. நூற்றாண்டு கண்ட எங்கள் சந்தானாள் | - | 119 |
| 69. சிந்தனையோன் தனி நாயகம் | - | 121 |
| 70. பொன்மகனார் பிறப்பு விழா | - | 123 |
| 71. சாந்தி நிலையுண்டோ | - | 124 |
| 72. எல்லாப் பழமும் அமுதல்ல | - | 125 |
| 73. கிறிஸ்தவனே மறுகிறிஸ்து | - | 126 |
| 74. 05.07.1981 உண்ணாவிரதம் | - | 129 |
| 75. நத்தார் காண்போம் | - | 130 |
| 76. மாந்தை ஆரோக்கிய அன்னை | - | 131 |
| 77. நாளைய உலகம் நம்பிக்கையில் | - | 133 |
| 78. மன்னார் புதிய மறை மாவட்ட முதலாயர் | - | 137 |
| 79. இன்பங் கலந்த நிறைவாண்டே | - | 139 |
| 80. சுண்டிக்குழி வி. கபிரியேல் புலவர் | - | 140 |

# 1. அன்பு கடவுள் வடிவம்

நெஞ்சை மறைத்துப் பேசுகிறோம்
நினைவைத் திருப்பி மாற்றுகிறோம்
வஞ்சச் செயல்கள் நிழலாட
மனதை மாற்றி வாழுகிறோம்

தஞ்சம் ஒன்றே எமக்குண்டு
தலைவன் கிறிஸ்து நெறியுண்டு
பிஞ்சு மனமாய் வாழ்ந்திட்டாற்
பிசகா தின்பம் கண்டிடுவோம்

ஒன்றே ஞானப் பரம்பொருளாய்
ஒன்றாய் இறைவன் அமைந்துள்ளான்
ஒன்றே தெய்வ அயலுருவம்
ஒளியாய்விளங்கக் காண்பவனோ

அன்பு கடவுள் வடிவமடா
அவன்தான் பக்திச் சித்தனடா
இன்ப துன்பம் ஒரு நிலைதான்
இதனை யுணர்தல் மனநிலைதான்

பாதுகாவலன்
27.07.1979

# 2. மாண்புமிகு மாதோட்டம்

சீரொளிர் முத்துச் சிப்பித் திரைகடற் புனல்சூழ் மன்னார்
ஏரொளிர் தென்கீழ்த் திக்கில் இன்மொழித் தமிழர் வாழும்
பேரொளிர் மருதமங்கை பிறங்குபாற் றனமே போன்று
நேரொளிர் மணிநெற்கூடு நிறைவயல் மாதோட்டத்தே

திருமகள் பனுவலாட்டி திருநடம் பொலிந்து பொங்க
மருமலர் பொழில்கள் தங்கி மாங்குயிலிசைமிழற்றக்
கருமயிற் பரதமாடக் கவினெழில் மருத மங்கை
தருமசக்கரமே ஏந்தித் தளையமாதோட்ட மாண்டாள்

நீர்வளம் நிறைபாலாவி நிரம்பிநெல் வயலிற் பாய்ந்து
பார்வள முத்து சம்பா பலுகியே பெருகி வாரி
ஏர்வளஞ் சிறக்கப்பல்லோர் இனிதமுதுண்டு வாழ
ஊர்வளம் மலிந்து வேற்றூர் உணவினுக் களித்துவாழ்ந்தார்

மருதபொன் மங்கையங்கை மருவிறை விரலேபோன்றே
நெருங்கிய வயல்கள் சூழ்ந்த நீர்க்குளம் மலியத் தேங்கி
இருளடர் வனமே மேவும் இராக்கத குளத்தின் மேன்மை
பொருளிடர் தவிர்க்கும் நெல்லின் புகழ்விவ சாயஞ் சான்றே

மருத்துவ கதலி கப்பல் வாழைகள் பலாக்கள் மாக்கள்
தருகனி மதுரசாறு தளைவுறக் கழனி பாய்ந்து
கரும்புடன் செந்நெல் கானல் கன்னியர் உரைகல்லாக
கருதுகா தலரா காதே களித்திடப் புணர்ந்து வாழ்ந்தார்

பொருளுடன் மணியும் பொன்னும் புணரியின் சிப்பி முத்தும்
விரும்பி வர்த்தகமே மேவ மேற்றிசை வணிக கூட்டம்
வரும்படி எண்ணி வங்க மலிகின்ற கடன்மா தோட்டத்
திருப்பெருந் துறைமுகத்தே திரளணி குவிந்த தன்றோ

எள்ளினைப் போட்டாலெண்ணெய் இளகிடும் இளைஞர் கூட்டம்
கள்ளினற் குழலாரு ஞ்சல் கமுகினி லாடல் காணல்
உள்ளமு முலாவக் கண்கள் ஒருநிலையில்லா தாகித்
தெள்ளுபா லாவி போலுந் தீதறு பிறவி போலாம்

மாவளர் முசலி மாந்தை மாநகர் மாதோட்டத்தின்
காவளர் பள்ளி வாசல் கனநெடுங் குளமே கீர்த்தி
தேவளர் மருத சோலை திகழ் மடுக் கோவில் மாந்தை
நாவளம் பொலியும் பாடல் நவில்திருத் தலங்கள் காண்மின்

சிவதல அருட்திருக்கே தீஸ்வரத் தண்ணல் தங்கும்
தவதலப் பெருமை கண்டார் சம்பந்தர் சுந்த ரத்தார்
சிவநெறி யுண்மை கண்டார் திருத்தல மகிமை கண்டார்
பவத்தினைப் போக்குந் தீர்த்தப் பளிங்குபா லாவி கண்டார்

மன்னவ னிராச ராசன் மகத்துவ மிகுந்தே யாண்ட
நன்னகர் மாந்தை முன்னாள் நாகரின் தலைவியான
பொன்னக ரிலங்கை வேந்தன் பொற்றொடி வாழ்ந்த காந்த
மின்னொளிர்க் கோட்டையாட்சி மிகுநலஞ் செழித்த தாமே

மக்களின் குடியிருப்பு மாந்தையின் கூரைமீதே
கொக்கறுக்கோவே யென்று கூவிடும் முருகச் சேவல்
மிக்க நற் காலையேறி விரிந்தபா லாவியீறாய்ப்
பக்குவமாகச் சென்று படுபொழு திறங்குமன்றோ

சிங்கள விஷயன் தேவி சீர்மிகு வரிசைதாங்கி
மங்கள முரச கீதம் மணியொலி நாத மார்க்க
சங்கொலி தோரணங்கள் சாமரை கவிகைமேவச்
சங்கையாள் விஷையை வந்தாள் தமிழ்ப் பெருந்துறை மாதோட்டம்

அருந்தவப் பணியே மேவ அலைகடற் புனற்சூழ் மாந்தை
மருவுபா லாவி வங்க மலிதுறை மாதோட்டத்திற்
திருத்தலக் கௌரிபூசை செய்தபின் மணலூர் சென்று
திருப்பொடி நீறணிந்து சிவதவத்திருந்தான் பார்த்தன்

வலம்புரி முத்தின் கீர்த்தி வடிவெழிற் கிளியோ பெற்றா
நலம்பெற அணிந்த தாலே நாற்றிசை ஒலித்து நிற்கக்
கலமிசை வணிகர்கூட்டம் கருத்துறு மாதோட்டக்கண்
பலன்பெற வருகைதந்து பண்புயர் போங்க வைத்தார்

கடைமலிந் திலங்குகின்ற கனைகடல் மாதோட்டத்தே
விடைமிசை யெழுந்தேயுள்ளம் விளங்குநற் சிவனே செம்மை
கொடையருட்பொழிந்து காக்கக் குவித்திடு கரமே சென்னி
இடைபதித் திறைஞ்சுங்காட்சி எழின்மிகு மாட்சியாமே

இந்துநற் சமயத்தாரும் இயேசுவினடிகளாரும்
சந்திர சின்னத்தாரும் சத்திய வேதத்தாரும்
சொந்தமே பழகி வாழுஞ் சுந்தரப் பண்பை யாரும்
இந்தமா தோட்ட மன்றி எங்குமே அறியார் திண்ணம்

பண்டுள தமிழர் பண்பு பழந்தமிழ் மொழியின் பண்பு
கண்டுளம் மகிழும்பண்பு கசிந்திடும் விருந்தின் பண்பு
தொண்டுசெய் மனத்தின்பண்பு சுகநலமுசாவும் பண்பு
அண்டினோ ரறிவார் பண்பே அழகுமா தோட்டத் தேதான்

இன்றுமா எழிலாயோடும் இணையிலா அருவியாறே
அன்றுபா லாவியாறாய் அமுதநெல் வயலிற் பாய்ந்து
நன்றுயர் பெறவே சான்றோர் நாகருஞ் சங்க மேவ
மன்றுயர் மாட்சி கொண்ட மாண்புறும்மா தோட்டந்தான்

மணிப்புரங் குதிரைக் குன்று மாண்புறுமா தோட்டத்தில்
கணிப்புறுஞ் சிலாபம் மாந்தை கலையுணர் கடல்வங்காலை
அணியுறுந் துறைமுகங்கள் ஆவணங் கடைகள் வீதி
மணியலங் காரமாக மருதநென் மங்கை பூண்டாள்

அருவியா றோடுகின்ற அடர்புளி யிறக்கத்தின் கண்
மருவிடா வெள்ளமோடி மகிமையின் பெருமை கொண்ட
கருதிடு தவத்தினப்பா கவுறடி இசிலாம் பள்ளி
வருதவப் பயனே மாண்பு மலிமிகு மாதோட்டத்தே

சத்தியிற் சிவத்தை யேற்றிச் சடாமுடிக் கங்கை தாங்கி
முத்தியை மோன மாக்கி முச்சுடர்ச் சூலமேந்தி
பத்தியை நாடி நிற்கும் பக்தருக் கருளு மண்ணல்
பித்தனாய்ப் பிறையே சூடிப் பிறங்குமா தோட்டத் துற்றார்

ஆதிசிவ மாடவங்கை அனலே யாட
அரவமணி உடலாட அகிலமாடச்
சோதிவடி வானமதி சிகையே யாடச்
சுந்தரத்தா ளசைந்தாடத் தோடுமாடப்
பாதியுமை மங்கையொரு பாகனாகப்
பக்தருக்குக் காட்சிதரும் பரம ஞானி
ஆதியுறைந் தடியாரை அன்பு நோக்கும்
அருட்திருக்கே தீஸ்வரத்தே ஆட்கொண்டோனே

வத்தைகளும் வத்தகரும் மலிந்து தோன்றும்
மாந்தையெனும் மாண்புமிகு மாதோட்டத்தே
வத்திநிறை மலரிடையில் மகிமையோடு
மறை வ ளர்க்கும் மருதமடு மாதா கோவில்
பக்தியருட் பக்தருக்குப் பசியை யாற்றிப்
பலநவமும் பொழிந்தருளிப் பாதுகாக்குஞ்
சத்தியத்தின் னுண்மை நெறிச் சான்றாய் நிற்குந்
தவப்புனித செபமாலை சாந்தியாமே.

(1972இல் நானாட்டான் கலாசாரப் பேரவை நடாத்திய மன்னார் மாவட்டக் கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை)

## 3. உயிர்த்தெழுந்தாரே

உருவிலா னுருவாய் உலகினி யொளியாய்
ஒருதிரி சுடரொளி யாகிக்
கருவிலாக் கருவாய்க் கன்னிகைச் சேயாய்க்
கடுபழி சுமந்திடத் துணிந்தாய்
குருசினில் நிறைவாய்க் கொலை படப் பணிவாய்க்
கொடியவர் கைதொட விட்டாய்
திருமறை துலங்கத் திகளுரை விளங்கத்
திரிதினத் தாலுயி ர்த் தாயே

கல்லறை யதிரக் காவலர் தியங்கக்
கதிரொளிர்ச் சுடரெழுந் திலங்க
வல்லவன் மொழிந்த மணியுரை நிறைந்த
வசனமுஞ் சத்திய மாக
நல்லவ ருணர்ந்த நாதனு மெழும்ப
நரர்களி னிறப்பினுக் குயிர்ப்பு
சொல்லவ ரெழுந்தார் தூயவர் பணிந்தார்
சுயபர னுயிர்த் தெழுந்தாரே

விண்ணவர் அரசர் மண்ணவர் குரவர்
வெல்லையிற் பிறந் திறந்திருக்க
அண்ணலர் காவல் அழுத்திய கல்லில்
அரசிடு முத்திரைக் காவல்
எண்ணலர் சமூகம் இயம்பிய சொல்லை
இசைவுறக் குறிப்பதுங் கடனே
கண்ணவர் கன்னிக் கருவிலா உருவான்
கவினொளிர் உயிர்ப்பதும் பெரிதே

அண்டமும் புவியும் அனைத்தினுக் கிறைவன்
அன்பினுக் கிலக்கணமாக
மண்டல மறிய மலைமிசை மாண்டு
மனிதரின் முடிபினைக் கண்டு
அண்டரும் நடுங்க அதிர்குகை யடங்க
அருளொளி எழுந்தது முயிர்ப்பு
கண்டவர் விழுந்தார் கன்னியர் எழுந்தார்
கத்தனை நினைத்தவர் உயிர்த்தார்

இறப்பது முறக்க மெழுவது முயிர்ப்பாம்
எனத்தின முணர்வது முண்மை
சிறப்பது மலர்ச்சி சிந்தனை அயர்ச்சி
செய்வதும் பலவழி முயற்சி
துறப்பதும் அருட்சி தொடர்வதும் மருட்சி
துயரினை நினைப்பதும் உயர்ச்சி
மறப்பது பவத்தை மறுமையுள் மகிழ
மனுமக னுயிர்த்தெழுந்தாரே

## 4. குமரகுரு எழுகை

சொல்லரிய குளிர்நிறைந்த சூதே நாட்டிற்
சொல்லரசன் பணித னக்காய்ச் சூசை யப்பர்
சொல்லமுத மங்கலஞ்சேர் சொல்லின் செல்வி
துணைவரவே வெத்தலைக்குத் துரித மாகச்
சொல்லெழுதுங் குடிக்கணக்குத் தொடர்பு கொள்ள
தொகுத்த கந்தை துணியுடனே தோன்றி மாலை
சொல்லவல்ல துணிவுடையார் சுற்றமின்றி
சூழிருளின் குகைதனையே சொந்தங் கொண்டார்

வாளிமுத்து வாழ்ந்த தச்சன் வகையொன் றின்றி
வாழ்வுடைய மரியகன்னி மனையா ளோடு
நீளிருளா மிரவகல நெருங்க வெல்லை
நீள்சிலம்புக் குகையிருளில் நெடியே வீச
ஆளரவ மின்றியுறை ஆவினங்கள்
அடர்ந்திருக்க இடமின்றி அங்க லாய்க்க
நாளறிந்த மாவொதுங்க நாப்பண் தொட்டம்
நாடினரே மரியாளும் நயந்து தானே

செப்பரிய கண்ணியிலே தீட்டி வைத்த
செந்தமிழன் தாயுமுனி சிந்தை யோங்க
ஒப்பரிய தவசித்தர் உறுத்துச் சொல்லும்
ஒருமொழியாய் நிறைவுறவே உண்மைகாண
இப்புவியோர் மனமகிழ எழுந்த தோற்றம்
எழிலுருவக் குமரகுரு எழுகை காட்ட
தப்பறவே உறங்கு கண்கள் தண்ணொளியாற்
தனியொருவர்க் கேற்றினவே தனிமைகண்டோ

நீருறைந்து குளிர் பரவ நெடுமரங்கள்
நிமிர்ந்தொலியே குரவையிட நெடுங்கு தென்றல்
சீருறைந்து செழுமையுறை திருவின் செல்வி
திருமுருக குமரபர தெய்வ சோதி
ஏருறைந்த மார்கழியில் ஈன்றாள் நத்தார்
எனவழைக்கும் ஒளிவிழாவை எவரும் போற்ற
நேருறைந்த சோபனமே நிகழ்த்தி நாமும்
நீள்புவியிற் சாந்தமிக நீடு வாழ்வோம்

## 5. பரமெழுந்திடப் போந்தார்

THE PUBLIC LIBRARY
24 MAR 2012
BATTICALOA.

அந்தமில் லாத ஆறிலட் சணத்தின்
அன்பொளிர் திரித்துவத் தந்தை
அருண்மொழிக் கிலக்கா யமலிதன் சேயாய்
அவமது தொலைந்திட மனுவாய்ப்
பந்தமிற் பரமாய்ப் பரஞ்சுடர்க் குருவாய்ப்
பழுதற வந்தருள் குமரன்
பன்னிரு வயதிற் பக்குவப் பெருமை
பலருமே அறிந்திட மொழிந்து
தந்தையின் தொழிலிற் தனயனா யுழைத்துத்
தவமுழுக் கெய்திடப் பெற்று
தனிமையி லொருமை தபசெப நெறியிற்
தயக்கமில் லாதிருந் தருளச்
சிந்தனை யலகை செய்வினை புரிந்து
திகைத்திட அகன்றகல் போகச்
சித்தருளிறைவன் சேயெனும் நிறைவன்
செகத்தினர் சுவடுற நடந்தார்

நன்மைகள் பொழிந்து நன்மொழி பகர்ந்து
நரவுரு வடிவினைச் சுமந்து
நமதிடை நடந்து நரர்களும் தொடர்ந்து
நவங்களும் நாளதும் நிறைந்து
வன்மைகள் கடிந்து வழிதனைத் திறந்து
வருந்திய சுமைதனைத் தணிந்து
மனமிருள் பணிந்து வகைமுறை யறிந்து
வரமருட் பயனது முணர்ந்து
தின்மைகள் மறந்து தெருவழி புகுந்து

திரளொலி புகழ்ந்திடச் சேர்ந்து
சேசுவை வாழ்த்திச் செருசலேம் கோவில்
சென்றவர் மறுத்தெதிர் கூறத்
தன்மைகள் மாறித் தருக் குரு சேற்றித்
தற்பரன் மரித்துயிர்த் தெழுந்து
சத்தியம் நிலைக்கத் தத்துவம் மிகுக்கத்
தகுதிநற் திறமுறச் செய்தார்

செத்தவ ரெழுந்தார் செகத்தினைப் புரந்தார்
சீடரை மலை முகடழைத்தார்
'சித்துடன் கனிவு திடமருட் துணிவு
செய்திடச் செல்லுவ' னென்றார்
பத்தரும் பார்க்கப் பரகதி திறக்கப்
பதமல ரெழுந்திட வானோர்
'பார்ப்பவர் வருவார் பவவினை துறப்பார்
பார்த்தக மகிழ்ந்திடு' மென்றார்
நித்தமும் நாமும் நிந்தனை செய்து
நீசருள் நீசராய் நடந்து
நிறைமுறை தவறி நின்றிடும் போதும்
நிமலனை ஒருகணம் நினையோம்
சித்தமுஞ் செயலுஞ் சிந்தையிற் தெளிந்தாற்
செத்தபின் நாமெலாம் எழுவோம்
சிலுவையில் மரித்த சேசெமை மீட்டுச்
செயபர மெழுந்திடப் போந்தார்

பாதுகாவலன் 09.05.1970

THE PUBLIC LIBRA
24 MAR 2012
BATTICALOA.

894.8111 / HHபB.

## 6. தேற்றிடும் இறைவன்

இறையினுள் இறைவன் ஆவி
இரட்சகர் பிறப்பிற் காவி
மறைமுத லுயிரின் ஆவி
வரந்தருங் கனியின் ஆவி
நிறையெழு கொடையின் ஆவி
நிருபர்முன் பேசும் ஆவி
அறையினுட் புகுந்து சீடர்
அணுகிய ஆவி தேவா!

தேற்றிடும் இறைவன் ஆவி
திரித்துவ மூன்றாம் ஆளாம்
போற்றிடுந் தந்தை யோடு
புறவுரு வான ஆவி
மாற்றிடும் மனத்துட் தீயால்
மறைமுழுக் கான போது
ஏற்றிடும் இதய பாசம்
எழுந்தருள் நேச தேவா!

திரண்டவர் செபித்த போது
திசையெலாம் அதிரச் சத்தம்
வரண்டவர் உளமே அஞ்ச
வானமு மிடித்து மோத
மிரண்டவர் அறையி னுள்ளே
மிகுஅழற் பிளம்பு நாவும்
திரண்டவர் சீடர் மீதே
திடமனத் துணிவே யானார்

வல்லவர் எழுந்த செய்தி
வழுத்திய சீடர் பேச்சு
நல்லவர் மொழியிற் தாமே
நயந்திட உணரச் செய்த
சொல்லவர் அனுப்புந் தேவன்
சுருதியில் வழுவாத் தேவன்
பல்லவர் உளமே யென்றும்
பலகொடை யளித்துக் காப்பார்

மலையருள் மொழியின் தேவன்
மனஞ்செயல் வாக்குச் சீவன்
நிலையருள் வாழ்வை யெண்ணி
நித்தமும் அமைதி நண்ணி
கலையருள் தூய ஆவி
கத்தனை யனுப்பி யெம்மை
உலையருட் தங்க மாக்க
உறுதிபூ சுதல் தந்தாரே

(பாதுகாவலன் 06.06.1970)

## 7. காணிக்கையாக்கல்

தவமுனிவன் மோயீசன் சனங்களுக்குச்
சாற்றுமுறைச் சட்டமது தவறா வண்ணம்
அவனியிலே வரிவேதம் அமைத்து வைத்தான்
அன்றொருநாள் மரியம்மாள் அன்புச்சேயை
நவமாகப் பெற்றெடுத்த நாற்பதாம்நாள்
நாடறியச் செருசலேம் நகருக்கேகிப்
பவனபுர ஆதியிறை பட்ச மாகப்
பாலகனைக் காணிக்கைப் பரிசா யீந்தாள்

ஈந்தளித்தாள் சேயுடனே இணைப்பு றாவும்
ஈசனுக்குப் பலிப்பொருளாயிட்டு வைத்தல்
சாந்தகுண இறையுரிமைத் தனைய னாக்கல்
சட்டத்துக் கமைவாகத் தலைப்பேறான
காந்தைமரி யாள்சுத்தி கரநா ளன்று
காணிக்கை செய்துவைத்த கடவுட் சேயை
ஏந்திமகிழ் சிமியோனார் இசிறேல் மக்கள்
எதிர்பார்த்த ஆறுதலில் இன்பங் கண்டார்

ஆண்டவரே அடியானை அமைதி யாக
அருளுலக பேரின்பம் அடைய வையும்
கண்டவிழி காட்சிபெறு கருணை மாட்சி
கண்டனவே யென்றுரைத்தார் கர்த்தன் ஞானி
பண்டிருந்த சிமியோனார் பாலன் நோக்கிப்
பத்திநெறி முத்திவளர் பரம தாயே
மண்டலத்தி லிவர்வருகை மகிழ்ச்சி யோங்க
மனக்குமுற லுடையவர்க்கு வீழ்ச்சி யாமே

மாசிமதி இரண்டாம் நாள் மானர்க் கெல்லாம்
மகிழ்வூட்டுந் தாய்மரியாள் மாண்பு நாளாம்
ஆசிபெறு மெழுகுதிரி அனைவோ ரேந்தி
அணிவரியிற் பவனிவரும் அடங்காப் பற்று
தேசிகர்கள் கோவிலிலே சிறப்பு மேவும்
திருநாளை நவநாளாய்த் தெரிந்து போற்றும்
காசினியோர் இன்றுநவ காணிக்கையைக்
கன்மனனே உருகிடவே கடவுட் கீய்வார்

இறைமகனை யொப்புவித்த இனிய நாளின்
இதயமுணர் நினைவுதினம் இருகையேந்தி
நறைமலரும் மனமலரும் நயனத் தோடும்
நன்மைபெறப் புத்திசித்தம் நயந்தளித்து
மறையுணவு விருந்தருந்தி வளரன் போக்கி
மனிதரையே மதித்திடுவோம் மகிமைப்பேற்றை
குறையின்றிப் பரனருளால் கொள்வோம் திண்ணம்
குருவேற்கும் காணிக்கைக் குறிப்புத்தானே.

பாதுகாவலன் 30.01.1971

## 8. புண்ணிய மருதப் பொன்மருத்தாயே

விண்ணவர் இறைவன் விளங்கறு குணத்தான்
மிகுபரப் பொருளுறு முதல்வன்
வினையுறு நரரை மீட்டிட நினைந்த
விமலபொன் மலரொளிர் மகளார்
மண்ணவர் துதிக்க மண்ணையை மிதிக்க
மதிபத மணிந்தொளி ரிலங்க
வளைந்தணி உடுக்கள் மணிமுடி புனைய
வயங்கொளிர் கதிரவ னுடையாய்
பெண்ணவர்க் கரசி பெருமையு ளிறைவி
பெட்புறு கற்புறு தலைவி
பிணிபவம் நீங்கிப் பிறந்திடத் தவத்தின்
பிறப்பினி லருள்நிறை வரத்தாள்
எண்ணவர் குழுமி இருண்மனம் விலகி
இதமுறப் பொழிந்தருண் மதுர
எழின்முக மொளிரும் இரட்சகர் தாயே
எழுந்தருள் மடுப்பதி யாளே.

கண்ணினிற் கருணை கடலெனப் பொழிய
கரமலர் இணைகுவித் தேத்தி
கசடறப் பிணியோர் கதறிடுங் கனிவுங்
கானக விலங்குகள் ஒலியும்
பண்ணினி லிரங்கும் பலவகை இசையும்
படர்வரிக் குயிலது தொனியும்
பக்தரின் செபமும் பரிமள மணமும்
பலதிசை விளங்கிடும் புகழும்
மண்ணினிற் துலங்க மணிசெபமாலை

மகத்துவப் புதுநவப் பெருமை
மனமிடை யுதிக்க மறுத்தவர் திகைக்க
மறுகிய அலகைகள் ஒழிக்க
எண்ணினில் நினைவும் எழின்முக ஒளிவும்
இலங்கிடும் மடுப்பதி தன்னில்
எளியவர் தமக்காய் எழுந்தனை யன்றோ
எங்குறை தவிர்த்தருள் வீரே

(பாதுகாவலன் 20.06.1970)

## 9. நற்றவத்தாலுற்பவித்த அமலி

அன்றொருநாள் லூர்துபதிக் கெபியின் கண்ணே
அருள்மறையோர் சூழ்ந்திருக்க அதிர்ச்சியாக
மின்னொளிர இடிகுமுற விண்மேற் கன்னி
விளங்குமொளிர் சுடர்பரவு விரிவுட் தானே
நின்றெடுக்க அமைதிதிகழ் வானம் நோக்கி
நீலநிறக் கச்சணிந்து கரமே கூப்பிப்
பொன்னொளிரும் வெண்ணாடைபூண்டி லங்கப்
பூமலர்கள் பதமணிந்து பொலிவுற்றாளே

புன்முறுவலிதழரும்பும் வதன மின்னப்
பூத்திலங்கும் எழிலழகுப் பொலிவு மேவ
மன்றவிது மரபிலுதி மாண்பு மிக்க
மங்கைகுல மாதரசி மாசில் லாத
நன்மை நிறை திருவருளால் நானிலத்தே
நற்றவத்தால் உற்பவித்த அமலியாமே
என்றுரைத்த உத்தமியாள் தினத்தை இன்றே
இதமகிழ விழாவெடுத்தோம் இனிதாய்த் தானே

சொல்லிறைவச் சொல்லுருவைச் சொல்லாலேற்றுச்
சொல்லொளியைச் சொற்கமைந்து வெல்லைக் குன்றில்
முல்லையர்கள் சொல்மொழியை வியந்து கேட்க
முவ்வரசர் முப்பொருளால் முறையே வாழ்த்த
நல்லிதயத் தேற்றியுன்னி நானிலத்தே
நயனவிழி மௌனமொழி நவில நிற்கும்
சொல்லறத்தின் உருவான லூர்து மாதா
சொல்லிவைத்த அமுதமொழி பேணு வோமே

பூங்கரத்தைக் குவித்திறையைப் போற்றி நின்ற
பொன்மலரின் வடிவுடைய புனித காட்சி
நீங்காத படிப்பினையை நிறுத்தி வைத்து
நிலை நாட்டும் உண்மைதனை நினைவிற் கொண்டு
ஓங்கு புகழ் வானிறைவன் குமாரி சொல்லை
உலகோர்நாம் செபதபத்தால் உளத்தி ருத்தி
தீங்குவினை நரகெரியிற் சேராவண்ணம்
திகழன்புப் பாசமதாய்ச் சேர்ந்து வாழ்வோம்

ஒவ்வொருவர் தங்குறையை மறந்து வாழ்வோம்
உருஇறைவ மகன்சுவடு தொழுது வாழ்வோம்
திவ்வியமாய் நடந்தொழுகிப் புனித ராவோம்
திருமறையின் மொழிதனையே சிரமேற்கொள்வோம்
முவ்வொருவர் நாமவுண்மை விளங்க வாழ்வோம்
முறைமையுடன் கடமையினைப் போற்றி வாழ்வோம்
அவ்வுலக இன்பநிலை மற்றோர் காண்போம்
அமுதவுண வுண்டருளால் அடைவோம் வீடே

பாதுகாவலன் 06.02.1971

## 10. திரித்துவப் பரம்பொருள்

அருபரத் தொருவன் அவனியில் வந்தே
அருளிய குருபரன் பெருமை
அரியநற் செய்தி அறைவது முண்மை
அருண்ணிறை அமலிதன் தனிமை
வருபர தூதன் மங்களச் சொல்லும்
மதித்திடும் நதிக்கரை முழுக்கும்
மனுமகன் பெறவே மணிமொழி புறவு
மலர்ந்ததும் வெளிப்படை யன்றோ
திருமறை தன்னில் திருமொழி பகரும்
திருவருட் சாதனச் சடங்கில்
திருவருட் தந்தை சேயுடனாவி
திகழ் பெயர் உரைப்பதும் வேத
திருமறைச் செல்வர் தெளிவுற விளங்கும்
திரித்துவ பரம்பொருட் தன்மை
சிலைத்திட வரையில் கொலைப்படச் சுமந்த
தேவனின் பிறப்பருட் பலனே

தத்துவப் பரம சறுவமும் ஆறும்
சத்திய திரீத்துவக் கீர்த்தி
தங்களுள் நினைந்து தருக்கமும் புரிந்து
தலைக்கெறு வடங்கிய வருண்டு
வித்துவப் புலமை மிகுபுக ழாயர்
வித்தகர் அகுஸ்தினு வென்பார்
விஞ்சிய நினைவை விண்ணவர் பாலன்
விரிகடற் புணலினைக் குழியில்
முத்துறைச் சிப்பி மொண்டதை நிரப்பி
மூவொரு இறைவனைத் துலக்கி

முழுப்பொரு ளுணர்த்தி மோனமே மறைய
முனிபரன் திகைத்ததும் அறிவோம்
புத்தியிற் சித்தம் பொதிந்திடத் தினமும்
புகழ்திரீத் துவச்செப மோதி
போற்றுவம் வாழ்விற் புத்துயிர் பெறுவோம்
பொருதிடு முலகினிற் றானே

விண்ணினில் மிதித்து விண்டினி லேறி
விண்ணவர் தந்தையின் வலத்தில்
விளங்கிடச் சிலுவை விருதுட னேகும்
விமலனார் இறைபுகழ் யேசு
கண்ணிரு மணியின் கனிவுறு சீடர்
கணித்திட மகத்துவமான
கருதரும் மொழியாங் கடந்துள அப்பன்
கன்னியின் மகனுயி ராவி
பண்புடன் பொதிந்த பரம்பொருள் நாமம்
பகருமென் றுரைத்தநற் செபத்தை
பக்திகொண் டிருத்திப் பசாசினைத் துரத்திப்
பலநவம் சிறந்தருள் சிறக்க
எண்ணிய மறையில் இறைவனு மிருக்க
என்றுமே திரீத்துவப் பெருமை
ஏத்திட நாமும் இருதயத் தேற்றி
இறைவழி நடப்பதுங் கடனே

பாதுகாவலன் 14.05.1970

## 11. அன்று பிறந்தவர் இன்று பிறந்தார்

THE PUBLIC LIBRARY
24 MAR 2012
BATTICALOA.

ஆதியி லாற்ற லருட்கொடை யறிவும்
அகமகிழ் அமைதிகொள் ளாதாம்
அனைத்தையு மாளும் அருந்திற நிறைவை
அழலெரி அரவுரு சாத்தான்
சோதியி னுருவைத் தொலைத்திடத் துணிந்து
சொன்மொழி துடைத்ததின் வினையால்
சொல்லொரு தேவன் சொல்லிய வார்த்தை
சொன்னதுஞ் சுந்தரி படிய
நீதியி னிறைவன் நிழலிட உருவாய்
நிறைவுற நித்திய கன்னி
நீணில யூதா கோத்திர சிங்க
நிருபனா யுதித்திடு மேசை
ஓதிறை வாக்கார் உரைவழி வெல்லை
ஒளிர்பெற ஈன்றவற் புதமே
உணர்த்திடும் நத்தார் உணர்வினை யுணர்ந்தே
ஒழுகுவம் ஓம்புத லாலே

ஒருமுறை இறைவன் உலகினி லுதித்தார்
ஒருசிலர் கண்டனர் நேரே
ஒருவழி குலத்தில் உத்தம மகனாய்
ஒருஇடம் ஒருத்தியின் வயிற்றில்
ஒருமுறை பிறந்தார் உண்மையை உணர்ந்தார்
உயிர்ப்பதின் உறுதியில் நிலைத்தார்
உடலுடன் துலங்கும் ஒளிநெறிச் சுவட்டில்
உருவிலான் உருவதை யேற்றார்
திருமுறை யருளாற் திரும்பவும் பலியாய்த்
திருவருட் கருணையிற் பிறந்தார்

திருமகன் கிறீஸ்து திருமறை யாளர்
தினம்நினை வானதி லெழுந்தார்
அருண்முறைக் கிரிகை அனைத்திலும் பிறந்தார்
அனைவரி னுளத்திலும் பிறந்தார்
அன்புரு வாக அடியவர் நினைவை
அடைவதும் அணுகுநத் தாரே

பெண்ணிட மன்று பிறந்தவரின்று
பிறப்பதும் அற்புத நவமே
பேச்சினி லுளத்தில் பெரியவர் சொல்லிற்
பேணுநற் குருமொழி வாக்கில்
எண்ணிடந் துலங்கும் இறைநிறை நேசம்
இருத்திய அருட்பிர சாதம்
இலங்கிய வடிவில் இனியவ ருரையில்
இருதய நன்மனத் தோரில்
விண்ணிடம் பரவும் விரிகதிர்ப் பரம
விமலநற் திரித்துவத் திறையில்
விளங்கிய அன்பு விபுலையிற் துலங்க
விதித்தபுல் லணைக்குடில் வருகை
மண்ணிடம் பிறந்த மனுப்பயிர் தளைக்க
மாசறு மரியைதன் சேயாய்
மனுவுரு வெடுத்த மகத்துவ மாண்பு
மதிக்கருங் கிறீஸ்தவத் தாரே

இருளிடச் சிறையி லெளியவ ராக
இன்னொளி வருகையை நோக்கி
இருந்தவர் மீள இருளகம் விலக
எதிரிசெய் சூட்சிக ளகல
அருளிடம் மிளிர அருட்கொடை நிறைய

அணுகிய நன்மனம் மகிழ
அறிவுறு யூதர் அகந்தைக ளடங்க
அனைவரும் அருண்மறை யுண்மைப்
பொருளிட மொன்றே புகுந்திட விரும்பி
புதுத்திருக் கருணையை நுகர
புனிதரும் நிறையப் புதுமைகள் மலியப்
பொங்கிட இறைதயை நிரம்ப
சுருளிட அழகு சுந்தர வதன
சுகுணபொன் அருண்மலி அமலி
சொல்லுரு வடிவைத் தொட்டியி லீன்ற
சோபன வாழ்த்துநத் தாரே

மண்ணவர் மனமே மகிழ்ந்திடுந் தினமே
மார்கழி முடிவுறும் வாரம்
மங்கல அணிகள் மதிக்கருந் துணிகள்
மனைநலம் பெருகிடும் பணிகள்
பெண்ணவர் ஊக்கம் பெருமையின் ஆக்கம்
பிறங்கிடும் பிசகற முழுதும்
பிறரது வருகை பெரும்புகழ் தருகை
பிரியமாய் நடந்திடு முரிமை
விண்ணவர் காண விருந்தினர் காண
விதவித மாயலங் காரம்
விண்ணிறை வரவு வெத்தலை யுறவு
விரிந்துநம் முளங்களி லமைதி
பண்ணவர் பாடப் பரனருட் கருணைப்
பந்தியி லமர்ந்துண வுண்டு
பாக்கியப் பெருநாட் பயன்டனைப் பெறுவோம்
பார்புகழ் கிறீஸ்துவின் நாளே

அன்பனின் வருகை அளவிலா மகிமை
அறிந்திட முடிவிலா நிலமை
ஆதியி லன்றே அநாதியாய் நின்றே
ஆண்டருள் இறைபர மொன்றே
இன்பமாய் வாழ எண்ணிய நரர்கள்
இடஞ்சலை யகற்றிட வெண்ணி
எளியவ ருருவாய் இறையுயிர்க் கருவாய்
இடையரின் குகையிடைப் பிறந்தாய்
துன்பமாம் பவத்தைத் துணிவுடன் புரிந்த
துட்டராம் ஈனரெம் நிலையைத்
துடைத்திடும் அருளைச் சொற்பமு மெண்ணா
துலகினிற் திமிருடன் நட க்கும்
வன்பழிப் பிணியை மறந்துளம் நொந்து
மகத்துவப் பரகதிப் பேற்றை
மனதிலே நினைந்து வழிமுறை நடந்து
வணங்குதல் மனிதரெங் கடனே

1971ஆம் ஆண்டு யாழ்மறை ஆசிரியர் வெளியீடு
கிறிஸ்மஸ் மலர்

## 12. பத்தினித்தாய்

நித்திய நிறைவின் நிகரிலா நிதியில்
நிறைவுற நிருமல ஒளியாய்
நிலைவுற நினைவில் நிறைபெற நிறுத்தி
நித்தியத் துணர்பரன் வடிவில்
சத்திய உருவாய்ச் சகலசம் பூர்ண
சருவலங் காரண அருளாற்
சனித்திட வரமும் சற்குண வருளும்
சந்திர வதனபுன் னகையும்
முத்திரை பதிந்த நித்திய ஒளியாய்
முழுநவ மணிச்சுடர்ப் பிளம்பாய்
மோகன மோட்சமுடிவறா இன்பம்
முக்கிளித் திருந்திடுந் தூயோர்
பத்தியிற் துலங்கப் பரகதி எழும்பப்
பரவச எழிலணி கற்பாய்ப்
பரனுயிர் மகளாய்ப் பத்தினித் தாயாய்ப்
பக்குவம் பெற்றநல் லமுதே.

விண்ணினில் விளங்கும் வெண்மதி துலங்கும்
மிதியடி பதிந்திட இலங்கும்
விண்ணொளி கலையாய் விடியுடு முடியாய்
விண்டினில் மிதித்தெழு எழிலாய்
மண்ணினில் றோசை மலர்மண மோனம்
மதிப்புறும் தேவநல் லருளாய்
மனிதருள் மணியாய் மாமணித் திருவாய்
மனுமகன் மாசறு தாயாய்க்
கண்ணினு ளொளியாய்க் கன்னிமை நிறைவாய்க்
கற்பலங் காரண வரமாய்க்

கருதுசந் தானாள் கருவினி லுதித்துக்
கான்முளைத் தவமணி யாகப்
பெண்ணினத் திலகம் பெயருறும் மரியை
பெரும்புரட் டாதியெட் டாம்நாள்
பிறந்தஇந் நாளைப் பெருமித மகிழ்வாய்ப்
பிரியமாய் அனுசரிப் போமே

கத்தனின் நினைவைக் கருணையின் வடிவை
கண்டுளம் மகிழ்ந்தசந் தானாள்
கருத்தினி லிருத்திக் கசடற நீக்கிக்
கணவனின் சொற்றிறம் பாமை
உத்தமி யொழுகி ஒறுத்தநற் றவத்தால்
உயிரிறை அருள்வளம் பெருக
உத்தம பண்பி லோங்கிய சாந்தி
உருவுறக் கருவுறத் தானே
நித்தமுஞ் செபமும் நித்திய நெறியும்
நிலையதாய் ஒழுகிய போது
நித்திய கன்னி நிரம்பருட் சுகுணம்
நிறைவுற மகவதாய் வந்த
அத்தனி னன்னை அமலபொற் பன்னை
அருட்புரட் டாதியெட் டாம்நாள்
அனைவரும் துதிக்கும் அமுதபொற்றினமே
அன்னையின் பிறந்தநாட் டானே.

விண்ணுல கொளியாய் வெண்ணுடை யணியாய்
விளங்கிசை வானவ தூதன்
மெல்லென இறங்கி வெத்தலை மலையின்
விலங்கின மொடுங்கிடுங் குகையில்
பெண்ணவ ளொருத்தி பெருந்தகை வரத்தி

பிறங்குமா முனிவரின் தவத்தி
பெற்றநற் குழந்தை பேருல கொளியாய்ப்
பெட்புறக் கந்தையின் துணியுள்
கண்ணுறங் கிடவே கண்டுளம் மகிழ்ந்தே
கருமலை குனிந்திடப் புகுந்தே
கடுவழி நடந்தே காணுதல் பெருமை
கனிபவந் தொலைத்தருள் தருவார்
மண்ணவர் மனமே மங்கள தினமே
மனநலத் திடையரே சாந்தி
மங்கள கீதம் வழுத்திட வுரைத்து
மறைந்தனன் வானவ ரோடே.

**நயமருள் யேசு**

கன்னிகை மகனைக் கரந்தனி லேந்திக்
கனிவுறு மமுதநன் முத்தம்
கமலபொன் முகத்தில் களித்திடப் பதித்துக்
கத்தனின் தூதுவன் வாக்கை
சென்னியி லிருத்திச் சிந்தையிற் பதித்து
செய்பவத் தின்மையில் நின்று
செகந்தனைப் புரக்கச் சிறுவனாய் வந்த
செம்மலுக் கிசைந்தநற் பெயரை
உன்னியே உளத்தி லுலகிரட் சகரே
உயர்பொருள் தொனித்திட மதித்தே
ஒருங்கினை பரம உத்தம ஆதி
ஒளிர்திரித் துவத்திரண் டாமாள்
நன்னிலை இறையை நவமணிப் பிளம்பை
நன்மணி நிலத்தில முத்தை
நாயக மெனவே நவன்றனள் நாமம்
நயமருள் யேசுஇன் சொல்லே

## மங்கள அருண்மொழி

மங்கள மரியாள் மனதினில் மகிழ்ந்து
மதிக்கரும் மனுஅவ தார
வருகையை யுன்னி வணங்கியே இறையை
வழுத்திடுஞ் சமயமப் போதே
எங்கணும் அமைதி எதிரொலி யின்றி
இருதய இதந்தரு வடிவின்
இளவலாய்த் தோன்றி இனியநன் னுரையாய்
இங்கித பங்கய முகமாய்
பங்கமில் லருளாய்ப் பாக்கிய நிறைவாய்ப்
பரிவுறும் பாவையர்க் குயர்வாய்ப்
பரம்பொருட் சுடராய்ப் பரமமுவ் வாளாய்ப்
பகரரு மறுகுண உருவாய்த்
திங்களிற் றெரிந்த தெரிவையர் நீரே
திருச்சுதன் திருவகட் டுதிப்பார்
திருவுயிர்ப் பிறப்பு திருவருள் மீட்பு
தெய்வநற் கடாட்சமென் றாரே

மக்களின் தலைவி! மகத்துவ அரசி!!
மணவுற வகற்றிய தவசி!!!
வானவ வாலன் வழுத்திய வாக்கை
வருந்தியே மனதினில் மயங்கி
துக்கமுந் துயருந் துளைத்திட வுளத்திற்
துடித்திடத் துணிவு பின் கொண்டே
தூயனே! வாலா!! சுந்தரி முன்னே
தோன்றிய சொன்மொழி யென்னே?
அக்களிப் படையு மமலநற் செய்தி
அறிகுவீர் கபிரிகேல் யானே
அருந்தவப் புதல்வன் அருளவன் அன்னை

அறிகுவள் மூவ்விரு மாதம்
பக்கலி லுள்ளோர் பரிகசிப் பின்றிப்
பாக்கியம் பெற்றவ ளிசபேல்
பரமனின் பரிவு பாருளோ றறியார்
பரனுயிர் நிழலிடு மாமே

எண்ணிய பணியை இயம்பிய வானோன்
இறைபுக ழிரகசி யத்தை
ஏற்றிடு மமலி இன்னுரை யறிய
எழுதுரு வடிவமாய் நிற்க
புண்ணியப் புகழாய்ப் புனல்முனி தெளிவாய்ப்
புதரெரிப் பிளம்புநிற் பாவை
புவிமிசை மணியும் புணரியின் முத்தும்
புணர்விலாப் பிறப்பெனத் தெளிந்து
விண்ணவன் தயவை வினைபுரி பழியை
விரட்டுபொன் னுருவிலா மொழியை
வென்றிட உதிக்கும் வேதநா யகத்தை
விருப்புற அகட்டினி லேற்க
மண்ணவர் குறையை வரும்பழி நிறைவை
மங்கள அருள்மொழி வாயால்
வரனுடை அடிமை வாக்கும துரிமை
வருவதை ஏற்குவன் மெய்யே

பார்த்திபன் சேசார் பகந்திடு மாணை
பலதிசை பரந்திட ஒலிக்கப்
பரம்பரை மரபு பதிந்திட வேண்டிப்
பரமனைச் சுமந்தநற் றாயும்
சீர்த்திமன் றவிது செழுங்குல வளனும்
தென்திசைச் சிறுநகர் நாடிச்

சீறடி நோகச் செலுத்திய கழுதை
தெருவயற் சாவடி யெங்கும்
நேர்த்தியாய் நிறைந்து நிரம்பியே வழிய
நின்றிட இடமிலா தகன்றே
நீள்குகை வெல்லை நெருங்கிய வழியில்
நிமிர்ந்திடா துட்புகுந் திருந்து
மூர்த்திமுக் கடவுள் முதல்வனைத் துதித்து
முன்னிடைத் தொட்டியிற் பிணைத்து
மூவரும் ஒடுங்கி முனங்கியே யுறங்கி
முடங்கியே கிடந்தன ரன்றோ

முள்ளெரிச் சுவாலை முளைத்தெழு கன்னி
மோகன வடிவொளி யாக
முனிதவத் தோனும் முகாந்தர மின்றி
முன்னுள வாயிலின் வெளியே
உள்ளொளி யுந்த உகர்ந்தகன் றேக
உயிரின வல்லவன் சோதி
உதரமே நோவா துதித்திடப் பிறந்தே
ஒளிசுடர் பிறங்கிட வானில்
நள்ளிர வதனில் நரவுரு வடிவாய்
நலிந்திட எளிமையிற் கிடந்தே
நனிபனி வருந்தி நடுங்குறும் நிலையை
நமதுள மறிந்திடச் சிறிது
தள்ளியே நின்று தனிமையி லெண்ணின்
தற்பர னளவிலா அன்பு
சஞ்சல மின்றிச் சகிப்புடன் நடந்தால்
சாந்தமு மமைதியு மாமே

பாதுகாவலன் 04.09.1971

## 13. தவத்தை விட மாதவங்கள் வேறு முண்டோ

முன்னோர்கள் வரிவேத முறைமை கொண்டு
முயன்றுடலைத் தவநெறியில் வருத்திக் காட்டில்
நின்றுதவஞ் செய்தனரே நாற்பதுநாள்
நித்தியரும் வறண்டெனியா வனத்தில் நோற்றார்
அன்றிருத்த திருச்சபையும் அஃதே செய்ய
அனைவோரும் தேவ அருட் கருணை யுண்டே
இன்று பயன் பெறலாமே செபத்தா லென்று
எடுத்துரைத்தார் பாப்பரசர் எமக்குத்தானே

சாக்குடையும் சாம்பலுமே தரித்தே அன்று
தவவழியும் செபமுறையும் தாங்கி நோற்றார்
வாக்குடைய திருச்சபையும் வாய்மையாக
மண்ணுருவ மனிதவுடல் மண்ணாய்ப் போகும்
நோக்குவழி நெற்றிவரை சிலுவைச் சாம்பல்
நித்தியத்தை நினைந்தருள்வீர் என்ற சொல்லும்
தாக்குடைய இரட்சணியத் தவத்தைக்காட்டும்
சத்தியமெய்ப் பொருளுண்மை தவசுநாளே

உள்ளத்தை அடக்கிடுவோம் உண்மை யன்பால்
ஒன்றித்த திருமகனை உயர்த்தி வைக்க
கள்ளரிடை மாண்டுயிர்த்த கர்த்தன் மீட்பைக்
கருதிமனச் செபதபத்தால் காத்துக் கொள்ள
முள்வனமோ சாக்குடையோ முயலலின்றி
மோனநினை யொறுத்தலுமே மோட்ச எண்ணம்
தள்ளாது ஒருகணமே தனைநினைத்து
தன்பவத்தை நொந்துருகின் தவமேயாமே
உண்பதுவும் உடுப்பதுவும் உண்மைக்காக
உத்தமனார் வழிச்சுவட்டை உளத்தி லேற்றிப்
பண்பதுவாம் பிறர்நயத்தைப் பட்சத்தோடே
பழகியவர் அன்பினிலே பரமன் காணல்

எண்ணுவதுஞ் செய்வதுவும் இணைந்து வாழ்ந்தால்
இவ்வுலகின் தவநெறியை எவரும் ஏற்பார்
மண்ணுலகில் இறைமகனின் மகிமை யோங்க
மகத்துவமாய் மனிதரையே மதித்து வாழ்வோம்

முன்மொழி யாம் ஆதியிறை மோன வாக்கின்
மொழியுருவாம் இறைமகனார் மொழியாய் வந்த
அன்புருவ யேசுபரன் அடிச்சுவட்டை
அனைவோரும் தவநெறியால் அனுட்டித்தாலே
என்றுமுள நித்தியத்தின் இன்ப வீட்டை
இவ்வுலகில் கண்டுணர இனிதே யுண்டு
தன்னுயிர்போல் மன்னுயிரில் அன்புகாட்டும்
தவத்தைவிட மாதவங்கள் வேறு முண்டோ

வேறு
தவநிலைத் தவசு காலம்
தண்புனல் குளித்து நன்றாய்ப்
பவமது தொலைந்து போகப்
பங்கய மலர்ச்சி யோடு
எவருமே அறியா வண்ணம்
இன்முகத்தோடு செய்யும்
தவமுள விரத தூய்மை
சத்திய அமைதி யாமே

வாக்கினி லுண்மை தங்க
மனதருள் அன்பு பொங்க
நோக்கினிற் புனித மேவ
நோன்பினாற் தொலையும் பாவப்
போக்கினை விலத்தி வந்தாற்
புதுநலப் பிறவியாகி
மோக்கிச வழியிற் புக்க
முழுமனத் தவசு நன்றே

செய்வதைச் செபமா யாக்கித்
தேவனுக் கொப்புவித்தால்
மெய்யதா யிறைவன் நன்மை
விளங்கிடத் துலங்கும் பூவில்
பொய்யது அழிந்து போகும்
பொறுமையும் தயையும் மேவும்
துய்யவன் யேசு நாத
சுதனருள் நல்கு வாரே

சத்திய சாங்கோ பாங்கத்
தன்மையும் வெளிச்சமாகப்
புத்தியில் விவேக மோங்கப்
புத்திரர் சமுக மாகப்
பத்தியில் வளர நாமும்
பரமதாய் செபத்தின் மாலை
சித்தியிற் சிறக்க வோதி
சிறுதவ ஒறுத்தல் செய்வோம்

தின்மையில் நின்று காக்கச்
சிலுவையில் மரித்தார் யேசு
அன்றவர் எம்மை அன்பால்
அரவணைத் திருக்காவிட்டால்
இன்றுநம் நிலமை யென்ன
எண்ணியே தியானஞ் செய்ய
நன்றுள சிலுவைப் பாதை
நாடுவோம் தவசு நாளே.

# 14. மறைவளர்க்கும் மருதமடு

தேரோடும் வீதியிலே செங்கயலார் நீரோடுங்
காரோடும் வான்வெளியே கண்களிக்கச் – சீரோடும்
வல்லபர னேந்தி மறைவளர்க்கும் மாமடுவின்
நல்லவளே நின்றருள்வாய் நா.

கும்பிடுதற் குகந்தபதி குளிப்பூஞ் சோலை
குலவுமயில் நடனமிடக் குயிலே பாடக்
கொம்பிருந்து முழவமிடக் குரங்கினங்கள்
குழலொலியே கும்பியிடக் கோமான் செல்வி
அம்புலியை அடிமிதித்தே அருண னாடை
அலங்கரிக்க வெள்ளிபுனை அமல அன்னை
கொம்புதுளிர் மருதமடுக் கோவில் கொண்டு
குறையிடுவார் நிறைவாகக் கொடுத்தாள் வாளே

திங்களினைப் பதமணிந்து செவ்வாய் பூணிச்
சிரிப்பொலிக்கும் புதனேந்து வியாழ மேனி
தங்கமென வெள்ளிதலை தரித்திலங்கச்
சனியனுமே சருகிடாத சருவலோக
துங்கபர ராக்கினியாய்த் தொழுவோர் கானத்
தூதுவர்கள் வானிசைக்கச் சோதியாக
செங்கதிர்சேர் ஞாயிறுடை திகழத் தாங்கித்
தெய்வபதி தனக்கெழுந்த தேவதாயே

அன்றுரைத்த இறைமகனார் அமுதவாக்கும்
அருண்மறையின் ஆராய்ச்சி அணுகும் நோக்கும்
இன்றுளோர்கள் அறிந்துமன இடறலாக்கும்
எளியகுறை தவிர்த்தருளை இனிதுகாக்கும்

பொன்மொழிகள் பொழிந்தருளும் புதுமையாக்கும்
புனிதகுருத் தேமொழியும் புத்திதாக்கும்
நன்மொழிகள் நல்லவரை நயந்து வார்க்கும்
நளினமடு மறைவளர்க்கும் நம்பினோர்க்கே

அந்திமலர்க் கரங்குவித்தே அடியோர் கூட்டம்
அண்ணாந்தே அழகுவிழி அருளை நோக்கி
குந்திமுழந் தாட்பணிந்து குறைநினைந்து
கொடியமனத் துயர்மறந்து கும்பிட் டோங்கிச்
சிந்தனையாற் செபமாலை செப்பி யோர்க்கே
திருவளரும் மருதமடுச் சேதி மத்தே
வந்திருந்தீர் சாந்தியருள் மகிழ்ச்சி நல்க
வனசமூக அருளொளியை வழங்கு வீரே

சிந்தைமகிழ் செபமாலை செபித்து நிற்கத்
தேனமுத கானவிசை சிந்தி நிற்கக்
கந்தையுடை யிலவலர்கள் கதறி நிற்கக்
கருதுமன அமைதியினர் கசிந்து நிற்கத்
தந்தையினை நாடிவந்த தனையன் போன்று
தரித்திரத்தின் கொடுமையுணர்ந்தணுகி நிற்க
விந்தைதரும் புதுமையருள் விளங்கி நிற்க
விமலபரம் நிறைந்தகன்னி விளங்குவாளே

மாதெய்தான் வான்பெறுவான் வான்பெறானே
மருதமடு மாதெய்தான் மானி லத்தே
மாதெய்தி மாசகற்றி மரியாளென்று
மகிமைபெறு மானாளின் மகவாய் வந்தே
தாதெய்தித் தடி துளிர்த்த தபதியோனைத்
தலைவனென நிறையுயலத் தையலார்க்கு

சாதெய்தி மனவமைதி தந்தாள் கின்ற
    தயாபதியே தருமகுண தயாளத்தாளே

உருவிலானே உருவாகி உருவிலொன்றாய்
    உருவான மகனாகி உலக முய்ய
கருவிலாத கருவாகுங் கன்னித் தாய்மை
    கசடகலக் கருணையாகிக் கடாட்சம் பெற்ற
திருவளரு மருதமடுச் சேதிமத்தில்
    செடி கருகா எரியிடையில் சிறந்த நங்கை
திருச்சபையின் திருவொளியாய்த் தோன்றி ஞானத்
    திசைபரவ எழுந்தருளும் தெய்வமாதோ

சீவபலி யொப்புவிக்கத் தேடி வந்து
    சிந்தைமனக் கிரிகைவாக்குச் சிதறு தொன்றாய்ப்
பாவவழி வெறுத்திரங்கிப் பங்கு கொண்டு
    பரம்பொருளைத் தந்தளித்த பரம கன்னி
காவனத்தில் மறைவளர்க்கக் கருணை பெய்யும்
    கடாட்சமதைக் கருதுமடு கண்களிக்கத்
தேவபர அமைதி நிலைத் தெய்வ சாந்தி
    திருத்தலத்திற் பொழிந்தருளத்திரண்டோர் காண்பார்

பத்தியருள் முத்திநெறி பகர்ந்து நிற்கப்
    பக்தகண முளமுருகிப் பாடி யோதி
நத்திவர நாற்றிசையும் நலமே சிந்த
    நாவொலிக்க மெய்மறந்து நாப்பன் காட்டில்
சத்தியத்தி னொழுக்கநெறி தவறா நின்று
    சாற்று முறை கேட்டருளிச் சாந்த மெய்தி
வத்தியொளி பத்தியெரி மனத்தே தூய்மை
    மறைவளர்க்கும் மருதமடு மாண்புதானே

பலிபூசை  நிகழ்ந்திடவும் பாடுவோரும்
பலிப்பொருளை அருந்துவோரும் பாவியோரும்
வலிமனங் கசிந்துதவ மணுகுவோரும்
மனநிலையை யோதுவோரும் வறுமை யோரும்
கலிதீர்க்க வணங்குவோரும் கடமையோரும்
கவனமதா யொழுகுவோருங் காணுவோரும்
கலிப்பறவே நடந்தருளும் தகைமை யொன்றே
தனியமைதி நிலவுமடு சாந்த மாமே

தண்டலைசூழ் மருமடுத் தனிமை யோங்கிச்
சகலரையும் நிறைவுகொளத் தவிசில் மேவி
வண்டினங்க ளிசைபாட மலரே சூழ
மனந்தளர்ந்தோர் மலர்ச்சிபெற மகிமை காணக்
கண்டவர்கள் கசியமலர்க் கரமே கூப்பிக்
கருதுமன அமைதிநிலை  களிப்பார் கண்டே
முண்டகத்தாள் முத்தமிடும் முத்தி யோர்க்கு
மோனநிலை அருள்புரிவாள் மோட்ச தாயே

## 15. அடக்கமிலா நாட்டமுடன் அணுகலேனோ?

மணியோசை யேசுவிடம் வாவென்றோத
மனுக்குலமே மீட்டவரை மறையா லோத
மணிமொழிகள் அருள்நூலில் வாசித் தோத
மாசுதனை நினைந்துருகி மனதி லோதப்
பணிவோடே இறையருளைப் பரிவாய் வேண்டிப்
பலிக்களத்துப் பலிப்பொருளைப் பகிர்ந்து கொள்ள
அணிந்துவரும் அழகுடையோம் ஆலயத்துள்
அடக்கமிலா நாட்டமுடன் அணுகலேனோ?

ஆடையலங் காரமென்ன? ஆடவர்கள்
அழகுசடைக் கோலமென்ன? அறிவுப்பெண்கள்
வாடை மணம் வீசுகுழல் வண்ண மென்ன?
மனமிழுக்கும் ம்ாயவலை வகைதா னென்ன?
கோடையிடி விழுந்தென்ன? குருக்கள் சொற்கள்
கோவிலுள்ளே ஒலித்தென்ன? கொள்கை யென்ன?
பாடையிலே போவாரைப் பார்த்து மென்ன?
பயம்நீங்கப் படுகுழியைப் பார்க்கின்றோமே

அருளுருவ வடிவமுள் அமைதித் தேவன்
ஆலயத்துள் எழுந்திருக்கும் அன்பின் தேவன்
இருளகற்றி இரட்சித்து இன்ப வீட்டை
எமக்கருளச் சிலுவையிலே இறந்த பாட்டைக்
கருத்தினிலே இருந்தாமற் கண்கள் பார்க்கக்
கவலைநிறை மனமோடக் கவனமின்றி
உருவாக நிற்கின்றோம் உருக்கமின்றி
உள்ளத்து விசுவாச உயிர்தா னெங்கே?

அன்பின்றி அமைதியில்லை அடக்கமில்லை
ஆண்டவனைத் தியானிக்க அருமையில்லை
பொன்பூத்துப் புகழ் பெறவே போவதில்லை
புதுவாழ்வு காண்பதற்குப் போவதில்லை
தின்மைகளால் நிறைந்தமனம் திருந்தவில்லை
திருவருளின் பெருமைதனிற் சிந்தையில்லை
நன்மைசெய்யப் பிறந்தோமே நாட்டமில்லை
நால்வருடன் போகின்றோம் நாமுந்தானே

பாதுகாவலன் 14.07.1973

## 16. ஏன் இந்த நிலமை

சிந்தனை சாந்தி செய்யுந்
திருத்தலக் கோவி லுள்ளே
வந்தனை வணக்கஞ் செய்ய
வந்துநான் பக்தியோடே
மந்திரச் செபங்க ளோத
வாயினால் முணுமுணுத்தேன்
எந்தனை அருட்டவில்லை
ஏனிந்த நிலமை தானோ?

கண்களை மூடலாமோ
கடவுளை நினைக்க லாமோ
புண்ணியஞ் செய்யப் பாவம்
புந்தியால் நொந்து நின்றேன்
எண்ணிய பூசை யொப்பில்
இதயமே ஓடவிட்டேன்
கண்முனே காணுங் கோலங்
கடவுளை யோட்டு தையோ

இறைவனின் சமூக மென்றே
இயற்கையினெழியா ரெல்லாம்
நிறையினைக் காத்து நின்றால்
நெறியுளோ ரமைதி நோக்க
மறைவளர் கருணை யன்பு
மக்களை யாட்சி கொள்ள
இறைமகன் அன்பர் நாமும்
இரக்கமா யுருக லாமே

பாதுகாவலன் 11-08-1973

## 17. இன்றிருப்பார் நாளையில்லை

ஆதியிலே ஆதாமே அடைந்த பாவ
ஆக்கினைக்கே ஆளானான் அதனா லன்றோ
சோதியுரு வானபரன் சுதனா மேசு
தோன்றியபின் குருத்துவத்தின் தூய்மை யால்வி
பூதியன்று நெற்றியிலே பூசும்போது
புண்ணியஞ்செய் மானிடனே போவாய் மண்ணாய்
ஓதியமெய் வார்த்தைதனை உணர்ந்தோ மானால்
ஓதாம லொருநாளும் உறங்க மாட்டோம்

உறங்குகின்ற நிலமையதே உண்மைச் சாவாம்
உணர்ந்தவர்க ளொருபோதும் ஓய்வுகாணாக்
மறந்தாலும் வானுலகை மறக்கமாட்டார்
வாய்வீறு பேசுவதில் மகிமை காணார்
இறந்தோரின் தொகையளவோ எண்ணலாகா
ஏனிந்தச் சீவியரோ எண்ணவில்லை
இறந்தபின்போ நம்முறவோர் இவ்வாறேதான்
எண்ணாது வாழ்ந்திட்டால் என்ன செய்வோம்

எப்பொழுதும் இறவாத உயர்ந்த ஆன்மா
இன்பமுணர் கிறீஸ்தவர்கள் உண்மையாக
இப்பொழுதும் மறவாரே இறந்தாத்தம்மை
இதயத்தில் வைத்திருந்தே இக்காலத்தும்
அப்பொழுதே வைத்திருந்த அன்பே போல
அனுதினமும் அமைதிபெற அவர்கட்காக
இப்பொழுதும் வேண்டுவரே இதனையெண்ணி
ஏன்நாமே எண்ணாதே இருக்கின்றோமே.

உன்விரலில் வலிஇருந்தால் உறக்கமில்லை
உறவிருந்தால் மறந்திடுதல் ஒழுக்கமில்லை
என்விசனம் போக்குற்கு ஒருவன் தோழன்
இனிமையுடன் கேட்டாய்ந்தால் இதயஞ்சாந்தி
அன்றாடம் அன்புசெய்த அன்பர் தம்மை
அறியாது மறந்திடுதல் அநியாயந்தான்
இன்றிருப்பார் நாளையில்லை இதுவே உந்தன்
இரகசியம் மறுவுலகில் இறைவன் முன்பே

பாதுகாவலன் 17.11.1973

## 18. நிறைமகனார் பிறப்பு விழா

இறைபரனே இரட்சிக்க எழுந்து வந்தார்
இளங்கன்னி கருவுற்று ஏற்ற முற்றார்
இறைவாக்கோர் அருண்மொழியின் ஏற்பாடானாற்
ஏவைகுலம் காக்கவந்த ஏசு நேசர்
குறைகூறும் மனுவுலகில் குளிரினூடே
குழந்தைபர லோகவழி திறந்து வந்தார்
நிறைமகனார் பிறப்புவிழா நினைக்க வேண்டும்
நித்தியத்துட் புகுந்திடவே நெஞ்சம் வேண்டும்

புத்தாடை புதுவுணவுப் போசனங்கள்
புதிதாகத் தேடுவதிற் புதிரேயில்லை
நத்தாரைக் கொண்டாடும் நாலாதிக்கு
நானிலத்தோர் கொண்டாட்டம் நாமேகண்டோம்
உத்தான மானபரன் உண்மைகாண
ஒருவரன்பே ஒருவரிலே ஒளிர்தல் வேண்டும்
வித்தான கடுகுமணி விருட்சம் போன்றே
வேஷமிலா விசுவாசம் விளங்கவேண்டும்

மண்ணுலகிற் பிறப்புவிழா மகிமை யென்றால்
மனுமகனார் பிறப்புவிழா மாட்சி யன்றோ
புண்ணியரின் புகழுலகம் புகுவோ மன்றால்
புலனடக்கிப் புதுப்பிறவி புகுதல் வேண்டும்
பெண்ணிடத்தே தேவமகன் பிறந்தா ரென்றால்
பேரன்பு தோன்றிடலாம் பெருமையோடே
எண்ணமதிற் பிறக்கவேண்டும் எளிமை வாழ்வே
இல்லையெனில் இவ்விழாவால் இன்பமுண்டோ?

பாதுகாவலன் 22.12.1973

## 19. இன்பசெபமாலை நவம் இன்றும் காண்போம்

நாகரிக நோய்பிடித்து நரக வாழ்வு
நாறுநகர்ப் பாவநிலை நயந்து மீட்கச்
சோகரிய இறைமகனார் துளிர்த்த கண்ணீர்
துடைத்திடவே திமிங்குமுனி துயர மேவி
மாகரிய வரிப்புலிவாழ் வனத்திற்புக்கி
மனுவுடலை வலுகசையால் வருத்தி மாய்க்க
வாகரிய சாமளகோ மளசீ மாட்டி
வானவர்முப் பேர்மகிழ வடிவாய் வந்தாள்

தவசியெனும் புனிதமுனி தவத்தின் மிக்காய்
சகலருமே நுமதுபிர சங்கக் கேட்க
நவமாக வானவர்கள் நான்கு திக்கும்
நாவதிரும் மணியோசை நாத மார்க்கும்
நவசெய்தி நடந்தருள நகரி னுள்ளே
நன்மனதாய்ச் செல்கவெனும் நளின வாக்கை
உவப்புறவே யுணர்ந்தமல வுற்பவத்தாள்
ஒளிர்கதிர்க்கை செபமாலை ஓதி யீந்தாள்

அம்புலியைப் பூம்பதத்தில் அணிந்த அன்னை
அருண்மொழியை நம்புமுனி அறையும்போது
வெம்புயலெ ழுந்துமுகில் மின்னல்மின்னி
விரைந்திடித்துக் குமுறுகதிர் வெயிலொ ழித்து
அம்புவியும் அதிர்ந்திடவே அதிர்ச்சி கொண்டு
அனைவோரும் நடுநடுங்கி அழுது கூவித்
தம்பவத்தை நினைந்திரங்கத் தாயார் தோன்றி
தாட்சணியங் கூர்ந்தருளத் தஞ்ச மீந்தார்

அன்பருளே நிறைவுகன்னி அமுதவாக்கை
அடர்ந்திருந்த செனர்களெல்லாம் அறிந்தாரன்றே
இன்பசெப மாலைநவம் இன்றும் காண
இறைமகனார் மொழிந்த செபம் ஏற்றி யுன்னி
நன்மனத்தின் விசுவாச நம்பிக்கையாய்
நல்லதம திரித்துவமும் நயந்து போற்றி
பொன்மொழிமங் களத்துண்மைப் புதுமை கண்டால்
புவனவழி பரகதியும் புகுவோம்தானே

சொல்தந்த பரமனாரும் தூய தாயும்
தொல்லுலகில் வாழ்ந்தநல சுகிர்தம் போற்ற
வல்லபரன் வரலாறு மரணம் காட்சி
மதித்துன்னிச் செபித்துவந்து மகிமைகாண
நல்விளைவுக் காரணிக்கம் நாடோறுந்தான்
நம்மனையிற் சிந்தித்து நயந்தே ஓதின்
எல்லையிலா நல்லருள்கள் இதமேயாகும்
இனிமறவோம் செபமாலை எழிலே காண்போம்

## 20. மருமாதா

வானிலங்கு ஞாயிறணி வான்திங்கள் பாதமணி
மீனிலங்கு செவ்வாய் மிகுபுதனாள் – மானிலங்கு
மங்கை வியாழமலர் மாண்புவெள்ளி கொண்டுபவ
வங்கை சனி நீத்தெழுந்தாள் மாதா

மன்னவன் றவிது மரபினி லுதித்த
மாசறு வெண்கொடி மலரே
மணவினை புகுந்து மனதினை யடக்கி
மகிழ்தவத் துறவிபத் தினியே
முன்னவன் இறைவன் மொழிவடி வாக
முட்புத ரெழுந்தருள் வரத்தி
முனிதிமிங் கினுக்கு மொழிசெப மாலை
முத்தென ஈந்தநன் மணியே
சின்னவன் மனுவாய்ச் செகத்தினிற் றோன்ற
திருவு ளத் தடங்கிய திருவே
திருமகன் தாயாய்ச் சிறுபுலி கரடி
திரள்வனத் திருப்பதிக் கண்ணே
பொன்னவன் படைத்த புதுநவத் தவிசில்
புரந்தருள் பொழிந்தருள் மாரி
புண்ணிய மருதப் பொன்மடுத் தாயே
பொறுத்தெமை ஆண்டருள் வாயே

பவவினை யடராப் பழுதிலாக் கன்னி
பலவர மருள்நிறை பொன்னி
பரம்பொருட் தந்தை பணிவுறு சிந்தை
பரிவுநன் மகளுறை விந்தை
தவவினைப் பயனாய்ச் சத்திய ஒளியின்

தத்துவத் திருச்சபைத் தாயே
சத்துரு அலகை தந்திர மசக்கைத்
தழலெரி நரகினிற் தள்ளி
அவமது போகா அடைந்தருட் பேறும்
அருந்தவக் குருசினின் வழியே
அனைவரும் பெறவே அருஞ்செப மாலை
அறைந்தபொன் அமுதநல் வரமே
நவமருள் மருத நற்பதி மடுவில்
நாயகங் கொண்டெழுந் தருளி
நன்மைகள் புரியும் நாதனின்தாயே
நல்வழி நடத்திடு வாயே

மணிமுடி சூடும் மகிமையம் பரத்தி
வானகம் புவியினுக் கரசி
மனவிருள் விலக்கி மடமையை நீக்கி
மாண்புகொள் ளில்லறத் தலைவி
பிணியிடர் கவலை பெருவினை மிடிமை
பிசகற அகற்றருள் வரத்தி
பிழைபல புரிந்த பெரும்பவப் பாவி
பெறுவது முனதருட் கிருபை
அணிதரு வனத்துள் அடர்புலி கரடி
அகன்றிடப் புதுமைசெய் குணத்தி
அலகையை மிதித்த அருட்குரு குலத்தி
அமலவுற் பவமலர் முகத்தி
மணிகொலு வெழுந்த மடுப்பதி யாளே
மலர்க்கரங் குவித்திரு விழியால்
மனமுனை வணங்க மணிசெப மாலை
வருடிடப் பரவசந் தானே

## 21. சுவாமி ஞானப்பிரகாசர் அஞ்சலி

மங்களச்சொ லுருவாகி மனுவாய்த் தோன்றி
மாசற்ற கன்னிமரி மகவாய் வந்த
செங்கமல வதனமொளிர் சேசு நாதர்
செகம்புரக்கச் சிலுவையிலே சிந்துமுன்னே
மங்காத பரமதிறி மகிமையோனாய்
வாழுமுன்னே வரலாறு வகுத்தவாறே
எங்குமிறை திருப்பணியை ஏற்றி யாளும்
இறைமகனைக் கவிதைமுன்னே இறைஞ்சி னேனே
சீரொளியே செழுங்கலையே சிறப்புற் றோங்கத்
திருவிளங்கும் நல்லைநகர்த் திறலோன் சிற்பி
பேரொளியே பெருந்தகையே பெரிய ஞானப்
பிரகாச சுவாமியெனும் பெருமையோனே
நேரொளியின் நிமலகுரு நெறியில் நின்றே
நீசகுலத் தாழ்வுடையோர் நேசனாக
ஆரொளியே அனைவரையும் அமல அன்பில்
அரவணைத்தா யறிவுடையோ னருளாற் றானே

அன்புமொழி யமுதகுண அறிவுக் குன்றாய்
அருள்சுரக்கும் ஆண்டவனின் அமைதி நோக்காய்
என்புருக ஆன்மநெறி இரக்கம் விஞ்சி
எளியவர்கட் குணவளித்தே எளிமை நீக்கி
இன்புறவே வழிகாட்டி இயற்கை யோடே
எதிரிட்டே உழைப்பாளி யென்றே வாழ்ந்து
உன்புகழை அறியாதே ஒன்றே தெய்வம்
ஒருகுலமே இறைகுலமென் றெண்ணிநீரே

ஆன்மவிடா யாட்சிகொள ஆசை யின்பம்
அறுத்தெறிந்தே அருங்குருவா யாணவத்தை
வான்பதிக்காய்த் தியாகமாகி மறைபரப்ப
வறியவர்கள் பங்குகளை மாண்பா யாக்கி
தேன்மணக்குஞ் செந்தமிட்குந் தேடா தோர்க்குஞ்
சிந்தைவிருந்தாகி நின்றே செளிப்பு மாக்கி
நான்குசுவி சேடகர்கள் நவின்ற செய்தி
நாற்றிசையும் நன்மனத்தோர் நாடவைத்தாய்

பருமரமாய் நடுவூரிற் பழுத்திருந்து
பயனளிக்குந் தீங்கனியைப் பகிர்ந்தளிக்கும்
அருமையென எழுத்துலகில் இடமே பெற்றே
அருண்மறையின் தவமுனியாய் அன்பாலோம்பி
கருமுகிலே அஞ்சிடவுங் கனிவு வண்மை
கடைப்பிடித்த துறவோனாய்க் கடல்போல் ஞான
அருள்பெற்றே ஆராய்ச்சி அறிவுச் செல்வம்
அள்ளியள்ளி வீசியவுன் ஆற்றலென்னே!

பாரறியப் பன்பொழியாற் படைத்த நூல்கள்
பலநாட்டார் போற்றுதற்குப் பண்பு கொண்டாய்
ஊரறிய உதாரகுண உண்மையாக
உழைத்தவுந்தன் பெருமைதன்னை ஒப்பியற்றான்
நேரறியச் செய்ததுவே நேர்மைநீதி
நெறிதவறா யோகியென நினைத்தவர்கள்
வாரமுடன் சேர்மணிக்கே வருக வென்க
மறுத்துரைத்த வித்தகனே மகிமை யன்றோ

தேன்சுவைக்குஞ் செந்தமிழின் சிந்தையோனாய்
திரட்டிவைத்த சுவடிகளைத் தெரிந்தெடுத்தே
ஏன் சுவையா றென்றமுத எழுத்தாற் தீட்டி
எத்தனையோ நூல்வடித்து ஏழையோனாய்
வான்சுவர்க்க வழிவகுத்து வறியவர்க்கு
வழங்குகொடை வள்ளலாக வாழ்ந்து காட்டி
தான்நினைத்த கழஞ்சியச் சொல் சாகாதாக்கி
தமிழனையே நிமிரவைத்த சான்றோன் நீயே.

தத்துவத்தைத் தர்க்கமதாய்த் தந்தளித்துச்
சமயநெறிப் பணியாற்றிச் சன்மார்க்கத்தால்
சத்துருவை விட்டிதயம் தயையே நாடச்
சஞ்சரிக்குஞ் சிட்டாகத் தரையே போற்ற
சத்தியத்தின் போதகத்தைச் சாற்று முண்மைத்
தவமுடை யோன் தருமகுண தமிழன் ஆசான்
வித்தகனாய்ச் சேவகனாய் விளங்கி நல்ல
விரிவுரைகள் வேதாந்தஞ் செய்தாயாமே

கல்வடித்த சிற்பியிலுங் கற்பனையாற்
கருத்தமைத்த சொல்லுழவன் கலக்கியானம்
எல்லையில்லாப் பெருமையென எவரும் போற்ற
எம்ஞானப் பிரகாச அடிகளாரின்
நல்லுருவை முத்திரையிற் பொறிக்க வென்றே
நன்மனதாய்ச் சேர்மனியூர் செய்த தொன்றே
செல்லுமொழித் தமிழினத்தார் சீர்த்தி யென்றாற்
திருத்தொண்டைப் போற்றுதற்குச் செய்தோ மென்னே

மக்களுக்காய்த் திருப்பலியில் மன்றாட்டாக
மனமுருகச் செபித்திடவும் வழியே காட்ட
மிக்கமணி நேரமது வேண்டி னாலும்
மிகமுயற்சி கைவிடாத விவேகி யாகத்
தக்கவனாய் ஐம்பதாண்டு தரையில் வாழ்ந்து
தமிழ்மொழிபோ லறுபதுக்குள் தகமை பெற்றே
அக்களிப்போ டாழ்ந்திருந்தே ஆராய்ந்தே நீ
அரும்பணியாற் தமிழ்ப் பெருமை அடைந்தா யாமே

சொற்பிறப்பி னொப்பியலே தொகுத்ததாலே
தொன்மொழிசெந் தமிழ்மொழியின் தோற்றங் கண்டாய்
பெற்ற இன்பம் பிறரடைய பெரிது ழைத்தாய்
பிறநாட்டா ராராய்ச்சி பெற்றிருந்தால்
உற்றகடல் மரியாதை உலகுக் கீந்த
உயர்புகழ்போ லுன்புகழும் ஓங்கி நிற்கும்
கற்றகலை விஞ்ஞானக் கழக மேவுங்
கருத்தறிஞர் சேர்மனியூர் கணித்தாராமே

சரித்திரத்தை யாராய்ந்து தமிழன் பூர்வ
சாதிமொழி சமயநிலை தனித்தே நூல்கள்
விரித்தெழுதி வித்தகனாய் விளங்கி நின்று
வேதத்தி னுட்பொருளை விளக்க மாக்கி
உரிமை கொண்டு சமயவழி உயர்ச்சி காண
ஊர்களிலே சமுகமுட னுழைத்தா யோடாய்
பரிசுத்த சின்னப்பர் பகர்ந்த வாக்கு
பலித்திடவே வாழ்ந்தாயாம் பண்பு தானே

மாட்டுவண்டிப் பிரயாணம் மத்தி யானம்
மக்களுக்கு ஞாயிற்று மகிமைப் பூசை
ஈட்டமுடன் வைத்தேநீ இளைப்பா றாதே
எறிவெயிலில் மனைநாடி யிருந்து சோம்பல்
வாட்டமின்றிக் கட்டாய மானதின்றி
மயக்கமின்றி யுலைந்தகளை வருத்தமின்றி
நாட்டமுடன் படித்தின்ப நன்மைகண்டே
நற்றமிழை நாடிவர நயந்தாயாமே

சைவமதப் பழமையிலே தளைத்த நல்லூர்த்
தமிழ்மக்கள் சத்தியத்துட் சார்வ தென்றால்
ஆவதுவோ அதிசயமோ அறிந்து பாரும்
அறிவுடையா னாற்றலிலே அன்பு விஞ்சத்
தேவஅருட் கலைத்திறமை தெளிந்த ஞானக்
சிந்தனையுஞ் சொற்பெருக்கும் சேர்ந்த தாலே
நாவலனே கால்நடையாய் நடந்து சென்று
நல்லாயன் வழியினிலே சேர்த்தா யாமே

நம்நாடும் நந்தமிழும் நாளும் வாழ
நல்லறிஞர் ஆராய்ச்சி நாடி ஆய
எம்ஞானப் பிரகாச அடிக ளாரால்
எழுதிவைத்த தேனுரைகள் எத்தனையோ
நம்பகமாய் உலகதமிழ் ஆராய்ச்சிக்கு
நன்மைகளைப் புரிந்ததென நாமே கேட்க
எம்முணர்ச்சி சக்திபெற இன்பங் கண்டோம்
என்செய்தோம் இவர்தனக்கே என்றே கேண்மின்

இல்லறமே நல்லறமென் றெண்ணி னாலும்
இந்த இன்பஞ் சிற்றின்ப மென்றே தள்ளி
சொல்லுருவ நல்லுருவாய்த் தோன்றி மண்ணில்
தோசமற இரட்சித்த தோன்றல் யேசு
செல்வஅருட் பூரணியாள் தியாகி சேவை
சிறப்புடைய தெனநினைந்து சிந்தை யோடே
எல்லையிலா வானின்ப மினிதே காண
இறை பணியின்துறவறத்தில் இணைந்தா யாமே

தன்னுயிர் போல் மன்னுயிரில் அன்புகாட்டுந்
தவத்தைவிட மாதவங்கள் இல்லை யென்றே
சன்மார்க்க வழிகாட்டச் சமூகத் தொண்டு
தன்னிகரில் லாதவொரு சாந்தி நெஞ்சம்
என்னாளும் இறைமகனின் இரட்சிப் பிற்றான்
என்பணியே இருப்பதென எண்ணிப் போலும்
பன்மொழியிற் புலமைகொண்டு பரம இன்பம்
பலரோடு பகிர்ந்தளித்துப் பண்புற் றாயோ.

மண்ணுடலைப் பொன்னுடலாய் மாற்ற வெண்ணி
மானிடரின் சமூகத்தை மதித்துத் தானே
மண்பொன்னை மாதினையே மயக்க மென்றே
மாதுறவி யாகிமனம் மாற்ற மாகி
எண்ணெழுத்தை அறிஞருமே ஏற்க ஓயா
திரவுபக லாராய்ச்சி இனிதே செய்தே
கண்மணிபோற் காத்தவையோ கணக்கி லில்லை
கற்றவனே! வித்தகனே!! கண்டோமில்லை

நீலவண்ணப் பட்டாடை நிலமாதிற்கு
நின்றுமானங் காத்தருள நிறைந்தபக்தி
வாலமொழி தமிழ்மொழியே மதித்தா ராய்ந்த
வகையான மொழிகளுள்ளே மதுரவாசப்
பாலமுத தெய்வமணம் பரவ வைத்தே
பலமொழிக்குந் தாய்மொழியே தமிழே யென்று
ஓலமிட்டு மார்தட்டி உறுதிசெய்த
உத்தமனே வித்தகனே ஒருவன் நீயே

இனிய மொழி எமது மொழி எனவே பேச
எத்திசையும் புகழ்மணக்க எடுத்துரைக்க
தனிமைமொழி தமிழ்மொழியே தாரணிக்குத்
தமிழரென்ற இனமுண்டு தனியே நல்ல
மனிதபண்பா டுண்டெனவே மானங்காத்த
மறைமுனிவன் வளர்கலையை வளர்க்க நாமும்
கனிவுரிமை கண்ணியமுங் கட்டுப்பாடும்
கருத்திருத்தி ஒழுகுவதே கடமை யன்றோ?

## 22. பவனிவரும் கன்னித்தாயார்

THE PUBLIC LIBRARY
24 MAR 2012
BATTICALOA.

நாட்டமுள்ளவானரசி நம்மை நாடி
நடுக்கான மடுவினிலே நத்தி வந்து
காட்டாத கருணையருள் காட்டி நிற்கக்
கண்டறிந்தோர் உலகறியக் காட்டி வைத்தார்
ஏட்டினிலே எழுதாத எழில் முகத்தாள்
இராக்கினியாய் முடிசூட்ட இதமு வந்து
மேட்டிமையாய்ப் பாப்பரசர் மேன்மையோடே
விளங்கவைத்த பொன்விழாவை வியந்து காண்போம்

கண்களிக்கப் பவனிவரும் கன்னி மாதா
கானகத்தை விட்டகன்று கருணை கூர்ந்து
மண்ணகத்தார் மனவிருளை மடிய வைக்க
மக்களிடர் பிணிதுன்பம் மறைய வைக்க
பெண்ணினத்துக் கன்னியர்கள் பேறு பெற்ற
பேரன்னை கற்பிலகிப் பெருமையோங்க
நண்ணிவரும் நல்வரவை நாம்நினைந்து
நற்றவமும் நன்மனமும் நாட லாமே

பங்குனியிற் பார்க்கவரும் பவனி யெண்ணிப்
பாலனுடன் செபமாலை பரிவா யேந்தி
எங்களிடம் எழுந்தருளும் இராக்கினியே!
இதயமெலாம் உன்மகனின் இருக்கை கொள்ள
மங்களமாய் வரவழைக்க மனமு வந்தே
வாழ்வினையே மறுவாழ்வு மறுகிறீஸ்து
தங்கமனம் கொண்டிடுவோம் தாழ்ச்சி யோடே
சத்துருவில் மித்திருவைச் சந்திப் போமே

பொன்மகுட விழாவெடுக்கப் போகின் றோமே
பொற்பிலகு கற்பரசி போற்ற நாமே
நன்மனமே கொண்டுதவ நாட்ட மோங்க
நமதயலார் செபமாலை நாய கியை
அன்பொழுக அடிபரவ அருளே ஈய
அமைதியொளிர் பக்திநெறி அண்டி நிற்க
அன்புருவ இறையுருவ அடிச்சு வட்டில்
அன்பரென ஒழுகிடுவோம் அன்னை முன்பே.

பாதுகாவலன் 02.02.1974

## 23. அன்பிலையேல் நாடகந்தான்

ஆதியிலே இருந்த தெய்வம் அநாதி யாக
அன்றுமின்று மொன்றாக அமைந்த துண்டு
சோதிமுனி வழிநடந்த சொந்த மக்கள்
சுந்தரனின் இறையினமாய்ச் சுகித்து வாழச்
சாதியின்றிச் சகலருமே சமமாய்த் தானே
சண்டையின்றி அன்பாகச் சமாதா னத்தில்
நீதியுடன் நிலைநின்று நெறியே கொண்டு
நீடுவாழந்த நியதிதன்னை நினையா தேனோ?

ஒருசொல்லி லோரிறைவன் உண்டாக் கித்தான்
ஒருமனுஷி வயிற்றினிலே உதித்த தென்று
அருண்மறையின் நூலேடே அறைந்த தென்றால்
அருந்தொழிலை இழிகுல மென் றணுகிப் பார்த்தல்
திருச்சபையி லிருக்கலாமோ தேவ மக்கள்
சிந்தனையிற் கொள்ளுவதுஞ் சிரிப்புத் தானே
பெருவுலகிற் பிறமதங்கள் பேசு கின்ற
பிரித்தறியா அன்பிணைப்புப் பெருமை யெங்கே?

இழிவுடையோர் குலமதிலே இறங்கி வந்தார்
ஈனர்களைச் சீடராக ஏற்றுக் கொண்டார்
இழிவுடையோர் இறைமக்கள் எனவ ழைத்தார்
இரட்சிக்க எளியவனாய் எடுத்தார் மேனி
இழிவுடையோர் குலமுளதோர் இந்த நாட்டில்
ஏன்வேற்று நாட்டினிலே இதனைக் காணோம்
இழிகுலத்தார் இதயத்தில் எழாரோ யேசு
இறுமாந்த சாதியிற் றான் இருப்பார் தானோ?

அடிக்கழுவுங் கைசேர்ந்தே அமலன் முன்னே
அன்பொழுகத் தொழுவதையே அறிந்து பாரும்
அடிமைகளாய் ஏவாளியின் அடிச்சுவட்டில்
அனைவருமே பிறந்ததென்றால் அபத்தம் தானே
நடிக்கின்றோம் நற்செய்தி நவிலு கின்றோம்
நம்மிடத்தில் அன்பிலையேல் நாடகந்தான்
குடிகளெலாம் இறைமகனின் கூட்டமென்றால்
கொள்கையில்லா வேறுபாடு குற்றமன்றோ?

பாதுகாவலன் 27-10-1973

## 24. வரமருள் இரந்திடுவோம்

உருவிலான் உருவாய் உருவெடுத் திடுவான்
ஒருமக னுலகினி லென்றே
உலகிறை மக்கள் உணர்ந்திட நடந்தே
ஒழுக்கமாய் எதிர்வர விருந்தார்
அருள்நிறை அமலி அமலவுற் பவமாய்
அருந்தவப் பிறப்படைந் திருந்தாள்
அம்பரன் தூதன் அணுகுக பிரிகேல்
அன்னையை வாழ்த்தியே நின்றான்
உருவுடை மனுவோர் உணர்ந்திடு மிந்நாள்
ஒழுக்கமும் தவசெப முறையும்
உண்மையின் ஒளியும் உத்தம நெறியும்
உளந்தனி லொளிர்ந்திட நாமும்
வருமிறை மகனின் வரவினை நோக்கி
மாசறு மனமகிழ் வாக
மாண்புறு நான்கு வாரமே யெண்ணி
வரமரு ளிரந்திடு வோமே

பாதுகாவலன் 08-12-1973

# 25. பிறப்பாண்டு காணுகிறதாமே

வானகத்துத் தேவமகன் வாழ்வளிக்க எண்ணி
வறியவர்கள் பாலகனாய் வந்துதித்த மண்ணில்
ஈனமுறு மேரோதன் இடரிருந்தே தப்பி
எகிப்தினிலே சிலகால மிருந்தாரே யென்று
ஞானமறை நற்செய்தி நவின்றதையும் கேட்டோம்
நாம்மகிழந்த பிறப்புவிழா நழுவினதா மின்றே
மோனவழி நினையாதே மூர்க்கராக நின்றே
முடிந்தாண்டு வருவதுவும் முடியாதா மன்றோ!

கண்களிக்கப் பிறப்பாண்டு காணுகிற தாமே
காலமதைக் கடவுளிலே கருதாதே வாழ்ந்தோம்
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி நெஞ்சம்
ஏங்கியழு திரங்கியதும் இறையவனே போதும்
கண்ணொளியாய்ப் புத்தாண்டு களித்திடவே நாமும்
கன்னிமகன் அருட்தயவைக் கருணையுடன் வேண்டி
மண்ணிருக்கும் மனுவுயிரில் மகிமையன்பு பார்த்து
மதித்திறையை வணங்குவதும் மாதவமே யன்றோ!

பாதுகாவலன் 05.01.1974

## 26. மருதமடு நாயகியே

தந்தை வடிவம் போலிருப்பான்
தனைய னெனவே கூறிடுவார்
எந்தை வடிவம் என்வடிவம்
என்றே உரைத்தார் இறைமகனார்
சிந்தை யிருக்கும் அவ்வடிவம்
தெளிவாய்த் தெரியும் மனத்தினிலே
நந்தா விளக்காம் மருதமடு
நளின வடிவே நாயகியே

மருத மடுவின் ஆலயத்தின்
மகிமை நிறைந்த திருவுருவம்
கருதும் பரம திரீத்துவத்தின்
கன்னித் தாயின் அருள்வடிவே
உருவ உண்மை உணர்ந்தவர்கள்
உருவ வணக்க மென்பாரோ?
இருளிற் தெரியும் வானொளிகள்
இலையே பகலில் எனலாமோ?

பாதுகாவலன்
07.03.1974

# 27. நித்தியத்தின் தவப்பாதை நெறி

உடலெடுத்த மனிதரெல்லாம் உறுதி வாக்கு
ஒளிபெறவே உள்ளத்தில் உணர்வு வேண்டும்
திடமுள்ள விசுவாசச் செயலி னாற்றல்
சிந்தனைக்குத் தீர்க்கமுள்ள தேவ நேசம்
இடம்பெறவே நம்பிக்கை எழும்ப வேண்டும்
இதயத்தில் மெய்ஞ்ஞான எழுச்சி கொள்ள
அடக்கமுள்ள அமைதிநிலை அன்பு வாச
அருள்பெறவே ஒப்புரவாய் ஒடுங்கல் நன்றே

வேண்டுமெமக் கிறையன்பு விருத்தி கொள்ள
விசுவாச நிலைக்களத்தில் மிகுந்தபக்தி
ஆண்டருள ஆன்மாவில் அடக்க முள்ள
அகங்கார எண்ணமற்ற அமைதி யின்பம்
மாண்டாலும் வானுலகில் வாழ்வு மேவ
மனக்கோவில் குடிகொண்ட மறையோன் யேசு
நீண்டதவம் மேற்கொண்டார் நேர்மை என்றால்
நித்தியத்தின் தவப்பாதை நெறியே காண்போம்

அன்பொளியே விளங்குதற்காய் அருந்த வத்தால்
அருள் பெறவே வனமேகி அடைந்தா ரன்றே
இன்றுதவம் எம்முளத்தில் இருத்தி நன்றாய்
இதயமலர் ஒளிபெறவே இலக்கு வைத்தே
தன்னுயிர்போல் மற்றவரைத் தாழ்ச்சி யோடே
தயவன்பு கொள்ளுதலுந் தவமே அன்றோ
என்னுடலை ஒறுத்தலுமே இன்பமன்றோ
இதில் நன்மை நிறையவுண்டே இறைவனுண்டோ

பாதுகாவலன் 15.03.1974

## 28. அஞ்சா இன்பங்கிடைத்திடுமோ? அமைதி எமக்கு வந்திடுமோ?

சிந்தை யடக்கிச் சிலநிமிடந்
தியான நிலையி லமர்ந்திருந்தே
எந்தை பரனின் இறைமகனார்
இனிய யுருவத் திருவுருவை
அந்தி சந்தி மனக்கண்முன்
அழியா திருத்தி யுச்சரித்தால்
சொந்த மாகக் கலந்திடுவோம்
தூயோர் நிலையை அடைந்திடுவோம்

நெஞ்சம் இருளாய் நிறைந்திருக்க
நினைவே வினைகள் தொடர்ந்திருக்க
வஞ்சம் பதுங்கி வலைபோட
வாயும் முகமும் வேஷமிட
பஞ்சாய் பறக்கும் பருவமதை
பாழும் நினைவில் அலையவிட்டால்
அஞ்சா இன்பங் கிடைத்திடுமோ?
அமைதி எமக்கு வந்திடுமோ?

உள்ளக் கோவில் குடியிருக்கும்
உயிராந் தெய்வ யேசுவுடன்
கள்ளங் கபட நினைவகற்றிக்
கருத்தி லிருத்தி யுறவாட
முள்ளின் முனைகள் பதிந்த முகம்
முழுதுங் குருதி படிந்தவுடல்
எள்ளி நகைக்கும் எம்வாழ்வும்
எடுத்துக் காட்டி மொழியாதோ?

ஞான ஒளியே பிறந்துவிட்டால்
நமக்குள் அமைதி நிலைத்துவிடும்
வான இறைவன் குடியிருப்பான்
வாழ்வின் செயலிற் கலந்திடுவான்
தான தரும முயற்சியெல்லாம்
தவத்தின் செபத்தால் நிறைவாகும்
மோன உளத்தில் இறையாவி
மொழிவாள் என்றே மொழிந்தாரே

பாதுகாவலன்
22.03.1974

## 29. மகிமையுடன் உயிர்ப்பெய்த வழியே காண்போம்

நித்தியமாய்த் தந்தையுடன் நிலைத்தி ருந்த
நேசமகன் யேசுபரன் நித்ய கன்னி
சித்தமருள் வார்த்தையதாய்ச் செகத்தே தோன்றி
சீவியர்கள் மரித்தவர்கள் செய்த நீதி
மத்தியட்சஞ் செய்யவரும் மகிமைக் கோல
வல்லபத்தின் சிலுவை யடையாளத் தோடே
சித்தருடன் வானவர்கள் சேர்ந்து சூழத்
திருவருகை தரவெனவே செயமே கொண்டார்

கல்லறையை மூடிவைத்துக் காவல் செய்யக்
காலையிலே வானவர்கள் கல்லைத் தூக்கி
நில்லெனவே நிறுத்திடவே நீதி தீர்க்கும்
நிமலகுரு மனுமகனும் நிறுத்திச் சொன்ன
சொல்லழியா தெழுந்துவிட்டார் சோதி யாக
சூழ்ந்தவர்கள் வீழ்ந்தனரே தோல்வி கண்டே
நல்லவர்கள் நற்செய்தி நாடி நிற்க
நாமுரைப்போம் இறைபுகழை நாவா லேற்றி

ஆண்டொருநாள் அறைபட்டே ஆணி மூன்றில்
அழுகுருவாய்ப் பலிக்களத்தே அப்பா நீரும்
மீண்டருளப் பொறுத்தருளும் வீணர் போக்கை
விளம்பியவர் உயிர்த்தெழுந்தா வெற்றி யோடே
மூண்டெழுந்த இறையன்பு முழுமையாக
மூவுலக இறைபுகழை மொழி வதோடே
மாண்டாலும் மறுவுலகை மறவா தேநாம்
மகிமையுடன் உயிர்ப்பெய்த வழியே காண்போம்

பாதுகாவலன் 11.04.1974

## 30. உயிர்த்தெழுந்தார் கிறீஸ்து நாதர்

வாழுமுன்னே வரலாறு வகுத்துக் கொண்டே
மறைமொழியின் அகரமுதல் வழுவா வண்ணம்
வாழுதற்காய்க் கன்னிகையின் மகவாய்த் தோன்றி
வனமிருந்து தவஞ்செய்து வரம்நிரம்பி
வாழுகின்ற அனைத்துலக மானிடர்க்கே
மங்கலமாய் நற்செய்தி வழங்கச் சொன்ன
வாழுகின்ற நற்கருணை வகுத்துத்தந்த
வல்லவனின் உத்தானம் மகிமை தானே

உயிர்த்தெழுந்தார் கிறீஸ்துநாதர் உண்மைக் காக
உரைத்தபடி யோனாசின் உயிர்ப்பைக் கொண்டார்
உயிர்கொடுத்தார் ஊமைகளை உரைக்க வைத்தார்
ஊனர்க்குச் செய்ததிலும் உயர்ந்த ஞான
உயிலெனவே நற்செய்தி ஓது மென்றார்
உண்மையன்புச் சகோதரராய் ஒழுகு மென்றார்
உயிராவி உள்ளியக்கும் ஒன்றே தெய்வம்
உணர்த்துதற்கே உயிர்த்தெழுந்தோன் உலகம்மீட்டே

இறைமகனைப் பலிக்களத்தில் ஏற்றி வைத்தார்
இன்றுபலி பூசையிலே இறங்கி வந்தார்
மறையொன்று வாழுதற்காய் மகிமை யோடே
மனுமகனே செயசீல வடிவமாக
நிறையுருவாய் உயிர்க்காதே நின்றா ரென்றால்
நீடுலகில் வேதமது நீச மென்று
குறையிடுவார் குறைகூறிக் கொக்க ரிப்பார்
குறையிலானே நிறைவானான் குணமே கொள்வோம்.

இறைபுகழே வாழியென இயம்பும் நாமே
இன்னுமொரு கிறீஸ்துருவம் எடுக்கவேண்டும்
மறையருளை மன்றாடி வரமே பெற்று
மனஅமைதி வாழ்வுபெற மருந்தாய் அன்பு
நிறைகருணை அமுதுணவு நித்தம் உண்டு
நீசகுணம் அகலவுமே நிமல வாழ்வு
உறைந்திடவும் இதயமதே ஒளியே வீச
ஒருதெய்வ யேசுபரன் உணர்த்து வோமே

# 31. மனுவுடலே விண்ணேற்ற வரவு கொண்டார்

இறையாவி அனுப்புதற்காய் இன்றே செல்வேன்
எனவுரைத்த இறைமைந்தன் எழுந்து வாரும்
நிறைவுபெற உடலோடு நிலையாய் நின்றே
நீடுலகில் நற்செய்தி நிகழ்த்து தற்காய்
குறைவிலாத அருளாசீர் கொடுத்தேன் என்றே
குன்றிடையில் நின்றெழுந்து கும்பல் காண
மறைமுதல்வன் முகின்மறைக்க வான வீட்டுள்
மனுவுடலே விண்ணேற்ற வரவு கொண்டார்

விண்ணேற்றங் கண்டவர்கள் வியந்து நிற்க
மின்னலென வானவர்கள் விரைந்து வந்து
அண்ணாந்து பார்க்கின்ற அன்புப் பாசம்
அகலாத கலிலேய அமைதி யோரே!
விண்ணெழுந்தார் சிலுவைகொண்டு விண்டி லேறி
விசுவாச நம்பிக்கை விளங்க வைக்க
எண்ணாத உயிரன்பே இறைமுன் காண
இனிதழைக்க வருவாரே ஏங்க வேண்டாம்

தேவகதி திருவுலகு திறந்து வைத்துச்
சென்றடைந்த புண்ணியரை சேர்க்க நானே
தேவபுகழ் வாழியெனச் சீடர்க் கெல்லாம்
தேவமைதி நாற்பதுநாட் செய்தி கூறி
சாவகற்றிச் சீவியராய்ச் சர்வ இன்ப
சந்தோஷ ஒளிமயமாய்த் தந்தை முன்பே
சேவகராய் முக்குளிக்க சிங்கணையே
தேடிவைக்கப் போகின்றேன் தேவ லோகம்

விண்ணெழுந்த தேவமகன் விழாவா மின்றே
விசுவாசக் கண்கொண்டு விளங்கும் நீங்கள்
விண்ணுலகில் நித்தியமாய் விமல சோதி
விருந்தினராய் ஆனந்த விளக்கஞ் சூழ
எண்ணியவா றெழுந்திருக்க எழுகின் றேன்நான்
என்தந்தை அருள்பொழிய எடுத்துரைப்பேன்
மண்ணிருந்து மாட்சிமையாய் மாச கற்றி
வந்த ருள்வீர் தூயருடன் வானகத்தே

## 32. கடவுள் தீபம்

விண்ணேற்றங் கண்டவர்கள் வெளிப்பட் டோடி
வீட்டறையின் கபாடத்தை விரைவாய்ப் பூட்டி
எண்ணியதும் பயத்தோடே என்ன செய்வார்
எதிரிகளென் றஞ்சிமனம் இடற லுற்றே
உண்ணாதே உறங்காதே ஒருவரோடே
ஒருவருமே பேசாதே ஒடுக்க மாகக்
கண்ணயராக் கடுந்தவத்திற் கவலையாகக்
கருத்தொன்றிச் செபத்தியானக் கண்ணுற்றாரே

இறையுடலைக் கவர்ந்தவர்கள் எளிய சீடர்
இவர்களையே விட்டு வைத்தால் இழுக்காம் வேதம்
மறைந்திடுமே மறையாதே வளர்ப்ப தென்றால்
வளர்முளையை நசுக்குவதும் மறையோர் அன்றோ?
அறைந்தவர்கள் அறைந்தவரின் அருளினாலே
அக்கினிநாக் கெழுந்தருள அவர்களெல்லாம்
நிறைவாகி கடும்புயலும் நிலஅ சைவும்
நீடுபெற நடுங்கியன்றோ நெருங்கினாரே

தொடைநடுங்கிப் பதுங்கியவர் துணிவு கொண்டே
தூயஇறை ஆவியுயிர் தோன்ற நெஞ்சம்
படைவரினும் பயப்படாது பட்ட ணத்தோர்
பரிகசித்தோர் அதிசயிக்கப் பகர்ந்த வார்த்தை
உடைந்தமன யூதரையோ! உண்மை யாக
ஊதாரி உளத்தையோ உறுத்து மென்றால்
கடைந்தெடுத்த கிறீஸ்தவர்நாம் கடவுள் தீபம்
கருதாது காத்துவரல் கடமையன்றோ

கன்னிகையின் கருப்பத்திற் கலந்த ஆவி
கருதுமுழுக் குற்றபோதே கண்ட ஆவி
மன்னுயிரை மீண்டுயிர்க்க வனத்திடத்தே
மனுமகனை ஏவிவிட்ட வரத்தி னாவி
அன்பரிலே அன்பராக அக்கி னியாய்
அருட்கனியாய் இறங்கிவந்தே ஆட்கொண் டாண்டே
என்னிதயத் துறுதியிட எழுந்த ஆவி
இறைமூன்றாம் ஆளெனவே இறைஞ்சு வேனே

சத்தியமெய் வேதத்தைத் தவறா வண்ணம்
சத்துருவே மேற்கொள்ளா தாளும் ஞானம்
சத்தியத்தை நிலைநிறுத்தச் சான்று கூறச்
சக்தியருள் வரமருளும் தந்தை நெஞ்சில்
நித்தியமாய் உறைந்தஇறை நேச ஆவி
நினையாது பேசுவதும் நீதி ஆவி
பத்தியிலே பக்குவமாய்ப் பண்ப டுத்தும்
பரிசுத்த ஆவிக்குப் படிதல் நன்றே

## 33. கத்தன் கோலம்

வான்வெளியிற் சூரியனின் வருகை காணல்
மனுமகனின் மறுவுருவ மகிமை மாட்சி
மீன்வெளிச்சம் இரவினிலே மினுங்கும் போதே
மீனாட்சி தெய்வ அன்னை விண்ணிற் காட்சி
தேன்நிலவின் கூன்வடிவம் தெய்வ லோகஞ்
சேரவெழுந் தருளியதாய் சிந்தை ஆட்சி
ஏன்நல்ல பாம்பெனும்பேர்? ஏவை சூட்சி
இவைகத்தன் கோலமெல்லாம் எண்ண லாச்சே

பெரு மரமோ சிலுவையிலே பெருமான் மீட்பு
பெண்ணினமோ கன்னிமரி பேறு காப்பு
எருதுடனே கழுதையினை இணைந்து பார்த்தல்
ஏசுபரன் பிறந்தபோதே எழுந்த ஆர்த்தல்
மருதமரச் சோலையிலே மகிழுங் கிள்ளை
மழலைமொழி மடுத்தாயை மனத் தெழுப்பும்
புருவைகளோ காணுமுளம் புதுமை யேசு
புகழ்மொழியைக் காதினிலே புகட்டு தன்றோ

வெண்மைநிற லீலிமலர் விரியும் போது
விரத்துவத்துச் சூசைமரி விளங்கும் கற்பு
கண்கவரும் றோசைமலர் கமழும் வேளை
கார்மேலின் தெரேசாளைக் கண்முன் வைக்கும்
முண்முனைகள் பின்னியதை முன்பு காண
முடியமுத்தும் இறைமகனின் முகத்தைக் காண்போம்
கண்மொழிகள் நிறைந்திருக்கும் கரும்புங் கண்டால்
கன்நெஞ்சம் உருகுகோலக் கத்தன் காண்போம்

## 34. விசுவாச உயிர்

கண்ணாலே காணாத காட்சி யாவும்
காட்டிவைத்த விஞ்ஞானக் கணித ரானோர்
மண்ணிருந்து நிலாத்தரைக்குச் சென்று மீள
மனிதரையே அனுப்பிவைத்தார் மகிமை யென்றால்
விண்ணிருந்து வந்துதித்து மனித தேவன்
விண்ணரசர் தந்தையினை விதந்து கூறி
விண்ணுலக விருதுபெற வெளிப்ப டுத்தி
விளக்கியதை விசுவசித்து விளங்கா தேனோ?

உண்மையுள்ள விசுவாச உயிராய் வாழ
உண்மைவழி மனச்சான்றில் உணர்ந்து நிற்போம்
அண்மையோர் இதயத்தில் அன்புத் தெய்வ
அருளுருவ மாகநின்றே அறிவாற் கண்ட
உண்மைநிறை நற்செய்தி ஒலியின் சொல்லை
உளக்கோவில் நம்பிக்கை உறுதி வைத்தால்
அண்டரிறை ஆனந்த அக்களிப்பில்
அருளின்பம் எய்திடுவோம் அயலா ரோடே

பாதுகாவலன்
08.11.1974

## 35. என்னரசில் நிலைப்பீர்

உலகியலில் அரசுண்டு அமைச்சு முண்டு
ஒருங்கிணைந்த குடும்பத்தில் ஒருவ னுண்டு
விலங்கினத்தில் முதன்மையுண்டு விசுவா சத்தில்
விளங்குகின்ற மனிதருக்கு வெளிச்ச முண்டு
குலமுண்டு குடியுண்டு கோனு முண்டு
குறையாத நிறைவுண்டு குமரன் யேசு
நிலையுண்டு கதியுண்டு நெறியு முண்டு
நீர்வந்தே என்னரசில் நிலைப்பீர் என்றார்

இரவிருந்தாற் பகலுண்டு இருளிருந்தால்
இலங்கவொரு ஒளியுண்டு இன்ப சாந்தி
வர வேண்டு மெனவுணர்ந்தால் மாற்றார் நெஞ்சில்
வாழுகின்ற மகிமையுண்டு மலைப்பொ ழிவைத்
தரவந்த பரன்யேசு சாவை வென்றே
தன்னரசு சேர்ப்பதற்குத் தயவு கொண்டே
வரவேண்டும் மகிழுதற்கு வானின் தந்தை
மகனரசுக் குடிகளாக வருக என்றார்.

## 36. கருணை நிறைவின் புனிதவிழா

வருடா வருடங் கிறிஸ்துவிழா

மனித குமாரன் பிறப்புவிழா

கருணை நிறைவின் புனித விழா

கண்டோம் பகட்டின் வெளிவிழாவே

உருகி இறைவன் மொழிந்தபடி

உருவி லானே உதித்தவிழா

தெரிந்தோம் நெஞ்சிற் சிந்தையில்லை

தெளிவாய் நினைக்க நேரமில்லை

மக்கள் எடுப்பார் பலவிழாக்கள்

மாண்பே அளிக்கும் ஒளிவிழாவே

நக்கிப் பிழைக்கும் நாய்ப்பெருமை

நமது குலத்தில் மிக அருமை

பக்கம் வாழும் மனிதநெஞ்சில்

பயமே இன்றி இடம் பெற்றால்

தக்கோன் பிறப்பு நிறைவுவிழா

சான்றோன் மகிமை அடைந்தவிழா

பாதுகாவலன் 13.12.74

## 37. ஈன்ற தாயை மதிப்பாரோ?

முட்டை தனிலே மயிருளதோ?
முதல்வன் கிறிஸ்து தாயுளதோ?
வெட்ட வெளியில் கதியுளதோ?
வெறுக்கும் பிசாசு அறிவுளதோ?
எட்டிப்பிடிக்கும் மதியினரோ?
ஏனோ மறைநூல் ஆய்கின்றார்?
கட்டி யணைக்கும் தந்தையினைக்
கண்ணாற் கண்ட உறுதியதோ?

சொல்லின் பொருளை அறியாதோர்
சொன்ன கிறீஸ்து செய்தியிலே
கல்லைப் பிழிந்தால் நீர்வருமோ?
கருத்தை மாற்றிப் பிதற்றுபவர்
அல்லும் பகலும் சுமந்தவளை
அன்னை யெனவே நாணுபவர்
எல்லாம் வல்ல இறைமகனை
ஈன்ற தாயை மதிப்பாரோ?

பெந்தக் கோசின் அருட்கொடைகள்
பெற்றோம் உறுதி பூசுதலில்
அந்த ஞானம் எமக்குளதே
அதனை யுணராத் தலைக்கெறுவோர்
சொந்தத் தாயை உதறியபின்
தோன்றும் பெண்ணைத் தாயென்றால்
எந்த நல்லோர் ஏற்றிடுவார்?
ஏனோ கொண்டார் இக்கோலம்

## 38. இட்டம் அவர்கள் இயல்பூக்கம்

வண்ணக் குழம்பை வடிவாக்க
வரைவார் எண்ண ஓவியர்கள்
எண்ணத்திறனை வெளிக்காட்டும்
எழிலார் விந்தை வாலிபர்கள்
பண்ணுஞ் செயலை முதியோர்கள்
பலதும் பத்தும் கூறிடுவார்
உண்ணல் உடுத்தல் போதாதே
உள்ளந் திருந்தத் தூண்டிடுவோம்

கட்டுக் கடங்காக் காளையென்பார்
கட்டுப் பாடு கண்ணியத்தை
தட்டிக் கழிக்கக் காணுகின்றார்
சட்டதிட்டம் அடிமையென்பார்
முட்டிக் கொள்ள வழியென்பார்
முன்னே நின்றே நாமுழைத்தால்
எட்டுத் திக்கும் புகழ்பரவ
எண்ணிச் செய்வார் புதுப்படைப்பே

சட்டை தொப்பி மாற்றமதே
தலையும் உடையும் மாற்றமதே
நட்டம் ஒன்றும் நமக்கில்லை
நன்றாய் வாழத் துணை செய்வோம்
இட்டம் அவர்கள் இயல்பூக்கம்
இதய ஒழுக்கம் அவர்தாக்கம்
அட்டம் பக்கம் தவறாதே
அன்பில் இறையை யுணர்த்திடுவோம்

28.06.75

## 39. எல்லாம் நிறைவே பெண்

வண்ண மலருக் கிதழழகு
வாசக் கலப்பு தேனழகு
கண்ணைக் கவரப் படைத்தானே
கடவுள் அழகு உலகழகு
பெண்ணின் அழகு கவினழகு
பேசா துணர்வே அன்பழகு
எண்ணக் காதல் கனிவழகு
இதயக் கலப்பே மனையழகு

பெண்ணைப் படைத்தான் பெருமைபெற
பெண்ணே படைப்பின் தாய்மைபெற
கண்ணே உண்டு களித்திருக்கக்
காமக் கனலா லெரியவல்ல
வண்டைப் படைத்தான் சேர்த்துவைக்க
வாலைப் பருவம் மகிழ்ந்திருக்க
எண்ணம் அடக்கம் தூய்மைபெற
இல்லாள் ஒருத்தி மனைவிளக்கே

வண்டென் றெனவே எண்ணுகிறார்
மதுசேர் கிண்ணம் மங்கையென்பார்
உண்டெ டொருத்தி உணர்ந்தாலே
உண்மைத் தெய்வம் குடியிருக்கும்
கண்டின் சுவையாள் மனையுடையாள்
காதல் மிளிரும் வாழ்வினிலே
உண்டு பார்த்தல் பகுத்தறிவோ
உயர்வுப் பண்போ ஒருயிரே

பொன்னின் வண்டாய் நினைப்பீரே
பூவை யெல்லாம் கருதாதே
கன்னிக் குடமும் கண்விழியும்
கட்டுக் கடங்காத் தாகமதே
நன்மை யென்றார் மணவிழாவே
நாறும் இன்பம் எதுவிழாவோ?
இன்ப வாழ்வு மனவாழ்வு
இதிற்குள் உண்மை இருக்கிறதே

கன்ன எழிலே கனியழகு
கண்ணோ வண்டின் வடிவழகு
பின்னுங் கூந்தல் கருமுகிலே
பெண்ணின் மார்போ பாற்குடமே
தின்று சுவைக்கும் காளையரே
தேர்ந்து கொண்டால் மணந்திடுமே
கன்னல் மாதை வெறுத்திடுமே
கதிர்நெற் குலத்தி நிறைவுடையாள்

அன்பைப் படைத்தான் இதயமதே
அழகைப் படைத்தான் பெண்ணிடமே
இன்பம் பொதிந்த மலரன்றோ
இமையுள் காந்த சக்தியன்றோ
துன்பம் தருவ தயலின்பம்
தூய்மை செய்வ தில்லாளே
என்றுந் தெய்வ பத்தினியே
இல்லாள் பெருமை இல்லாளே

இல்லாள் என்பார் மனையாளை
இல்லத் துரிமை அகமுடையாள்
இல்லாள் கணவன் இன்பவதி
எவரும் அஞ்சும் பதிவிரதை
இல்லக் கோவில் வரனிடமே
இன்ப மகவைப் படைப்பவளே
இல்லை யென்ப தொன்றில்லை
எல்லாம் நிறைவே பெண்குலமே

அன்பை நாடும் பெண்ணுலகம்
அழகைத் தேடும் ஆணுலகம்
இன்பம் இருவர் முதிசமதே
இணைந்த காதல் இல்லறமே
இன்பந் துளிர்ப்ப தாக்கமதே
இனிய கனியே தம்மக்கள்
ஒன்றை ஏற்பாள் உத்தமியே
ஒன்றே தெய்வம் தொழுதிடுவாள்

10.07.1975

## 40. ஆறும் சோறும்

மலைமங்கை முலையூறும் மதுரப் பாலாய்
வளைகாப்பு நெளிவாகிவரம்பிட்டோடும்
குலையாத சிறிலங்காக் குமரிப்பெண்ணின்
கோலமணத் தாவணியாங் குளிர்தேனாறு
அலைமோதும் அழகனையே அணையுங்காலை
ஆறவைக்கும் முலைபடாம் போல் அமைந்ததேக்கம்
நிலைதடுத்து நீரோடி நிலத்தை யாற்றும்
நின்பெயர்மா வலிகங்கை நிலைத்தாயாமே

நெறிகெட்டு வாழ்வோரை நேர்மையாக்கும்
நிலைகொண்ட புனர்வாழ்வு நிலையம் போலப்
பொறியியலார் பொல்கொல்லப் புரட்சி யாக்கம்
புதுவழியிற் புகுத்துகின்ற புனலின் தேக்கம்
அறிவுடையார் புகழ்போல அணையைத் தாண்டி
அருகுவயல் நாற்றோடி அலசிப் பார்க்க
அறிஞருள அடக்கமென அருங்கதிர்கள்
அடிகுனிந்து வணங்குகின்ற அழகோர் பாடம்

வான் பொத்து நீரொழுக்காம் மழையைத் தேக்கி
வாடுகின்ற பயிர்துளிர்க்க வாவி யாக்கித்
தான்வாழ வயல்கலக்கிச் சம்பா நட்டுத்
தன்பிணிபோற் பராமரித்துத் தாய்போற் காக்க
''நான் வளர்ந்து தாபரிப்பேன் நன்செய்'' யென்றே
நளினமணிக் கதிர்க்குலைகள் நகைத்து நிற்கத்
''தான்பட்ட பாட்டுக்குத் தன்கு டும்பஞ்
சலியாத பயனென்றே'' தன்னுட்சொன்னான்.

எச்சிலுண்ணும் நாயாக இன்று காணும்
ஏழைநிலை மாறிடவே இதயம் வேண்டும்
உச்சநிலை உத்தியோகம் உமக்கேன் வேண்டும்
உழைப்பாளி யாகிடவே உறுதி வேண்டும்
அச்சநிலை ஒழிந்திடவே ஆக்க வேண்டும்
அரும்பாடு பட்டுழைக்க அறிவு வேண்டும்
மிச்சத்தைச் சேமிப்பில் சேர்க்க வேண்டும்
விதைப்பவனின் எதிர்கால விருத்திக்காமே

பந்தயத்தை எதிர் நோக்கிப் பார்த்திருக்கும்
பரதேசி போலுழவன் பருவகாலம்
வந்ததுமே விதைப்பதற்காய் மழையை நோக்கி
வாடி நிற்கும் அபயநிலை மாற வென்றே
இந்து கடல் நீரள்ளி இறைக்கும் வானம்
இரங்கியழுங் கண்ணீரே ஈழத்தாறு
வந்தபடி யோடாமல் வழிமறித்து
வயல் பாய்ச்சி மகிழுகிறான் மருதத்தானே

ஏருழுத கரமெல்லாம் இயந்திரத்தை
எதிர்நோக்கி ஏங்குகின்ற ஈழநாட்டில்
யாருழுது தருவாரோ? யாரைக் கேட்போம்
யாம் கேட்டால் வையென்பார் யாது செய்வோம்?
பேருக்கு உழைப்பாளி பெருமை யென்றே
பேசிடுவார் பாடிடுவார் பெரியார் கம்பர்
வேருழுத்தால் விறகாகும் வேளாண்மையோன்
விழுந்துவிட்டால் யார்துணையோ விசனமன்றோ

THE PUBLIC LIBRARY
24 MAR 2012
BATTICALOA.

பாடுபட்டேன் கடன்பட்டுப் பலனைக் கண்டு
　　　　பங்கிட்டாற் பதர்நெல்லே பங்கேயாகும்
ஏடுபெற்ற புகழுனக்கே எழுதி விட்டான்
　　　　ஏழைநிலை யறிந்தானா இந்தக்கம்பன்?
வீடுபடும் பாட்டினையே வெளியிற் சொன்னால்
　　　　வெட்கமென்றே தவிக்கின்றேன் விருந்து வந்தால்
கூடுவிட்டுப் போன இன்பம் குறையாதென்றே
　　　　கொடுக்கின்றேன் தமிழனது குணப்பண் பென்றே

மலைமகளின் தூதாக வயல்களாய்ந்து
　　　　மணிநெல்லைப் பொன்னிறமாய் மாற்றி வைக்க
அலைமோதச் சேறாடி அழகுக் கோலம்
　　　　அள்ளிவரும் மணப்பெண்ணின் ஆரவாரம்
இலைசருகு மணமலர்கள் இன்ப மூட்ட
　　　　இரைந்தொலிக்கும் முழவாக எதிர்க்குங் கற்கள்
தலைமூழ்குங் காட்டெருமை தடுப்ப தொக்க
　　　　தரைகுளிரத் தேனாறே தடைகள் தாண்டும்

அள்ளிவரும் மணக்கோல அழகு விஞ்ச
　　　　ஆடவர்போல் மரந்தடிகள் அணிவகுக்கத்
துள்ளிவருஞ் சிறுமியர்போற் தொண்டை மீன்கள்
　　　　தொடைவாழைக் குமரியர்போல் சுழிக்கும் சேல்கள்
மெள்ளவருங் கிழவரைப்போல் வேங்கை பாலை
　　　　விரித்தகுடை அலையாக வெடிக்கும் வாணம்
பள்ளத்து வீழருவி பருவப் பெண்போல்
　　　　பார்த்திருக்கும் ஆறெனவே பாய்கின்றாயே

சூல் கொண்ட பாம்பெனவே சுழன்ற சைந்து
　　　　சூழ்ந்திருக்கும் மருதமுல்லை துளிர்பெற்றுய்யக்
கால்கொண்ட மலையெல்லாங் கையசைக்க
　　　　கவிமுழவுற் தாளமிடக் காட்டு மஞ்ஞை
வேல்விழியார் நடனமிட வேணுகான
　　　　மிடற்றொலியின் குயில்பாட விசை குறைந்து
சால்புடையோர் ஆறுபோலச் சாந்தி என்கச்
　　　　சாந்த மென வருகின்றாய் தகுமிப்பேரே

ஆறில்லா ஊருக்கு அழகு பாழாம்
அதையுரைத்த புலவனையே ஒளவை யென்பார்
சோறில்லா வயிற்றுக்குச் சொல்லிப் பாரும்
சொகுசான காலத்தார் தூங்கி விட்டார்
மாறிவருங் காலமதை மகிழ்ச்சி யாக்க
மறுமலர்ச்சி உழைத்தலுக்கே வருகைக் காலம்
சோறிட்டார் ஈழத்தார் சொன்ன பேரின்
தொடரெச்சம் வாடாதே தொழிலே காண்போம்

பாடுபடும் நிலையெல்லாம் பசியென் றோதும்
பாழ்பட்ட நிலையினையே பார்ப்பதற்கே
ஓடுகின்ற ஆறெல்லாம் உணவை யாக்க
உருவாக்குந் திட்ட மெல்லாம் உடைக்கும் வானம்
நாடுகின்ற மனமெல்லாம் நட்டங் கண்டு
நன்மையெனக் குழாய்க்கிணறு நாடுகின்றார்
தேடுவது சோற்றுக்குச் சிந்தை யெல்லாம்
செலவழித்து முயன்றவனே தேட்ட க் காரன்

கற்றதினாலாபயன் கழனியாக்கிக்
காண்பதுவே உண்மைநிலைக் கருத்தி லாக்கிப்
பெற்றதையே பெருச்சாளி வயிற்றை நீக்கிப்
பிறருழைக்க வாழாது பிரிய மோடு
புற்றரையை நெற்றரையாய்ப் பொன்னே யாக்கிப்
புகழிலங்கச் சிறிலங்காப் பொருளாதாரம்
பெற்றிலங்கத் தொழிலாளர் பேறு காண்போம்
பெருமுயற்சி உயர்ச்சிதரும் பெருமை காண்போம்

வாடுகின்ற பயிருக்கு வள்ள லென்று
வரவேற்குங் கமக்காரன் வாழ்த்துகின்றான்
மேடுபள்ள ஓட்டமுள்ள வேகம் உண்மை
வேறான பாகுபாடு வித்தியாசம்
நாடுவது காணவில்லை நாக பாம்பு
நகர்வது போல் வளைவுண்டு சீற்றமுண்டு
நீடுபுகழ் நேர்மை கண்டேன் நீரையள்ளி
நீந்திவரும் ஆறெனவே நித்தங் கண்டேன்

நீலவண்ணப் பட்டாடை நீயுடுத்தி
நிலமகளாய் மானமுடன் நின்ற னுப்பும்
வாலமணக் குமரிப்பெண் வடிவா மாறே
வகைவகையாய்ப் பேரிட்டு மகிழுன்றார்
சீலநதித் தெய்வமெனச் சிந்தை கொள்வார்
செய்பவத்தைத் தீர்த்திடுவார் தீர்த்தமாடி
கோலமுடன் சுழியிட்டுக் கொல்லலுண்டே
கொடும்பசியைப் போக்குகின்ற குணமுமுண்டே

வேறு

பொறையிழந்து பொங்குகின்ற போதினிலே நீயும்
புதுவெள்ளப் பெருக்காகப் புரட்டுகின்றாய் கல்லை
நிறைந்தகொடை வள்ளலென்று நீரள்ளித் தந்து
நிரப்பிடவே குளம் நிறைந்து நெல்லினத்தைக் காத்து
குறை கூறும் கமக்காரன் குடும்பத்தைப் பார்த்து
குறைதவிர்த்து வாழ்வளிக்குங் குணமுண்டே யுனக்கு
மறைந்தமடு மீனினங்கள் மகிழுதற்கோ வந்தாய்
மதகுகளைத் திறந்துவள மாக்கிவர நின்றாய்

மணியள்ளி வீசுகின்றாள் மாணிக்க கங்கை
        மாவலியே வடநிலத்து வள்ளலெனச் சொன்னார்
மணிநிறைந்து வயல்பரந்து வளமாக்குந் தன்மை
        வந்திடவே வருகின்றாய் மனத்துயரைப் போக்க
பணிசெய்து கிடப்பதுவே உன்கடனே யென்று
        பருவமழை பெய்தவுடன் பாய்ந்து வருகின்றாய்
மணியிலங்கை மலைநின்று மனங்கொண்டு வந்தாய்
        மதித்தரளும் பண்பாட்டை வளமாக்குமாறே

நீருண்டு வானத்தில் நீந்திவிளையாடி
        நிலத்தோரை மகிழ்விக்க நீராகப் பெய்து
ஏருண்டு வயலுண்டு இனிதாக வாழ
        எனநினைக்கும் உழவன் தன் இதயத்தில் வாழ
"நேருண்டு வளமாக்க நிற்கின்றேன்" நானே
        நேராக வருகின்றேன் நீரள்ளித்தானே
பேருண்டு ஆறென்றும் பெறுமானங் கொண்டு
        பெரிதாக அணைதாண்டும் பேரான ஆறே
துளிருண்டு நெளிவுண்டு சொகுசான வாழ்வில்
        தொடருண்டு நடுவுண்டு துணிவுண்டாம் ஆறில்
தளிருண்டு வரம்புண்டு தடைதாண்டி வந்து
        சரிகண்டு நாற்றிட்ட சம்பாவை நட்டு
ஒளிகண்டு விளைவுண்டு உயர்வுண்டு சூடு
        ஒளிமங்கை தனமாக அமுதுண்டு நாடு
களிகொண்டு முவ்வோர்க்கும் கடனையே போக்கக்
        கதிகொண்ட தேனாறே கடமைதா னென்னே

இருகுடங்கள் போதாதோ என்றெண்ணி நங்காய்
இடையினிலே ஒருகுடத்தை எடுத்தேனோ வந்தாய்
முருகிளமை வாலிபத்தைக் காணுதற்கோ அன்பாய்
முடங்குநடை ஆறுனது மோட்சமதோ இன்பம்
தருசித்து விளைவித்துத் தானியத்தைத் தந்த
தருமகுண வள்ளலெனச் சாற்றுதற் கோவந்தாய்
அரும்பாடு பட்டு மழை கொட்டுவது போல
அள்ளியெறி வியர்வைதனை ஆற்றுதற்கோ வந்தாய்

புதுப்பஞ்சு போலநுரை பொங்கிவரும் ஆறு
புதுவெள்ளம் கொண்டுவந்து பொன்வயலிற் பாய்ச்சப்
புதுப்பணத்தைக் கண்டவன் போல் புதுவரம்பு போட்டுப்
புதுநடுகை நாட்டுதற்குப் பொன்னிளமைப் பெண்கள்
பதும மலர்க் காலசைத்துப் பண்படுத்தற் சேறு
பசியகரும் வண்டதுபோல் பசியமுலைதோன்றும்
புதுவுணவுப் பொங்கலையே புதிராக உண்ணப்
புதுமைப்பெண் நகைத்தாளே புதுக்கனவு கண்டே

பலருண்ணப் பண்படுத்தும் பயிர்த்தொழிலின் மேன்மை
பகுத்தறிய ''வரம்புயரப்'' பகர்ந்தாளாம் ஔவை
நலம்பெருக ஏருழவு நவின்றானாம் கம்பன்
நவிலாத கவியுண்டோ? நல்லாற்று நீரே
பலமற்ற நாணலையே பாவமென விட்டாய்
பருமரத்து வேர்பறித்தாய் பலங்கொண்டு சீறி
மலரள்ளி வருகின்றாய் வயலுள்ள சேறு
வளர்நெல்லை மணியாக்கும் வளமான சோறே

ஆற்றைப்போல் ஆறென்றார் ஆன்றோர்கள் இன்ப
ஆறுதலைப் பெறுவதற்கோ ஆக்குமென்றார் சோற்றை
ஏற்றத்தை இறைக்கின்ற ஏருழவர் நெஞ்சம்
இதமாக மகிழ்தற்கே இரங்குகின்ற ஆறே
போற்றுமலை போன்றமுலை பொதிந்தமணிச் சூடு
பொன்மகளார் உறைகின்ற புதுமனைவி வீடு
நாற்பயனே பெறுமெந்தன் நாற்று நட்ட தென்றே
நற்றவத்தாள் கொஞ்சலிலே நயந்து நினறேன் நானே

மங்கையைப்போற் செழிப்பாகி மனைகொண்ட உற்றார்
மகிழ்வுறவு போலமட்டம் வளர்தோங்கி இன்பம்
தங்குமுத்தக் கனிபோன்ற தன்செல்வ மக்கள்
தகமைபோற் பொன்பரப்புந் தானியநெல் தோன்றும்
எங்குமில்லா ஆனந்தம் எந்தனக்கே யென்று
எடுத்தாடும் காவடிபோல் எடுத்திடுவார் கட்டு
பொங்குகதிர் வாரிகளைப் புறம்பாக்க எண்ணி
போரெடுத்தார் தூற்றிடவே பொலியளந்தார் வேறே

மறித்துவயல் நீர்ப்பாய்ச்சி மகிழம்பூச் சம்பா
மங்கையுளை சூல்போல மணிக்குடலை யீன்று
அறிவுடையார் அடக்கம் போல் அரும்பாலே யேறி
அகமகிழ்ந்த குமரியென அருங்கதிர்கள் நாணும்
வெறியுடையார் நடைபோல விளைகுலைகள் ஆடும்
விரிபாயிற் பரப்பியபோல் விளைந்தமணி சாயும்
நெறியுடைய குலமகள்போல் நீள்கூனற் தாள்கள்
நிலங்கொஞ்ச மகிழ்ந்திடுவார் நீடு செல்வச் சோறே

## 41. முன்பே உணர்ந்தால் மோட்சமடா

சீனாய் மலையின் ஒளிப்பிளம்பே
திறமாய் விளக்க உடன்பட்டே
தேனாய் அமுதஞ் சொரிந்தன்றோ
சிந்தை களிக்க உரையிட்டே
ஊனாய் உணவாய் அளித்தவனே
உருவாய் மகவாய்ப் பிறந்திட்டான்
ஆனாள் பேரன் ஆதிபிதா
அணைந்தே இணைந்த நமப்பொருளே

நன்மை நிறைந்த நடப்புடையோன்
நம்கண் முன்னே மறைப்புடையோன்
அன்பும் அருளும் சிறப்புடையோன்
ஆறு குணங்கள் வனப்புடையோன்
இன்ப உயிருள் யாப்புடையோன்
எந்த உடலும் தமக்குடையோன்
என்று மிருந்த பரம்பொருளே
எம்முள் வாழும் திருவருளே

ஈசன் வாழும் கோவிலடா
ஈனஞ் செய்தால் நாசமடா
வாசம் அன்புத் தெய்வமடா
மனமே சாந்த உருவமாடா
பாசம் அகத்தைக் கெறுவமடா
பணிவு அமைதி அமுதமடா
மோசம் செய்வான் பகைவனடா
முன்னே யுணர்ந்தால் மோட்சமடா

பாதுகாவலன் 09.01.76

## 42. எண்ண மொழியே செபித்தலடா

புத்தி யுள்ள மனிதரடா
புரட்சி செய்யு மிதயமடா
பத்தி நிறைந்த நெஞ்சமடா
பரமன் வாழும் கோவிலடா
நித்தியத்தை யடைவதடா
நேச அன்புப் பாசமடா
சத்தி யத்துட் புரட்சியடா
தரும சிந்தைத் தியானமடா

ஒன்றே தெய்வ உணர்ச்சியடா
ஓதும் கோவில் உள்ளமடா
நன்றே சொன்னார் கிறிஸ்துவடா
நாளும் வாழ்தல் புனிதமடா
அன்றே கண்டேன் காட்சியடா
அனைவோர் கூடும் கூட்டமடா
நின்றே பார்ப்பார் நினைவெல்லாம்
நெஞ்சங் கடந்த அலைகளடா

கண்ணுங் கருத்து மிணைதலடா
கடவுள் ஒளியின் மகிமையடா
எண்ண மொழியே செபித்தலடா
இறைவன் இணைந்த உருவமடா
விண்ணும் மண்ணும் படைத்தலடா
வேத நாதன் கத்தனடா
பண்ணி னிசையிற் பரமனடா
பக்தி கொண்டே பாடிடடா

பாதுகாவலன் 06.02.76

## 43. புரட்சி துளிர்க்கும் இளைஞரடா

புத்தம் புதிய உலகமடா
புரட்சி துளிர்க்கும் இளைஞரடா
சத்த மொலிக்கும் திசைகளடா
சக்தி பிறக்கும் மூச்சிலடா
உத்தி யோகம் அடிமையடா
உழைப்பின் கரங்கள் உயர்ச்சியடா
சித்தி விளைவே நோக்கமடா
சிறுமை கடந்த பருவமடா

கத்தோ லிக்க இளைஞரடா
கடவுள் கிறிஸ்து வடிவமடா
முத்தோ பிறக்கும் கடலிலடா
முயற்சி அன்பு நெஞ்சிலடா
ஒத்து வாழ்ந்தால் இன்பமடா
உயிரா மாவிக் கோவிலடா
வித்தோ வளர்ந்தால் விருட்சமடா
விவேக மிளைஞர் படைத்தலடா

அன்பும் அறனும் அணைகளடா
ஆர்வம் ஆற்றல் திறமையடா
இன்ப துன்பம் வாழ்க்கையடா
இயற்கை நாட்டம் கவர்ச்சியடா
ஒன்றே தேவன் உண்மையடா
ஒழுக்கம் வகுத்தான் தமிழனடா
நன்றே செய்வீர் இளைஞரடா
நாலு மிரண்டும் உறுதியடா

## 44. எந்த விதத்திற் கிறிஸ்தவர் நாம்

வேதக் கார ரென்றெமையே
வேற்று மதத்தோர் கூறுவதேன்?
வேத நூல்கள் பயின்றவரோ?
விவிலியத்தை யறிந்தவரோ
வேத நாதன் குருதேவன்
விசுவா சத்தில் நடப்பவர் நாம்
பேத மில்லை யேசுவழி
பிறரை யன்பு செய்தவழி

சொல்லோ செயலோ நம் வாழ்வு?
சொகுசோ தியாக மனப்பாங்கு?
கல்லோ மனமோ நடத்தையதோ?
கடுகி னளவோ திருந்தியதோ?
நில்லா வாழ்வை நினைத்தோமோ?
நித்தம் தவமே புரிந்தோமோ?
இல்லா வொறுத்தல் செபமுளதோ?
இரக்கம் நமக்கு நெஞ்சுளதோ?

அள்ளிக் கொடுக்கும் மனமுளதோ?
அறமோ தருமச் செயலுளதோ?
வள்ளல் இறைவன் இறைக்கின்றார்
மதித்தோ உணர்ந்தோ கொடுக்கின்றோம்?
எள்ளி நகைக்க நடக்கின்றோம்
எந்த விதத்திற் கிறிஸ்தவர் நாம்
கள்ள மில்லா மனம் வேண்டும்
கடவுள் நேசப் பணிவேண்டும்

## 45. 1957-12-24 வெள்ளப்பெருக்கு இரவு

மார்கழி நத்தால் முதல்நாண் மாரிமழை பெய்தருவி

ஆறுயர வெள்ள மதிலே

மாடாடு பொருள்பண்ட தளபாட மனைத்துடனே

மனிதவுயிர்ச் சீவ கணமே

நீர்மேலே மிதந்துவரக் குளமேரி நிறைவாகி

கட்டுகுளம் மோதி வரவே

நிலை கொண்ட கரைவுடைவாய் நீர்ப்பெருக்கு மாதோட்ட

நிலமெங்கும் தேங்கி வரவே

கார் முகில்கள் சோனைசொரி வாகிடவே மக்களெல்லாம்

கண்கலங்கி ஓட்ட முறவே

கழனிவயல் கலங்காற்றுப் புதுவெள்ளம் கலந்துபயிர்

கழையாகி அள்ளி வரவே

ஊரெல்லாம் அல்லோல கல்லோல முறையீடாய்

உயர் கோவில் நத்தி வரவே

உயர்புதுமை நிறைவான தெய்வ அருள் நலமான

ஐம்பத்தே ழாண்டு நிறைவே

## 46. 1964-12-24 இரவு மன்னார் மாவட்ட சூறாவளி பேய்க் கோலக் காட்சி

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து நான்கிறுதி

மார்கழிமா வட்டமதிலே

அல்லோல கல்லோல அவதிதரு ஆகாய

அந்தரங்கா ரோடி வரவே

மாயிரைவாய்ச் சூறைவளிக் காற்றடிக்க வங்காள

விரிகுடா சூன்யச் சுழலே

வலமிடமாய் அமுக்கமென சுழன்றுசத மைலுக்கு

மேலதிக ஓட்ட முறவே

பேயிரைவு செவிடுபட விடியளவும் இருபத்து

நான்கிரவு மாரி பொழிவே

பிரவாகக் கடல் வெள்ளம் தள்ளாடி தொடர்மன்னார்

கற்பாதை தூளா கிடவே

கோயிலொடு வீடுகுடில் கொம்புமர மாவினங்கள்

குடி கெட்டு வான்மீ திடவே

குழந்தையுடன் மானிடர்கள் கிலிகொண்டு நடுங்கிடவே

பேய்க் கோலக் காட்சி யாமே

## 47. தெய்வமெங்கே குடியிருக்கும்

உண்மை உணர்ந்தாற் கிறிஸ்தவர்நாம்
ஒன்றே நடத்தை மொழி யெனலாம்
எண்ணம் மட்டும் போதாதே
எவரும் நண்பர் என மதிப்போம்
கண்ணின் ஒளியாய்ப் பிறருருவைக்
கடவுள் வடிவிற் கண்டிடுவோம்
விண்ணின் இன்பம் வெறுவதென்றால்
மிருக வாழ்வை அடக்கிடுவோம்

தெய்வ மெங்கே குடியிருக்கும்
திருந்தி நடக்கும் இதயமதே
செய்த வினைகள் தீர்ந்திடவே
சிறுவர் மனமாய் வாழ்ந்திடவே
எய்த மனமே கசிந்திடவே
இரக்கங் கண்ணிற் புறப்படவே
தெய்வ யேசு நம்மிடமே
தெளிவாய் வாழ்ந்தாற் கிறிஸ்தவர்நாம்

இறைவன் உருவம் சிலையினிலா?
ஏழை வாழ்வின் உருவினிலா?
கறையே கழுவுஞ் செயலினிலா?
கண்டோர் விரும்பும் மறுகிறிஸ்தாய்
நிறைந்த பணியே அருளுருவாய்
நித்தம் நடந்தால் நாம் தெய்வம்
குறையைத் திருத்தி ஒழுகிடுவோம்
கொடிய நாவை அடக்கிடுவோம்

பாதுகாவலன்30.04.76

# 48. ஒருவன் மனமே குலதெய்வம்

இன்பம் பெறுக என்றெண்ணி
　　　இறைத்தான் இறைவன் அருளெல்லாம்
துன்பந் தொடர முதல்மனிதன்
　　　சுவையின் மயக்காற் படைத்தவனின்
அன்பை மறந்தான் அலகைதனின்
　　　அமுத மொழியென் றேமாந்தான்
நன்றே இழந்த நலந்தனியே
　　　நல்கப் புரட்சி மனுவானார்

சாந்த வடிவ வழிதனையும்
　　　சக்தி நிறைந்த செயல்தனையும்
காந்த இழுவை மனமதையும்
　　　கற்றோர் கண்டு கொதித்தனரே
மாந்தர் குணமோ இதுவன்றோ
　　　மறைத்துப் பேசா இறைமகனின்
ஆந்த ரங்க மொழிவளமே
　　　அமுத மென்றார் ஏழைகளே

சின்னஞ் சிறுவர் மனநிலையே
　　　செயலும் செபமும் ஒளிமயமே
அன்பில் அனைத்தும் உயிர்வடிவம்
　　　அதுவே தெய்வ உருவியக்கம்
நன்றே செய்தி இதுவாகும்
　　　நல்ல மனிதர் குணமாகும்
ஒன்றே மறைநூல் ஒருதெய்வம்
　　　ஒருவன் மனமே குலதெய்வம்

## 49. மனமகிழும் தவத்தின் காலம்

வேதனையாய் மாளுதற்குத்தொங்கும் நீச
விரிகரத்தி லாணிபுதைந் துயிரை நீத்த
''பாதகனே! எனமக்கள் பேசுதற்கே
பரமஇறை சொல்லவந்த பாவி தோற்றம்
வேதழி நீதிமுறை நிலையாய் நிற்க
விரதசெப தவதானம் கொஞ்ச மேனும்
பூதலத்தில் தவக்காலம் பூசித் தெண்ணிப்
புலனடக்கி வாழுவதும் புனித மன்றோ!

புனிதனென மதித்தெம்மைப் போற்றிச் சிந்தை
புலனடக்கிக் கிறிஸ்துருவைப் பிறரில் கண்டால்
மனிதரிலே மாணிக்க மணியென்பார்கள்
மாண்டுயிர்த்த மாபரனின் மறையோர் கூற்றும்
வனிதையர்கள் பெருமைகொண்ட மரியாள் மைந்தன்
மனுவெடுத்த நிறைவுபெற வேத வாக்கும்
இனிதெனது மனம்மகிழும் தவத்தின் காலம்
இனிவராத பொற்கால மென்று போற்றே''

## 50. திரை விருத்தம்

வானுலக வானவர்கள் வணங்குதவ மகிமை நிறை
மாசில்லாக் கன்னி மரியே
வானபரன் மனதினிலே மங்கலமாய் வாழ்ந்திருக்க
வரமுற்ற சுகிர்த மரியே
தேனுலவு பூவினிலே சிறந்த மலர் லீலியெனத்
தேவபிதா தேர்ந்த மரியே
தேவகைத் தாதையினைத் திருமணமாய் ஏற்றுநிதம்
தேவநெறி வழுவா மரியே
பானுமதி தாரகைகள் பணியவருட் பாக்கியஞ்சேர்
பரிசுத்த தேவ மரியே
பாவதுயர் வறுமைபிணி பறந்தோடிப் பலபவிழ்சு
பாலன்னம் மிகுந்து தளைய
ஆனுலவு பொலிபாலைக் குளிநகரி னாலயத்தின்
அலங்கார தீப மெனவே
அருள் மாரி பொழிந்தருள அன்னை மரி காணிக்கை
எழுந்தருளி வருகின் றாரே

ஆதிபிதா எண்ணத்தின் அருளுருவாய் முட்புதரின்
அனலொளியிற் தோன்று நவமே
அன்னையெனக் கன்னிகையாய் ஆதவனைக் கரத்தேந்தி
அரவணைத்த அமல நவமே
சோதிவடி வாயழகுச் சொல்லமுதச் சொர்ணமென
சுகிர்தமுறு தெய்வ கருவே
சுத்தர்கள் பணிந்தருளப் பக்தர்கள் பரவசமாய்த்
துதிபுரிய நின்ற தயவே
நீதிபரன் நேர்மையிலே நீசருக்காய் நடுநின்ற
நெறிதவறாக் கருணை வடிவே

நிலைகொண்டு நெற்பொலியும் நீள்பாலைக் குளிநகரில்
நிதிபெருக அருளூ திருவே
ஓதிவரு கீதவொலி ஓங்குமணி யேசுவொலி
உள்ளமதைத் தொட்டு வரவே
உத்தமனைத் தந்தசுத்த காணிக்கை
அன்னை மரி எழுந்தருளி வருகின்றாரே

பாருலகோர் பாவமறப் பாடுகளாற் மீட்கவுடன்
பாடுபட்ட பரம தாயே
பரமதிறி அலங்காரி பரிமளசம் பூரணியே
பல அருளும் படைத்த தாயே
காருலவு மலைமீது கருணைமழை சொரிகின்ற
காருணிய கடவுட் தாயே
கறுமவினை கிறுவைபிணி கஷ்டதுயர் தருமலகை
கலங்கவருள் புரிந்த தாயே
ஏருலவு வாரிபொலி எழில்பாலைக் குளிநகரில்
இனியவரைக் காக்கும் தாயே
இரக்கவருள் தனைத் தோங்கி எம்மனைகள் பொன்மனையாய்
இருக்கவருள் கூர்ந்த தாயே
சீருலவு சிங்கணயிற் திருமகளா யெழுந்தருளித்
தேவனையே யேந்து தாயே
திருவருட்கண் பார்த்தருளும் காணிக்கைத் தாய்மரியாள்
தேர்மீது வருகின்றாரே

## 51. அரியகாலம் தவக்காலம்

நெஞ்சக் கதவைத் திறந்துவிடு
நேர்மை யன்பைத் துலங்கவிடு
வஞ்சப்பகையை ஒழித்துவிடு
வாழும் தெய்வம் இருக்கவிடு
அஞ்சும் அடங்க இருக்கையிடு
அரிய காலம் தவக்காலம்
பிஞ்சு மனமாய் மாறிவிடு
பெறுதற் கரிய பேறிதுவே

பாதுகாவலன் 17.02.78

## 52. ஒன்றும் புதிதாய்ச் செய்யாதீர்

வஞ்சப்பகைவன் நாவாகும்
வாழ்வைக் கெடுத்தல் நாவாகும்
நெஞ்சைமாற்றல் நாவாகும்
நிலையை அழித்தல் நாவாகும்
அஞ்சு மடக்கல் நாவாகும்
அயலார் தூற்றல் நாவாகும்
மிஞ்சிப் போக விட்டாலே
விரதம் தவிடு பொடியாமே

ஒன்றும் புதிதாய்ச் செய்யாதீர்
ஒன்றை மட்டும் செய்திடுவீர்
என்றும் இறையை நினைவிருத்தி
இழிவாய்ப் பேசும் நாவடக்கி
இன்று மனதை நேர்ப்படுத்தி
எல்லாம் அவர்க்காய்க் கையளித்து
நன்று செய்தாற் தவமாகும்
நாளும் பொழும் இதுபோதும்

20.02.78

## 53. துணிந்து சொல்ல யாருண்டு

இந்த உலகை எதற்காக

இறைவன் நினைத்துப் படைத்தானோ

நொந்த உள்ளக் குமுறலிது

நோக்கும் மனிதப் பிறவியினம்

சொந்த நிறைவு யார்பெற்றார்

துணிந்து சொல்ல யாருண்டு

பந்தம் முடிந்தால் பலன்காண்பாய்

பரமன் சொன்ன நிலையினிலே

பணமும் பொருளும் மமதையடா

பரமன் முன்னே வெறுமையடா

குணமும் அறமும் அமைதியடா

குறைவோ மனிதப் பிறவியடா

பிணமும் பேசும் செல்வமடா

பிறகே வருமென் றெண்ணமோடா

கணமும் நிறுத்த முடியுமோடா

சற்றே அமர்ந்து யோசியடா

16.04.78

# 54. தெய்வத்தன்மை

சத்தி யுறுதி வழிந்திடவே
　　　　சர்வ வல்ல உயிராவி
பத்தி நிறைந்த இதயத்திற்
　　　　பரம மைந்தன் மொழிந்தபடி
சித்தி விளங்க வாழுகின்றார்
　　　　தெரியா மனிதர் பிதற்றுகின்றார்
நித்தி யத்தின் உண்மைநிலை
　　　　நினைந்தால் அன்பு சுரந்திடுமே

தேவ ஆவி செயலதனாற்
　　　　தெய்வத் தன்மை பெறுகின்றான்
ஆவல் கொண்ட பக்தனென்றால்
　　　　அன்பின் அமைதி காண்கின்றான்
பாவ வழியும் நினைக்கின்றான்
　　　　பலரைச் சுரண்டிப் பார்க்கின்றான்
ஏவல் முன்னே நிலைகெட்டே
　　　　ஏங்கும் முன்னே திருந்திடுவோம்

## 55. ஆண்டவனைக் காணவழிகள்

ஆண்டவனைக் காணுதற்கும் வழிகளுண்டு
ஆராய்ந்து கண்டறிய முறைகளுண்டு
வேண்டுமென விரும்பி நின்றால் மறைநூலுண்டு
மிகுந்தமனச் சக்தியுண்டு நினைவுமுண்டு
தூண்டுதற்கும் உணர்வுமுண்டு கனவுமுண்டு
துரிதமாகச் செயற்படவே மனமுமுண்டு
நீண்ட அருட் கற்பனையும் துறைகளாகும்
நெஞ்சத்தில் இருத்திவிட்டால் மோட்சமுண்டே

கல்லுருவச் சிலைகளிலே தெய்வமுண்டு
கண்டவர்கள் கற்பனையின் உணர்வு கண்டு
வெல்லுகின்ற போட்டிமனச் சிந்தையாளர்
வெறுமுருவம் காணவில்லை விநோத மாக
சொல்லுருவில் ஊடுருவிப் பார்த்தாரன்றோ
துணைசெய்யும் தேவனையும் பற்றிக் கொண்டார்
நல்லவராய் நடிப்பதிலே நன்மை யில்லை
நன்மனதோர் அமைதியிலே இன்பமுண்டே

18.08.78

## 56. மனிதன் மாறுகிறான்

அன்பின் உருவ மனிதனிவன்
அழிவுச் செருக்கால் மாறுகிறான்
அன்பை மறந்து மாறுகிறான்
ஆக்க மனிதன் மாறுகிறான்
துன்பங் கண்டால் மாறுகிறான்
தொகைசேர் பணத்தால் மாறுகிறான்
இன்பந் தொடர்ந்தால் மாறுகிறான்
ஏனோ மனிதன் மாறுகிறான்

செல்லும் செல்வம் வருகையிலே
தெரியா தழிய மாறுகிறான்
சொல்லும் வார்த்தை மாறுகிறான்
சொந்த நிலையில் மாறுகிறான்
கல்லும் கரைய மாறுகிறான்
கடவுள் மகனாய் மாறுகிறான்
நில்லும் நிலையாய் அமைதியிலே
நேர்மை வழியே நிலையாமே

மாறும் மனிதன் வாழ்க்கையிலே
மனதின் அமைதி நிறை மகிழ்வு
ஆறும் இதயம் அருள் பெறுமே
அலையும் மனமோ கலங்கிடுமே
நீறும் உடலை நினைப்பதில்லை
நெஞ்சம் போன போக்கினிலே
வேறு பட்டு மாறுகிறான்
வெறுக்கக் காலம் வந்திடுமே

## 57. பகட்டான கோலவுடை பக்தியாமோ

நாகரிப் போக்கினிலே நாசமாகும்
ஞானிகளைப் பின்தொடர்ந்தால் நன்மையாமோ?
வேகமுள்ள உலகாசை விழுத்தாதென்று
மிருகவிச்சை மானிடர்கள் எண்ணலாமோ?
ஆகமங்கள் வாக்கினையே மறக்கலாமோ?
அன்புதவ நெறிவழியும் இறைமையன்றோ!
மோகமது யாரையுமே விட்டதில்லை
முடிந்தவரை மோனத்தை நினைந்து பாரே

கண்காந்த மயக்கினிலே கலங்காருண்டோ?
கந்தனுரு புனிதமென உணரா தாலோ?
கண்டபடி நடக்கின்ற கோலத்தாலோ!
களவென்று மானிடர்கள் நினைக்கின்றார்கள்
உண்மைதனை உணர்ந்துகொண்டால் இறைவன் யேசு
உள்ளொளியிற் கலந்துவிட்ட மக்ட லேனாள்
கண்ட இன்பம் கண்டுவிட்டால் ஞானியாவாய்!
காணாது போய்விட்டால் கலகந்தானே

தொலிபோர்த்த ஓநாய்கள் தோன்றலாமோ?
சொகுசல்லத் தவஉருவம் தொட்டுக் கேளும்
பலியான நற்கருணை பகிர்ந்தளிப்போர்
பகட்டான கோலவுடை பக்தியாமோ?
கலியுகத்தில் வாழ்வாங்கு வாழுதற்குக்
கண்டெடுத்த துறவறமோ? திருநிலையோ?
சலியாத தவநிலையோ? துரோகி யூதாஸ்
தள்ளிவிட்ட மனநிலையோ? தருமமாமோ?

சத்திய வேதபாதுகாவலன் வெளியீடு 22.09.78

## 58. பசியாத இறையன்பு கொண்டபேராம்

முடியாதா மென்றவொரு வார்த்தையில்லை

முயன்றாலே முடியுமென உரைத்தாரன்றோ

படியாதோர் நிறைந்தமதம் கத்தோலிக்கம்

பசியாத இறையன்பு கொண்ட பேராம்

இடித்துரைத்துச் சொல்வதிலும் இதமே பேசி

இதயத்தைக் கவர்ந்திழுக்கும் வசிய மாகி

வடிவல்ல உடையல்லத் தெய்வ பக்தி

வழிந்தோடும் அருளமுதம் வழங்குவோமே

வணங்காத பிறமதத்தோர் கண்ட துண்டோ

மனமார நினைக்கின்றார் தொழுகின்றாரே

பணம் காசு தேடாதே இருக்கின்றரோ?

பண்பினராய்ப் பழகாது வாழ்கின்றரோ?

குணமுண்டு நிறைவுண்டு பொருளுமுண்டு

குறையாத நிறையன்புப் போக்குமுண்டு

கணமேனும் கடவுளையே நினையாதாலே

கண்டபலன் ஒன்றுமில்லைக் கவலையோரே

நெஞ்சினிலே இறையன்பு வளர வேண்டும்

நேர்மையிலே மக்களுள்ளம் படிய வேண்டும்

அஞ்சாது தவநெறியைச் செய்ய வேண்டும்
அன்புருக வாழ்கின்ற பக்தியாலே
அஞ்சாதோர் அண்டிவர அன்பு வேண்டும்
அழகான வெல்பட்ட ஞானிபோல
கொஞ்சமேனும் ஆன்மாவை மாற்றாதாராய்
குடிமுழுக விழிதிறந்த கொடியோர் நாமே
துன்பதுயர் நோய்ப்பிணியில் இறைவன் எண்ணம்
சுடுகாட்டு ஞானமுள்ள நேர்த்தியாகி
இன்பமெனக் கோவிலெல்லாம் திரிந்தலைந்து
இருக்கின்ற சுரூபமெல்லாம் வழித்துப் பூசி
அன்பற்ற சிலையுருவாய்ப் பக்தனைப்போல்
அழுதழுது புலம்புகின்ற வேடங் கொண்டு
அன்பிறைவன் மகனேசு மொழிமறந்து
ஆணவமாய் நடமாடி யுழலுகின்றோம்
மனச்சான்றுக் கெதிராக வழிக்கி வீழ்ந்து
மனுவடிவ இறைவடிவைக் காணதோராய்

## 59. இருக்கும் நன்னாள் தவக்காலம்

உள்ளக் கோவில் புதுமைபெற
உண்மை நேர்மை தெளிவுபெறப்
பள்ளம் மேடு நிறைவுபெறப்
பாலருள்ளப் பண்புபெறக்
குள்ள மனமே தூய்மைபெறக்
குணத்தில் உயர்ந்த இறைமைபெறக்
கள்ளம் கபடம் அழிவுபெறக்
காண்போம் நோன்பின் தவக்காலம்

கண்ணை யடக்கி நிலைப்படுத்திக்
காதைக் கேளா திறையிருத்திப்
பெண்ணைத் தாயாய் மனத்திருத்திப்
பேரும் புகழும் புறத்திருத்தி
மண்ணைப் பொருளை வாழ்விருத்தி
மனித தெய்வம் உளத்திருத்தி
எண்ணி நினைத்து தவப்படுத்தி
இருக்கும் நன்னாள் தவக்காலம்

பாதுகாவலன் 28.02.79

## 60. அன்பின் இறைவன் எங்குள்ளார்

அன்பின் இறைவன் எங்குள்ளார்?

அமைதி அலைவோர் பக்தர்களே

இன்ப துன்ப நடுநிலையோர்

இகத்திற் கண்ட சித்தர்களே

அன்று வாழ்ந்த இறைமகனை

அகந்தை மனதோர் காணரிதே

ஒன்றே தெய்வம் உலகுண்டு

உணர்ந்தால் அயலார் உடலுண்டே

பத்த ரென்றே அலைகின்ற

பணத்தோர் கூட்ட யாத்திரிகர்

சத்தி துளிர்க்கும் மனுவுருவைத்

தருண மறிந்து பிழிந்திடுவோர்

தத்தும் போது வேதாந்தம்

சாவை நோக்கின் ஏகாந்தம்

சுத்த மனதாய் வாழ்ந்திடுவோம்

தூய வழியைத் தேடிடுவோம்

பாதுகாவலன் 04.08.79

## 61. இருளும் ஒளியும் நிலையாமோ?

இறைவன் உலகில் வாழ்கின்றார்
என்று மனிதர் சொல்கின்றார்
இறைவன் மொழியே கேட்கின்றார்
இதயம் நினைந்து பார்க்கின்றார்
குறைகள் பேசும் சமூகத்தில்
குறைதா னறியாப் பூரணனை
நிறைவு காணல் எப்படியோ?
நிலைதான் உணர்வு வானகமோ?

வருந்திச் சுமையைச் சுமப்போரே
வாரும் மகிழ்ச்சி காண்பதற்கே
தரும சிந்தை தலைகாக்கும்
தங்க மனசும் அருள்காக்கும்
பொருளால் மகிழ ஏங்குகிறார்
போகும் பணத்தால் கலங்குகிறார்
இருளும் ஒளியும் நிலையாமோ
இதய அமைதி எங்குளதோ?

இறைவன் உயிரில் வாழ்கின்றார்
ஏழை உடலில் ஒளிர்கின்றார்
நிறைந்த அமைதி பூரணமாம்
நினைவு முண்மைக் காரணமாம்
குறையை மறத்தல் ஆனந்தம்
குணத்தைத் தழுவல் வேதாந்தம்
இறைவன் வார்த்தை அருள்வாக்கு
இல்லம் நிறைந்த செல்வாக்கு

15.08.79

## 62. தேடா மனுவில் வாழ்கின்றார்

தேவ வார்த்தை நற்செய்தி

தேடிப் படிக்க நேரமில்லை

தேவன் பற்றிப் பேசுகிறோம்

சிந்தை கொள்ள நேரமில்லை

தேவன் என்று முணுமுணுப்போம்

சிறிய தருமம் செய்வதில்லை

தேவன் எங்கே வாழ்கின்றார்?

தேடா மனுவில் வாழ்கின்றார்

கடவுள் பேராற் கெஞ்சுகிறார்

கருணை யில்லா திருக்கின்றோம்

கடவுள் விழாக்கள் எடுக்கின்றோம்

கஷ்டம் வந்தால் திட்டுகிறோம்

கடவுள் இறைத்த செல்வமடா

கஞ்சற் தனமேன் வந்ததடா

கடவுள் உருவம் மனிதனடா

காணுந் தெய்வ வடிவமடா

## 63. புரியா திளைஞர் கலங்குவதேன்?

''இறைவன் தோற்றம் குருநிலையே
எளியோன் உருவம் இறைவடிவே
மறையோர் சேவை அருளுருக
மனிதர் பார்த்து மனமுருக
நிறைவாய் வாழ்ந்த இறை மகனின்
நெறியே துலங்கப் பணிபுரியின்
குறையாய் வாழ்ந்தோர் திருந்திடுவார்
குமரர் ஒளியாய் விளங்கிடுவார்''

''புரட்சிக் கிறிஸ்தின் எதிரொலியைப்
புரியா திளைஞர் கலங்குவதேன்?
வரட்சி இதயம் குளிர்ந்திடவே
வழியே நெறியாய் வகுத்திடுவீர்
அருட்சி மனதைத் தொடவைத்தால்
அன்பின் பாதை திறந்துவிடும்
மருட்சி மறைய மலைவிளக்காய்
மறையோர் குருக்கள் மாதிரியே''

24.11.79

## 64. பரமன் பகிரும் பந்தியடா

உணவைச் சமைத்துப் புசியாதோர்
ஊனை அவித்தே உண்ணாதோர்
மணத்தை விரும்பி முகராதோர்
மனதில் இறையைக் காணாதோர்
குணத்துள் மறைந்து பலியாகும்
குமரன் கிறிஸ்தின் பலிபூசை
வணங்கிச் செபிக்க வருவானேன்?
வந்து வெளியே நிற்பானேன்?
கடவுள் உணர்வு வெளிப்படவே
கடமை யன்பு விளங்கிடவே
கடவுள் கண்ணிற் தெரிவானேன்?
காணும் வடிவம் கடவுளதே
திடமாய் வாழக் கருணையடா
தேவ பலிநற் கருணையடா
படமா? பலியின் பூசையடா
பரமன் பகிரும் பந்தியடா

25.11.79

## 65. திருநிலையைக் கண்டு விட்டான்

இறந்தவனைச் சுமக்கின்றான் இறக்கப் போவான்
எடுத்தன்பாய்ச் சுமந்தவனும் இறந்து விட்டான்
இறவாது வாழ்பவனும் மறந்து விட்டான்
இறந்திடவே போவதையும் உணர்ந்து விட்டான்
மறவாத நிலைதனையே எண்ணிவிட்டான்
மனமார மனத்தினையே மாற்றி விட்டான்
உறவாக இறைவனிடம் ஒன்றிவிட்டான்
ஒருநிலையிற் திருநிலையைக் கண்டுவிட்டான்

வீடுவரை வந்தழுது கண்ணீர் விட்டார்
விடிந்ததுமே துயரமதை மறந்து விட்டார்
கூடும் வழி வீதிவரை மனைவி விட்டார்
குலத்தவரும் கொண்டாடிச் சென்று விட்டார்
காடுவரை கொடுத்தவரும் மண்ணு மிட்டார்
காண்பவர்கள் பெருமையுறப் பலியு மிட்டார்
நாடுணுரத் தவிக்கவிட்டோர் கல்லு மிட்டார்
நான்மகனே என்றுபுகழ்ப் பறையு மிட்டார்

# 66. பேசும் தெய்வம்

எண்ணம் சுழலும் உலகினிலே
இறைவன் உண்டோ எனநினைப்பே?
கண்ணுக் கினிய இயற்கையிலே
கருத்தைப் பதித்தால் இறைவடிவே
உண்ணத் தேடுஞ் செய்தொழிலில்
உண்மைத் தெய்வம் காண்பவரே
விண்ணின் அரசைக் கண்டிடுவார்
விரும்பும் அயலான் தெய்வமதே

அன்பின் உருவம் அயலவனே
ஆசை கண்ணை மறைக்குதுவே
தன்னை மதிக்க முயலுகிறான்
சர்வே சுரனை விலக்குகிறான்
இன்னும் கொடுத்து வசப்படுத்த
இந்தா பணமென் றிறைக்கின்றான்
அன்பு மட்டும் கவர்ந்திழுக்கும்
அதனை யுணர்ந்தால் இறைவடிவே

நெஞ்சில் இருந்து சுரந்திடுமே
நேர்மை அன்பு பிறந்திடுமே
வஞ்சம் பகையை அறியாதே
மனதிற் பயத்தை அடையாதே
கொஞ்சம் கூடத் தவறாதே
கொள்கை இறைவன் நினைவினிலே
பிஞ்சு மனமாய் இருந்தாற்றான்
பேசுந் தெய்வம் வாழுமடா

# 67. புனித இராயப்பர்மீது திரைவிருத்தம்

விண்ணுலக மீதிருந்து வியனுலகந் தனில்வந்த
மீட்பிறையின் அப்போஸ் தலும்நீ
விரிகடலின் மீன்பிடியால் விசுவாச ஒளிபெற்று
வேதகனைக் கண்ட வனும்நீ
எண்ணியவர் மொழிதனிலே நற்செய்தி
கேட்டிடவே இதமாகச் சொன்ன வனும்நீ
இறையாவி குடிகொண்ட திருச்சபையின் தலைவனாய்
இடம் பெற்ற தூய வனும் நீ
மண்ணுலக மன்னவனால் விலங்கிடவே சிறைப்பட்டு
வருந்திடவே நொந்தவனும் நீ
வானவனின் தூதுவனால் வழிநடத்தச் சங்கிலியே
வழுகிடவே நின்ற வனும் நீ
எண்ணரிய அற்புதனாய் இடர்பஞ்ச பிணிநீக்கி
வஞ்சி நகர்ச் சிங்கா சனத்தில்
எழுந்தருளி வரும்புனித இராயப்பர் திருவடியை
இறைஞ் சுகரம் கூப்பு வோமே

திரைவிருத்தம்

சொல்லரிய சுகிர்தகுண சுந்தரகற் பலங்காரச்
சோதியொளிர் தெய்வ மணியே
சுடர் படரு பிறையணிந்து துலங்குமுடித் தாரகைகள்
சூடிமகிழ் செல்வ மணியே
வெல்லைமலைக் குன்றினிலே வேதபர ஞானமகன்
விளங்கிறையை ஈன்ற மணியே
விரிகதிரோன் வெயிலொளியை மின்னுமுடை புடைசூழ
விண்டுமிதித் தெழுந்த மணியே
தொல்லுலகோர் தொழுதேத்தும் சுத்தகன்னிப்பதிவிரதை
துய்யசெப மாலை மணியே
துன்பதுயர் சுமைபிணிகள் தொடராது விலக்கியருள்
சொரிந்தருளும் முத்து மணியே
கல்லான மனமுடைய கசடர்களைக்கத்தனிடம்
கருணை கொள்ளச் செய்யு மணியே
காத்தருள எழுந்தருளும் காணிக்கை மாதரசி
கழலிணையை வேண்டு வோமே

## 68. நூற்றாண்டு கண்ட எங்கள் சந்தானாள்

தெங்குபனைத் தோப்பு நிறை செல்வ மாடச்
சிறப்பு மிகு பரதகுல சாதி மக்கள்
வங்காலை வளநகரிற் கல்வி கேள்வி
வர்த்தித்து வித்தகரைத் தோற்றி நிற்க
எங்கணுமே தோன்றுபுகழ்க் கீர்த்தி மேவ
இறையரசு வாதிகளாய்க் குருக்கள் காணத்
தங்கமனைச் சிங்கணையிற் சந்த ஆனாள்
தரிசனந்தந் தெழுற்தொருநூற் றாண்டே கண்டாள்

வங்காலை மண்மகளின் மானங் காக்க
வங்கமலி கின்றகடல் ஆடை யாக
தங்குவலம் புரியினங்கள் சங்க நாதச்
சங்கீத ஞானஇசை பாடி நிற்க
பொங்குபுகழ் வானளவு கோபு ரங்கள்
புகழ்பரவத் தலைகுனிந்து வணங்கி நிற்கச்
சிங்கணையி லெழுந்தருளும் சந்த ஆனாள்
தெய்வாசீர் அளித்தொருநூற் றாண்டே கண்டாள்

வித்தகரும் பக்தருமே விளங்கு ஞான
விரிகடல்சூழ் வங்காலை நெய்தல் மண்ணில்
முத்தன்ன குருமாரும் துறவி யோரும்
முச்சுடரின் மணியன்ன கன்னி மாரும்

கத்தருக்காய் இசைபாடும் கானத் தாரும்
கண்டடைய வழிதிறந்த அற்பு தஞ்சேர்
சித்தியருள் நெறிநிலைத்த சந்த ஆனாள்
சிங்கணைக்கே எழுந்தொருநூற் றாண்டே கண்டாள்
வத்தகரும் வத்தைகளும் மலிந்த நெய்தல்
வங்காலை வளநகரில் உத்தி யோகத்
தத்துவஞ்சேர் அறிவுடைய கல்வி யாளர்
தகமை நிறைந் துலகபுகழ்ப் பெருமை யோங்க
முத்துமணி ரெத்தினங்கள் புதிதாய்த் தோன்ற
மூவுலக ராக்கனியின் தவத்தின் தாயார்
பத்திநெறி தவறாத சந்த ஆனாள்
பரிபாலித் தருள்நூற்றாண் டாட்சி செய்தாள்

வெண்பா

வாருதியி லோடிவிளை யாடுமட்சம் வந்துகரை
சேருவலை வங்காலைச் சேதிமத்தில் - காருணிய
நன்மையருள் சந்தானாள் நாயகியோர் நூற்றாண்டை
இன்பமெனக் கண்டாளே இன்று

## 69. சிந்தனையோன் தனிநாயகம்

வித்தகனாய் உலகறியத் தமிழின் தூதாய்
விளங்குமலைத் தீயமென விதந்து கூறச்
சித்தமுந்தன் திடமதனால் உலகா ராய்ச்சி
சிறப்பு தமிழ் மாநாடு நடத்திக் கண்டாய்
முத்திநெறி பெற்றதனி நாயகத் தார்
முன்னவைக்கு நாயகமும் வேண்டு மாமோ?
இத்தனையும் சொல்லறிஞன் சொன்னான் னென்றால்
இனியதமிழ் ஈழமகன் பெருமை யன்றோ!

செந்தமிழின் சிந்தனையே சிறப்புற் றோங்கத்
தேசமெங்கும் சங்கமொழி ஒலிக்க வைக்கச்
சிந்தனையோன் தனிநாய கத்தின் கீர்த்தி
சென்ற இட மெங்கணுமே கமழ்ந்து நிற்கச்
சொந்தவுந்தன் முயற்சியினால் கலைக்கி யானச்
சுதந்தரமே பெற்றதவப் பேறால் நற்றாய்
தந்ததமிழ்ச் சான்றோனாய் அழைப்பை யேற்றே
சர்வபரன் யேசுபணி தலைக் கொண்டாயே

உலகரங்கில் உன்னறிவைப் போற்றா ருண்டோ!
உத்தமர்கள் பட்டியலில் உகப்புற்றோங்கப்
பலகலையும் கற்றறிந்த தமிழர் பண்பாய்ப்
பண்பாடு மிக்கதிருக் குருவாய் ஏற்றே

உலகெங்கும் நற்செய்தி உரைத்து நின்றே
உன்னருந்தாய் மொழியினுக்காய் உடலை ஈந்தே
கலங்காத துணிவுற்ற கலைஞ ரேறே!
காணுகின்ற காலமினி எமக்குண்டாமோ?

ஈன்றுபுறந் தந்தாளின் பெருமை யன்றோ!
இதயங்கள் பேசவைத்தார் தந்தையன்றோ
சான்றுபுகழ் பெருகதிருச் சபையு மன்றோ
சான்றோனாய் ஆக்கியவர் ஆயர் அன்றோ
மூன்றாசை துறந்த நெஞ்ச அடிக ளன்றோ
முத்தமிழின் முதுகலைஞர் அறிஞ ரன்றோ
ஊன்றுதற்குன் காரணமே இறைவன் அன்றோ
உணர்ந்தாலே தமிழ்த்தாயின் பேறா மன்றோ

ஊர்காவற் துறைநகரிற் தோன்றி றோமை
உயர்கல்வி கற்றதிபர் பதவி யேற்று
பேர்புகழும் சர்வகலா சாலை யோர்க்கே
பெருமையுறும் விரிவுரைகள் நிகழ்த்தல் கேட்டே
நேர்மையுடன் பிறநாட்டார் அழைப்பை யேற்றே
நேசதமிழ்த் தொன்மைதனை விளக்கிக் கூறி
பேர்கொண்ட பெரியோனாய்ச் சேவை யாற்றி
பேரின்ப விருந்துற்றாய் அழைப்பை யேற்றே

## 70. பொன்மகனார் பிறப்புவிழா

மார்கழியில் ஒளிவிழாவை ஆண்டு தோறும்
மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்கின் றோமேன்?
பார்மக்கள் மீட்பினுக்குப் பலியாய்ப் போகப்
பரமபிதா மைந்தனவர் பிறந்தா ரன்றோ
நேர்கொண்ட நல்லிதய நிறைவு காணேல்
நீண்டதினம் வாழ்ந்ததினால் நிறைவு மென்னே?
சீர்கொண்ட சிறுவருள்ளம் பெற்றாலன்றோ
சென்றிடுவோம் வானுலக இன்ப மன்றோ!

பாலகனார் பிறப்புவிழா விருந்துப் பந்தி
பங்குகொண்டால் இன்பமுறும் மனதின் சாந்தி
காலத்தை வென்றுபுகழ் கண்டு கொள்ளக்
கன்மனமே நொந்துருகி மறுபி றப்புப்
பாலகனாய் வாழ்ந்தாலே அமைதி யுண்டு
படைத்தவனின் நோக்கமது நிறைவு முண்டு
கோலநவ நாகாரிகப் பகட்டு மட்டும்
குன்றுதந்த குமரனுக்கு மகிமை யாமோ!

பொன்பொருளைக் குவிப்பதினால் இன்ப முண்டோ?
புகழ்காண உழைப்பதினால் புகழ்ச்சி யுண்டோ?
அன்புதரும் மனைவிமக்கள் என்று முண்டோ?
ஆணவந்தான் நிலைத்திருக்க இடமு முண்டோ?
என்றொருநாள் மறையுமென்ப துண்மை யன்றோ
இதயத்தின் மனஅமைதி நிலைக்கு மன்றோ?
பொன்மகனார் பிறப்புவிழாப் புரிந்து கொண்டால்
புவியோர்கள் அன்பராக இருப்பா ரன்றோ

## 71. சாந்தி நிலையுண்டோ

மனதைக் கல்லாய் மாற்றுகிறான்
மனம்போல் வாழ்வை வாழுகிறான்
இனமும் சனமும் மறுக்கின்றான்
எதுவும் சரியென் றெண்ணுகிறான்
தினமும் பணத்தில் சுழலுகிறான்
திருட்டு வழியை நாடுகிறான்
தனக்குச் சாந்தி நிலையுண்டோ?
தக்க உறக்கம் தானுண்டோ?

நெஞ்சைக் கெடுத்துத் தேடுகிறான்
நேர்மை மறந்து பேசுகிறான்
வஞ்சப் புழுவு மரித்திடவே
மனதைத் தாளம் போடுகிறான்
துஞ்சக் கண்ணை மூடுகிறான்
தூதன் பாசம் வீசுகிறான்
பஞ்சு மெத்தை புரளுகிறான்
பலது மெண்ணித் துடிக்கின்றான்

ஆடிப் பாடி மகிழ்ந்திடலாம்
அடிமை யாக வைத்திடலாம்
மாடி வீடு கட்டிடலாம்
மனதிற் திட்டம் வகுத்திடலாம்
தேடிக் கொண்ட பணமெல்லாம்
தேட்ட மாக வந்திடுமோ?
மூடி மனதை மறைத்தென்ன?
முழுதும் போனால் நிலையென்னே?

## 72. எல்லாப்பழமும் அமுதல்ல இருந்து பார்த்து வாங்கிடுவீர்

இன்ப உலகில் வாழ்கின்ற இளைஞருள்ளத் துடிப்பெதுவோ?
அன்பின் இதயம் கவர்ந்திழுக்கும் அழகுமலர்கள் சோதனையோ
உன்னிப் பார்ப்பார் உளராமோ? உணர்ந்தால் அவரை வெறுப் பாரோ?
நன்மை வழியைக் காட்டிடவே நன்றாய் அவரைப் புரிவீரே

நெஞ்சில் நிறைவைக் காணிடவே நினைந்து கலங்கி வாழுகிறார்
அஞ்சிப் பயந்து குமுறுகிறார் அன்பைத் தேடி ஓடுகிறார்
வஞ்சங் கலந்த தோழரையே மனதுக் கமைதி தேடுகிறார்
பிஞ்சு மனத்து வாலிபர்கள் பேசுந்தெய்வ வடிவமடா!

வெள்ளை உள்ளம் மாறுவதேன் மென்மை விகற்ப மாவதுமேன்?
உள்ள உணர்ச்சி இயற்கையதே உண்மை நாட்டத் தெய்வமதே
துள்ளும் பருவப் பாலியல்தான் துணையை நாடும் அருளதுதான்
எள்ளிச் சிரிக்க நடவாதே இறைவன் இணைப்பைக் காத்திடுமே!

நல்ல நூலைத் தேர்ந்திடுவீர் நல்லசெய்தி நற்செய்தி
நல்லபழத்தை தேடிடுவீர் நாளும்பொழுதும் காத்திடுவீர்
எல்லா பழமும் அமுதல்ல இருந்து பார்த்து வாங்கிடுவீர்
வல்ல இறைவன் கோவிலடா வாழும் இதயம் பூசையடா?

கண்ணுக் கினிய மலர்களையே கண்டு மகிழ்தல் இயற்கையதே
உண்மை அன்பு களவறியா? உள்ளப் பார்வை புனிதமதே
கண்ணுங் கண்ணுங் கலவாத காதற்தெய்வ நிலையமடா!
பெண்மை உந்தன் கோவிலடா! பேசுந் தெய்வ வாசமடா!

# 73. கிறீஸ்தவனே மறுகிறீஸ்து!

ஆதியிலே இருந்த வார்த்தை அடி அடியாய் இறைவாக் கோரால்
நீதிமுனே எடுத்துரைக்க நீரலையின் உயிரி னாவி
ஓதிய நூல் வல்லோரெல்லாம் உள்ளத்தின் கனவு போல
சாதியிலே உயர்ந்த மன்னர் சமூகத்தில் வருவா ரென்றார்

என்றிருந்த குருக்கள் மக்கள் எதிர்பார்த் திருந்தே மாற
தன்மான எளியோன் தோற்றம் தனையனா யெழுந்தா ரன்றோ
சென்னியிலே வீக்கம் கொண்டோர் செருக்கடங்க நின்றாராமே
குன்றினியிலே குகைக்குட் கன்னி குமரனாய் வடிவம் கொண்டார்

வடிவெடுத்த இறைவன் மைந்தன் மாகுளிரில் குழறி யார்க்க
விடிவுற்ற இடையர் நெஞ்சம் விண்ணுற்ற தூதர் வார்த்தை
முடிவுற்ற அமுத காட்சி மோனத்தின் இன்ப மாட்சி
படியுற்ற மமதை யோர்க்குப் படிப்பினை கர்த்தர் சாட்சி

கத்தனாக நினைத்தவேந்தன் கலங்கிடக் குழந்தை மாய்த்தான்
புத்தியிற் கெறுவங்கொண்டார் புகழெலாம் மண்ணே கௌவ்வ
சுத்தமுள்ள இறைவன் யேசு துட்டருக்குத் தப்பி விட்டார்.
வித்தகரே ஏமாந் தாலே? விதிதனை யாரோ வெல்வார்?

வெல்லுவது சுலப மென்பார் வெற்றிக்குத் தோல்வி யென்பார்
நல்லிதய மனத்தோர் சாந்தி நன்றுணர்ந்தால் காண்பார்தானே
கொல்லவந்தோன் மடிந்து விட்டான் கொற்றவனின் நாட்டிற் புக்கார்
வல்லவனே ஏவல் இட்டார் வாழ்க்கையைத் தொடங்கி விட்டார்.

தொடங்கிய மரிய சூசை துன்பத்தில் உழன்று வாழ்ந்தார்
தொடங்கிய மீட்பின் காதை தொட்டியில் வளர்ந்த ஞானம்
அடங்கிய தேவ மைந்தன் அடக்கத்தை எடுத்துச் சொல்லல்
தொடங்குநற் செய்தி என்றார் தொடக்கமே வாழ்க்கை என்றார்.

என்னோடு வாருமென்றார் எளியவர் பலரைச் சேர்த்தார்
கன்றினுக் கிரங்கு மாப்போல் கருணையால் கவரப்பட்டார்
தன்மனைவி மக்கள் விட்டார் சகலரும் உறவு என்றார்
பொன்னக இன்பம் கண்டார் புகழ்முடி தன்னைக் கொண்டார்.

கொண்டவர் அறிவில் லாதோர் கோழைகள் பயந்தாங் கொள்ளி
கண்டவர் துணிந்து நின்றார் கத்தனின் காட்சி யானார்
மண்டலத்தோர் களெல்லாம் மயங்கியே தியங்கி நின்றார்
கண்டவர் கண்டு கொண்டார் காணாதோர் தொகையா மன்றோ

அன்றொருநாள் மலையின் மீதே அமுதமொழி பொழிந்த வார்த்தை
என்றுமே இதயத் துன்னல் இதமுளோர் கடமை எண்ணல்
நன்றெனக் காந்தி கண்டார் நல்லோனாய் வாழ்ந்தா ரென்றால்
இன்றுள்ள கிறீஸ்தின் மக்கள் ஏனதை உணர்ந்தாரில்லை?

இல்லாதோர் காண மாட்டார் என்னையே அறிய மாட்டார்
இல்லையே என்ற ஏக்கம் இறகைகட்கில்லையன்றோ!
நல்லவன் பரம கத்தன் நல்லோரை வாட வையான்
எல்லோரும் இறையைக் காண இறைமகன் சுவட்டை நோக்கே

நோக்கிய படியே நின்றால் நோய்பிணிச் சாதி இல்லை
தாக்கங்கள் தலையெடாது தன்னுடன் பிறப்பே தோன்றும்
வாக்கினில் ஒன்று வைத்து வாழ்ந்திட நினைக்க மாட்டார்
போக்குகள் மலர்ச்சி தோன்றும் புதுமைகள் தமிழர் காண்பார்.

காண்பது கிறீஸ்து தோற்றம் கடவுளின் வடிவத் தோற்றம்
மாண்பது வெளியின் தோற்றம் மயங்கிய சாதித் தோற்றம்
காண்பதில் உயர்வு தாழ்வு காசிலா ஏழ்மைத் தோற்றம்
வீண் நினை வகன்ற தோற்றம் வெளிப்படும் கிறீஸ்தின் தோற்றம்

தோற்றங்கள் நிலைப்பதில்லை துன்பங்கள் தரிப்பதில்லை
ஏற்றங்கள் இருப்பதில்லை இறைவனின் ஒளியின் முன்னே
மாற்றங்கள் புனித மாகும் மறுகிறீஸ்து வாக நாமே
மாற்றிடத் திடனே வேண்டும் மனிதராய் வாழுவோமே

## 74. 05.07.1981 உண்ணாவிரதம்
### மாந்தை மாதா ஆலய வளவு

ஆதிமுத லகரத்தைப் பிறப்பித்த தாயே
அழியாத கன்னியாய் வளர்த்திட்ட தாயே
நீதிதவ றாதகுல மனுமரபுத் தாயே
நீடுசபை பெருமையுற அருள்புரிந்த தாயே
சோதிவடி வானவொளி இலங்குதிருத் தாயே
சுதந்திரமாய் வாழ்வதற்குச் சக்திதரு தாயே
மாதினருள் மகாராசி மகிமையுறு தாயே
மன்னருனைச் சீராட்டி வளர்த்ததமிழ்த் தாயே

பொன்மேனி குன்றாத குமரிமணத் தாயே
பொல்லாத ஈழத்திற் புலம்புகின்ற தாயே
நன்மக்கள் கவலையுற நாணுகின்ற தாயே
நாடாளு மன்றத்தில் நீதியறை தாயே
அன்புகமழ் தமிழர்படும் பாடுதுயர் பார்த்தே
அன்னியர்கள் அழுகின்ற குரலொலியைக் கேட்டே
இன்னுமனங் கரையாத கன்மனத் தோருண்டோ
என்றுதமிழ்த் தாயன்னை கெஞ்சுகிறா ளன்றோ

சத்தியத்தை நம்புகின்ற தலைவர்களைத் தொட்டே
தள்ளாடும் குழந்தைகளை வழிநடத்தி நின்றே
பத்திரமாய்த் தமிழினத்தைப் பாதுகாத்து வந்தே
பலநாளாய்க் குரல்கொடுத்துக் கண்ணீரைச் சிந்தி
உத்தமரின் காதினுக்கே எட்டாத சங்கே
ஒலித்திடுவாய் அநீதிக்குக் காலம் வருமென்றே
சத்திதரும் தமிழன்னைப் புத்திரராய் ஒன்றாய்ச்
சத்தியிலே ஒருமிக்கச் சத்தியத்தை நம்பே

அடிபட்டு உதைபட்டு ஆக்கினைகள் பட்டு
அநியாயநெருப்பிட்டு அகதிகளாய்த் தொட்டு
இடிபட்டு இடமற்று இளைஞர்களை விட்டு
ஏங்குகின்ற தமிழினத்தைக் கேட்பாரற்று
முடியுற்ற முவ்வேந்தர் பரம்பரையைத் தட்டு
முரடர்களின் இதயங்களில் புறப்படுமே குட்டு
விடிவுற்ற ஒளிபடரும் தமிழினத்தின் சக்தி
வெறுங்கையிற் திடமிறுகும் தெயவத்தின் சக்தி

## 75. நத்தார் காண்போம்

காலமெல்லாம் காத்திருந்த மக்கள் எல்லாம்
காவலனாம் மீட்பரையே காண்ப தென்றும்
சீலனெனத் துன்பத்தைத் துடைப்பா ரென்றும்
செத்துவிட்ட சுதந்திரத்தின் உரிமை யோடு
பாலமொன்றால் இணைப்பாரென் றேழை கட்கும்
பயனுள்ள நல்லசெய்தி தருவா ரென்றும்
கோலமுடன் எதிர்பார்க்கக் குகையில் தோன்றி
குடியிருக்கும் இதயத்திற் குடியே கொண்டார்

ஆறுதலும் அமைதியுமே விடுவிப் பாகும்
அடர்துன்பம் மாற்றுகின்ற குணங்க ளாகும்
ஆறுதலைத் தருகின்ற தேற்ற லாகும்
அன்புகொண்ட பண்புகளே வாழ்வு மாகும்
கூறுகின்ற சொல்லல்ல அவர்செ யல்கள்
குறையாத பகிர்ந்து கொள்ளல் நல்ல செய்தி
சிறுவருள்ள மகிழ்வுபெறத் தேவ மைந்தன்
சிந்தனையின் செல்வத்தில் நத்தார் காண்போம்

சொல்லின்ப வார்த்தைகளால் நத்தார் காண்போம்
தூயவுள்ளப் பத்தியினால் நத்தார் காண்போம்
நல்லவராய் நடப்பதினால் நத்தார் காண்போம்
நற்செய்திச் செயலாலே நத்தார் காண்போம்
கல்லுருகக் கனிவுளத்தால் நத்தார் காண்போம்
கடுகளவு தருமத்தால் நத்தார் காண்போம்
இல்லாதோர்க் கன்பளிப்பால் நத்தார் காண்போம்
இந்தவிழா பயன்தரவே நத்தார் காண்போம்

# 76. மாந்தை ஆரோக்ய அன்னை

அலைகடலிற் புயலாலே அல்ல லுற்ற
அடியவனின் வேண்டுதலுக் கிரக்க முற்று
நிலையான ஆலயத்தை எழுப்பு தற்கே
நிலைகொண்ட ஆரோக்ய அன்னை மாதா
அலைதவழும் மாந்தைநகர்க் கோவில் கொண்டு
அன்பர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட
கலையுடுத்த விடிவெள்ளி ஒளியின் தாயார்
காவல்தனைக் கருணையுடன் வேண்டு வோமே

ஆறுதலை அளித்தருளும் தேவன் மாதா
ஆரோக்ய அன்னையெனும் நாமம் பூண்டே
ஆறுதலே பொழிந்தடியோர் இதயக் கோவில்
அமர்ந்தருளி அன்பு கொண்டு மாதோட் டத்தில்
ஆறுதலாய் மாந்தையிலே காட்சி நல்க
அடங்காத ஒல்லாந்தன் அழிக்க எண்ண
ஆறுதலைத் தேடியதோர் பக்தர் கூட்டம்
அன்னையுடன் மடுக்காடு சென்ற தன்றோ!

அன்றிருந்து கருணைமழை பொழிந்து காக்கும்
அன்னைமடுச் செபமாலைத் தாயார் நோக்கும்
அன்றிருந்த தனதிடத்தைத் தேர்ந்து பார்க்கும்
அமைதிதரு மாந்தைநகர் ஆலயத்தை
அன்றிருந்த பொலிவாக எழுப்ப எண்ணும்
அற்புதத்தை உணராத இதய முண்டோ!
இன்றுள்ள பக்தர்களே இரக்கம் கொண்டால்
ஏன்? அன்னை உதவிதனைப் பெறமாட்டாரோ?

மாற்றாரே மனங் கொண்டு தாயார் நோக்க
மனமுள்ளோர் கொஞ்சமேனும் கிள்ளிப் போட்டால்
ஏற்றாத உள்ளமதும் எண்ணிப் பார்க்கும்
இறையன்பு பெருகிடவே மாந்தைத் தாயார்
ஊற்றாக எழுந்தருளி மருத நெய்தல்
ஓங்குசெல்வப் புகழ்பெருக அருளே நல்கித்
தேற்றாரோ? தருமந்தலை காக்கா தாமோ?
செல்வத்தைத் தந்தவரைத் திரும்பிப் பாரே!

திருப்பதியாய் விளங்குகின்ற காலமாச்சே
தேவமரி ஆரோக்ய மாந்தை அன்னை
திருவருளின் அற்புதத்தை அறியா ருண்டோ?
தெய்வமண றோசைமலர் வாசம் வீசும்
அருளுருவ அன்னைமுகம் பார்த்தாலன்றோ!
அலகையுடன் இடர்பிணிகள் அகலு மன்றோ
உருவில்லான் உருவத்தை ஏந்து மன்னை
உருவத்தை நெஞ்சினிலே ஏற்றிப் பாரே

## 77. நாளைய உலகம் நம்பிக்கையில்

சீரிய ஒழுக்கம் பண்பு செயல்வினை சிந்தை நிற்க
நேரிய நெறியை யாய்ந்து நித்திய நிலையைக் காணப்
பாரினர் பக்தி விஞ்சிப் பரம் பொருள் இருக்கு தென்றே
காரியப்பட்டால் நானேன் கடவுளை மறக்க வேண்டும்?

மண்மகள் மானம் காக்க மறைத்திடும் நீலப்பட்டுத்
தெண்டிரைக் கடலின் மீதே தேடிடும் ஓடக் காரர்
வண்மையாய் வாழவென்றே வருநிலை மனதி லுன்னி
எண்ணியே உழைப்பதெல்லாம் இன்பத்தைக் காணுதற்கே

இன்றுளார் இன்பமெல்லாம் எதிர்வரும் நாளைநம்பி
அன்னையின் கன்னிப் பெண்ணை அழகொளிர் மலர்ச்சி கொண்டால்
பொன்வண்டு பூவை நாடல் போலொரு காதல் கொண்டால்
அன்பினை இணைக்குந் தாலி அமுதத்தை யணைக்கும் வேலி

இன்பமாம் பழத்தைக் கண்டே எண்ணியே நன்றைத் தேர்ந்தால்
இன்பமே கொள்வார் நாளை எழில்மிகு கன்னி நல்லோர்
கன்னலும் நெல்லுந் தோன்றும் கழனிபோற் காளை யோரை
தன்னலப் பிடிக் குட்சிக்கத்தறியிலே கட்டப் பார்ப்பார்

காலையிற் விட்டுச் சென்றே கடும்பகல் உழைப்பின் தேட்டம்
மாலையிற் தருவா ரென்றே மங்கிய ஒளியின் மங்கை
சேலையை அணைத்துக் கொண்டே சிந்தனைத்திட்டந் தீட்டி
ஓலையின் கூரைவாயில் ஒடுக்கமாய் நிற்பதேனோ?

கருவினி லுயிர்த்த சேயைக் கருத்துடன் காக்குந் தாயார்
பெரும் புகழ்ச் சான்றோராகப் பெரியவர் நிலையை எய்வார்
வருமகவென்றே நம்பும் மனமெனப் பரீட்சை நோக்கி
இருந்துமே படிப்பார் நாளை இனியவர் உலகம் காண

தென்னையை நடுவோர் பின்னோர் தேடியே பெறுவதற்கே
நன்மையை நோக்கல் போன்றே நல்லவர் தாலி காண்போர்
நன்மகள் வாழ்க்கை கண்டோர் நற்பயிர் விளைவு நோக்கும்
பொன்தரு பூமிகொண்டோர் புகழ்தரு பதவி கொண்டோர்

விண்ணினை அளந்து கண்டு விரிநிலாத் தரையைக் காண் போம்
எண்ணிய மனித விந்தை இறங்கிய பெருமையன்றோ!
கண்ணொளி யிதயம் வேறோ கருத்துடன் பொருத்திக் கண்டார்
மண்ணுளோர் பிறவியெல்லாம் வளர்ச்சியை நோக்கி யன்றோ!

தன்குலந் தளைக்கச் செல்வம் தருமமே தேடி வைப்பார்
என்னையே நம்பிவந்தே இல்லறப் பணிசெய் நல்லாள்
தன்னையும் வாழவைத்துத் தனையரைச் சான்றோராக்கப்
பொன் பொருள் தேடுவானேன்? புகழ்ச்சியை நாடுவாரேன்?

சத்திரசிகிச்சை செய்வோன் தன்பணி மாறுமென்போன்
முத்தியை நினைந்து வாழ்வோன் முழுமுதற் தொழிலில் விட்டோன்
புத்தியைத் தீட்டும் ஞானோன் பூமியை உழுது செய்வோன்
சித்தியைக் காண்போன் நாளை செகம் நம்பிக்கையில் என்றே

தேர்தலில் போட்டி நிற்போர் தேசியசுவீப்பைப் பெற்றோர்
ஓர்மையால் விமான மூர்வோர் ஒன்றினை யாய்ந்து காண்போர்
போர்க்களம் புகுந்து வெல்வோர் புதுமணக் கன்னி கொண்டோர்
சீர் நலம் பெருக வென்றேன் சிந்தனை கொள்ளலாச்சே?

மண்ணுளே கனிபொருள்கள் மண்ணகமாய்ந்தால் மண்ணெய்
எண்ணுதல் கிடைக்கும் போல இடரினைச் சகித்துக்கொள்வார்
எண்ணவர் அறிவு ஞானம் எழுதிட முடியாதன்றோ
உண்டவர் நாளை வாழ்வோம் ஒருவித நம்பிக்கையே

நிலமகள் அமுதகொங்கை நென்மணிப்போராலின்பம்
பலவள செழிப்புக்காணப் பகலென இரவை யாக்கி
புலமெலாம் திருத்திச் செய்தே புதுநலம் காண்போமென்றே
நிலமையிலுயர்ச்சி மேவ நிலாவென வளரு வாரே

உலகினோர் நாளைநம்பி உழைப்பதே யில்லை யாயின்
நிலம் பொருள் நிலமை யாக்கம் நெறிமுறை நீதி ஞானம்
பலம்பெறத் தேடுதற்கே பலதுயர் முயற்சி யேனோ?
நலம் பெற வாழலாமோ? நதியிடை யணைதானேனோ?

பணமிடச் சேமவங்கி பயன்பெறத் தேட்டம் நாளை
மணமகட் பரிச மென்றே மாணவர் படிப்புக் கென்றே
கணமொரு பொழுதும் வீணே கழித்திடா துயர்வு நோக்கி
வணங்கிடா துழைப்பதேனோ? மற்றவர் மதிப்பும் ஏனோ?

இன்றுள சிறுவர் செல்வம் இனிவரும் பெரியோரென்பார்
அன்றவர் மகிழ்ச்சி மேவி அமைதியின் ஆக்கந் தேடி
என்றுமே இனிது வாழ இணையிலா முயற்சி கொண்டார்
நன்றவர் வைத்துப் போக நாமதைக் களிக்கின்றோமே

நாளைய உலகம் நம்பார் நற்குடி தவறி னோராய்
ஆளையே மதியா தோராய் அறவழிதேடா தோராய்
வேளையே வாழ்ந்தால் போதும் வீணாயிருக்கக் கண்டோம்
மூளையே இருந்துமென்ன முயற்சியே வீணாகும் மோ?

கண்டதையுண்டுவிட்டுக் கழிந்திட நினைக்கலாமோ?
பெண்டுகள் பிள்ளையென்று பெருமையாய்க் குடும்பமேனோ?
குண்டுகள் துவக்குமேனோ? கொடிகட்டி ஆள்வதேனோ?
பண்டுள பெருமை பேசி பழந்தமிழ் கற்பதேனோ?

THE PUBLIC LIB
24 MAR 201
BATTICALOA

கற்பென மதித்துக் கன்னி கவனமாய் நடப்பதேனோ
நற்பெயர் பெறுக வென்று நம்பிக்கை ஒழுக்க மேனோ
நிற்பவர் நினைப்ப தேனோ நெறிமுறை ஒழுகலேனோ
அற்பராய் வாழ்ந்து விட்டே அழிந்து நாம் போகலாமோ?

முன்னவர் நாளை வேண்டும் முயன்றதை நம்பிக்கையில்
அன்றவர் தேடாவிட்டால் ஐந்திணை முதலாம் நூல்கள்
இன்றுள்ளார் படிக்கமாட்டார் இன்தமிழ்ப் பெருமை பேசார்
ஒன்றுமே இல்லாதாகி உண்டெனச் சிந்தியாரே

பெண்ணென மதிக்க மாட்டோம் பேயெனத் திரிவோம் காட்டில்
கண்ணெனப் போற்ற மாட்டோம் கருத்தென எழுத்தும் எண்ணும்
விண்ணிலா மிதிக்க மாட்டார் விந்தையே தெரியாவிட்டால்
புண்ணென இரண்டு கண்ணும் புகலுவார் அறிஞ ரில்லை

நாளைய உலகம் நம்பி நாமெலாம் வாழுகின்றோம்
வேளையே உணவு உண்டு வியப்புற ஆய்வு செய்தே
ஆளையே நிலாத்த ரைக்கே அனுப்பியே திருப்பி மீண்டார்
நாளையே மனிதர் சொல்ல நம்பவும் பெருமை கொண்டோம்

பச்சிளங் குழவி யொன்று பல்கலைப் படிப்பின் மேதை
உச்சமே கொள்ளு மென்றே ஒருவருஞ் சொல்ல மாட்டார்
நிச்சயம் நாளை நம்பி நிலையெனக் கல்வி கற்றால்
அச்சமே இன்றிக் காண்பார் அதன்பலன் நம்பிக்கையே

சிந்தனை தரும்விஞ்ஞானத் திறமைகள் யாவும் எண்ணின்
சொந்தமே உரிய தல்லச் சுயநலத் தியாக வாழ்வு
விந்தைகள் கேட்டோம் இன்றே வென்றவர் சென்று விட்டார்
எந்தையோர் பெருமை யென்றால் எதிர்வரு முலகுக் கென்றார்

காட்டையே அழித்து நல்ல கழனியாய் ஆக்கம் கண்டே
வீட்டையே நிலமையாக்கி வீண்விர யந்தானின்றி
நாட்டையே உயர்த்து வேனே நாளை உலகம் வாழத்
தேட்டமே நம்பிக்கையிற் சிந்தையே திரவியந்தான்

# 78. மன்னார் புதிய மறைமாவட்ட முதலாயர் பேரருட் திரு. தொம். சவுந்தரநாயகம் அவர்கட்கு வரவேற்பு வாழ்த்து

வெண்பா

தேடுகின்ற முத்தான தெய்வீக ஞானவொளி
 கூடுகின்ற மெய்ஞ்ஞானக் கோமகனே-நாடுகின்ற
தங்கமன ஆயர் சவுந்தர நாயகமே
 மங்கலமே பொங்குமருண் மாண்பு

நிலமண்டல ஆசிரியப்பா

எழுந்தருண்மின் எழுந்தருண்மின் எம்மாயர் எழுந்தருண்மின்
 எழுந்துவர வேண்டுமென இதயமலர் தூவுகின்றோம்
வாழ்கவென வாழ்த்துகிறோம் வாயாரப் போற்றிகிறோம்
 தாழ்மையுடன் வணங்குகிறோம் சான்றோனை வருகவென
ஆலயத்து மணியொலிக்க அதிர்வெடிகள் தொனியெழுப்ப
 மேளஒலி வீணையிசை மெருகெடுத்துப் புகழிசைக்க
ஆதிபிதா நேசமகன் அன்புயிரின் இறைதளைக்க
 சோதியருட் தங்கியுறை தூயதிருச் சபை விளங்க
நீதியுயர் அமைதி நிறை நித்திய மெய் ஞானமறை
 வேதியர்கள் ராசகுரு வேந்தனிறைப் பாப்பரசர்
கத்துகடல் றோமைநகர்க் கல்விவளர் வத்திக்கான்
 எத்திசையும் சீர்சிறக்கும் இரண்டாவ தருளப்பர்
சின்னப்பர் திருத்தந்தை திருச் சுருதி வழுவாது
 சொன்ன மொழித் திருமுகத்தின் திருமடலின் அருளாணை
நன்னலமாய் யாழ்நகரின் நல்லாயர் தீ யோகுப்
 பிள்ளையவர் ஆண்டகையிற் பிறந்ததுவாம் நற்செய்தி
சொந்தமந்தை மேய்ப்பாயன் சொல்லி வைத்தார் இறைசித்தம்
 வந்தனையின் வழிபாட்டு வந்திக்கத் தக்கவராம்

பால்வதனப் பாலியரின் பண்புளத்தைக் கொண்டவராம்
ஆல்தளைத்த உறுதிமிகும் ஆளுகையின் நேர்மையராம்
வெண்முத்த நெஞ்சினராம் வெற்றி நெறிச் சீரமைப்பாம்
கண்விழியோ ஞானவொளி கடுகடுப்பு மற்றவராம்
தேவ அருள் பொழிந்தமனந் திருப்பரத்தின் வித்தகராம்
விவிலியத்தின் கலாநிதியாம் விளங்குமைசூர் அறிவொளியாம்
ஆழிமுத்து வலம்புரியாம் ஐயமில்லாப் பொன்மணியாம்
ஏழைமனத் தேவடிவம் எழுந்த நல்லூர் காவற்துறை
இம்மனுவேல் தோமசுக்கும் ஏந்திளையார் சவிரியாச்சி
தம்மின்பப் புத்திரனாய் சற்குணமாய்த் தோற்றியவர்
திருமுழுக்குங் கல்வியதும் சிந்தனையும் பிறப்பிடமாம்
குருமடமாம் மாட்டீனார் குருகுலத்தைச் சென்றடைந்த
சென்பற்றிக் கல்லூரி சிறப்புயர்வு மாணவரும்
கண்டியின் கண் மறைக்கல்விக் கலைபயின்று திருநிலையைக்
காலத்துள் மறைந்தவராம் கற்றறிந்த நல்லாயர்
சீலமிகும் எமிலியானுஸ் பிள்ளையவர் தோற்றுவித்தார்
பெரியகோவில் யாழ்ப்பாணம் பெரியவிளான் நாநாட்டான்
உரிமையுடன் வங்காலை உயர்பங்கிற் பணிபுரிந்து
கல்வியிலே டிப்ளோமாக் கரைகண்ட மேதையவர்
நல்லாசான் இயக்குநராம் நல்லபெயர் பெற்றவராம்
மடுத்தாயார் திருப்பதியில் மாமகுட அபிஷேகம்
நடுநிலமை முதலாயர் நற்றமிழின் சிறுஆயர்
மாட்சியுயர் மன்னார் மறை மாவட்டப் புது ஆயர்
ஆட்சியிலே பொறுப்பேற்ற அருட் கோலக் காட்சியிலே
ஆனந்த மாட்சியிலே அகமகிழ்ந்து போற்றுகிறோம்
மானபரன் சான்றுபகர் மண்ணினிலே புனிதராகப்
பொறை நிரம்பு திருப்பார்வை பொங்குமருட் திருக்கருணை
நிறைகதிர்போல் நீர்க்குடமும் நிறைந்தவண்டுப் பூரணமாம்
கத்தனருட் சித்தமதால் காப்பாற்றி வைத்திருக்கச்
சுத்தமுடன் வேண்டுகிறோம் சோபனமே வாழியவே

வவுனியா 02.08.81

## 79. இன்பங் கலந்த நிறைவாண்டே

வண்ண வடிவ இயற்கையிலே
வளரும் இளைஞர் நிலையினிலே
கண்ணுங் கருத்தும் புரட்சியிலே
காணும் உலக மயக்கினிலே
விண்ணும் மண்ணும் தொடுவான்
விவேக மலர்ச்சி நெஞ்சினிலே
எண்ணக் கருக்கள் நிறைவாக
இனிய உலகைப் படைத்திடுவீர்

அஞ்சா நெஞ்சப் பக்தியிலே
அன்பும் பண்பும் மிளிர்ந்திடுமே
வஞ்ச மனத்தை வெறுத்திடவே
வளரும் தமிழர் அறிவினிலே
மிஞ்சுஞ் சேவை பெரிதன்றே
வெகுவாய் மதிப்பார் வருமிளைஞர்
கொஞ்சக் கால வாழ்க்கையிலே
குறிப்பா யுழைப்பீர் மன்றினிலே

நன்றே செய்தாற் பலனுண்டே
நல்ல செயலை மதித்திடுவார்
ஒன்றே தெய்வம் ஒரு குலமே
உணர்ந்த அன்பே நிறை மனிதன்
என்றோ ஒருநாட் புகழ்வருமே
இறைவன் பணியில் இறங்கிடுமே
இன்றே இளைஞர் ஓராண்டே
இன்பங் கலந்த நிறைவாண்டே

# 80. சுண்டிக்குழி வி. கபிரியேல் புலவர் இயற்கை எய்தியபோது பாடிய கையறுநிலை

வெண்பா

மக்கள் புலம்ப மனைவிசுற்றம் ஏங்கியழ
தக்கோர் தயவோர் சலிப்புறவே - மிக்ககலை
நாமகளே நெஞ்சுருக நாவலனார் காபிரியேல்
பாமகனார் துஞ்சியதைப்பார்

- சரமகவிவிருத்தங்கள் - விருத்தப்பா

''ஆதியி லிறைவ னருளிய மொழியே
அனைவரும் காத்திடச் சுதனே
அவதரித் தாயி ரத்தொடு தொளாயி
ரத்தெழு பத்தறு மாண்டில்
சோதியி னுதயம் சுடர்முதல் நாளே
துலங்குவைப் பசிபூ ராடம்
துளிரொளி பரவுந் தூமணி யாருந்
துய்யவன் நிறைதின வெள்ளி
மாதிரம் புகழும் மகத்துவகுலத்தோன்
மாபிணி தீர்த்தருள் பிடகன்
மாதவப் புதல்வன் மகிமைகொள் விறாசு
மைந்தனாங் கபிரிகேல் மொத்தம்
சாதிகள் கணிக்குங் குருகுல வேந்தன்
தகுமறு பத்தெழு வயதில்
தயவுயர் சுண்டிக் குளிநகர் வாசன்
தகுமுல கெய்திய நாளே''
பாமணிப் புலவன் பண்டித கவிஞன்
பலர்புகழ் நாவலர்திலகன்
பால்வளை களிறு பரிமள கண்டற்
பார்த்திப குருகுல மரபோன்

கோமணி மார்பன் குலவுவி றாசு
குலாவிய சமரணி விறலோன்
குடியினர் பதினெட் டுடைவிருதுடையோர்
கொண்டலின் கரநல மிகுந்தோன்
மாமணி சாலி மங்கல சுண்டிக்
குளநகர்ப் பெருமையுன் புலவன்
மக்களின் நேசன் தக்கவர் பாசன்
மதித்திடுங் கபிரிகேல் மொத்தம்
நாமகள் கதற நானிலம் மறந்து
நல்லுலகமுதென நினைத்து
நண்ணிய முதியொன் நற்கதி காண
நயப்புறத் துஞ்சினன் வாழ்வே
குருகுலமுடியோன் குணநல கவிஞன்
குடிபதி னெண்விரு துற்றோன்
குவலயம் புகழும் கொடுமுடிப்புகழோன்
குலவுகண்டல்மலர் மாலை
பெருமையிலணிந்த பீடுவெண் களிறு
பிறங்குசங் குருந்தியாவட்டம்
பிறியமா யணிந்த விறாசுவின் மைந்தன்
பேர்புகழ் கபிரிகேல் மொத்தம்
அருளிய பதிகம் ஆயிரத் தடங்கும்
அருளூறும் நாடக மதிகம்
அருளிய கரமும் அமுதிசை நாவும்
அமைத்தவன் திருப்பதி வாழத்
திருவுளம் நிறைந்த செல்வமே புலவா!
செழுமொழி வளப்பமோ கொண்டு
தேவரின் விருந்திற் பந்தியிலமரச்
சென்றிடத் துஞ்சிய வாழ்வோ''

பண்டிதர் சலிக்கப் பலருள்ளங் கெலிக்கப்
பக்தனா யுலகினிற் சிறந்து
பலனுற அருளிப் பகைவருமுருகப்
பாவலன் நாவல னாகிக்
கண்டவர் வணங்கக் கணித்திடத் தகமை
கற்றவர் நத்திய பெரியோய்
கமழுறு கண்டற் தாரணி மார்பன்
கருதிய மகரிகை விருதோன்
மண்டலத் தறிஞர் மதித்திடச் சுண்டிக்
குளிநகர் புகழிட விருந்தே
மதித்திடும் முதல்நாள் ஐப்பசி மாதம்
வைகறை விடிவுறும் வேளை
விண்டவர் மதிக்க விமலனை நினைந்து
வித்தகன் வாழ்ந்ததும் போதும்
எனவுள மிருத்தி அறுபதி ணேழில்
அமரருட் துஞ்சினன் வாழ்வே
''புத்தியிற் சிறந்த சித்தனே யுந்தன்
புகழினை யுரைத்திட நாவோ
புலமையிற் சிறந்து நலம்பல புரிந்து
பொருந்திய வயதையு மறிந்து
பத்தனை நினைத்து பரிவுடனுரைந்துப்
பலசிறப் புறக் கவிபுனைந்து
பலருமே அறியச்செய்திடும் மொழியைப்
பகர்ந்தவுன் நாமக ளறிந்தேன்
எத்திசை விளங்க இனியவன் விறாசு
ஈன்றருட் தவப்பயனை
இசைபுகழ் கவிஞர் இன்தமிழ் நாவோன்
இயல்புறும் கபிரிகேல் மொத்தம்

அத்தனைத்துதிக்க அறுபத்தேழினில்
ஆண்டவர் சமுகமே சேர
அன்பனாயொழுகி யனைவருங் கணிக்க
அறிவுடன் துஞ்சிய வாழ்வே''

தேவாரம்

கண்டற் றொடையான் குருகுலத்தான்
கருது மகரத் துவசத்தான்
பண்டோர் பெருமைப் பெருங்கவிஞன்
பண்பின் குலத்தில் வந்துதித்தோன்
அண்டர் விருந்தோன் கபிரிகேலான்
அணையா விளக்கின் ஒளிச்சுடரோன்
கண்டோர் கலங்கச் சென்றவனே
களிப்பாய் அமர வாழ்வகத்தே''

THE PUBLIC LIBRARY
24 MAR 2012
BATTICALOA.



பதிப்பாசிரியர் திரு.மு. சுந்தரம் பாண்டியன்

மன்னார் நறுவிலிக்குளம் கிராமத்தில் பிறந்தவர் ஆரம்பக்கல்வியை மன்/நறுவிலிக்குளம் அ.தக. பாடசாலையிலும் இடைநிலை, உயர்தரக் கல்வியை மன்/வங்காலை புனித ஆனாள் ம.ம வித்தியாலயத்திலும் கற்று கொழும்பு பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியில் சிறப்பு பட்டம் பெற்றவர்

சிந்தனைக்குரிய கட்டுரைகளை பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதிவருபவர் சிறப்புப்பட்டத் தேர்வுக்கு மன்னார் மாதோட்ட இலக்கியவளம் என்னும் ஆய்வுக் கட்டுரையைச் சமர்பித்தவர் யாழ். பல்கலைக் கழகத்தில் முதுதத்துவ மாணிப்பட்டத்திற்காக இலக்கிய நோக்கில் மன்னார் மாதோட்ட கிறிஸ்தவ நாடகங்கள் என்னும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டுள்ளார் இலங்கைத் தமிழ் அறிஞர்களின் தமிழ்பணிகள் என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

பேராசிரியர். இ. பாலசுந்தரம்

ISBN 978-955-0682-00-3

St. Joseph's Catholic Press, Batticaloa